www.padippakam.com

எஸ். ஏ. ஸெர்ஹாயெவ்

# வி. இ. லெனின் எழுதிய "கூட்டுறவு குறித்து"

முன்னேற்றப் பதிப்பகம்





படிப்பகம்

www.padippakam.com

எஸ். ஏ. ஸெராயெவ்

# வி. இ. லெனின் எழுதிய "கூட்டுறவு குறித்து"

முன்னேற்றப் பதிப்பகம்
மாஸ்கோ

விற்பனையாளர்கள்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்
பிரைவேட் லிமிடெட்
சென்னை

படிப்பகம்

www.padippakam.com

மொழிபெயர்ப்பாளர்: நா. தர்மராஜன் எம்.ஏ.

**С. А. Сераев**

РАБОТА В. И. ЛЕНИНА "О КООПЕРАЦИИ"

*на тамильском языке*

**S. Serayev**

LENIN'S "ON CO-OPERATION"

*in Tamil*

© Progress Publishers, 1984

© தமிழ் மொழிபெயர்ப்பு
முன்னேற்றப் பதிப்பகம், *1987*

சோவியத் நாட்டில் அச்சிடப்பட்டது

C $\frac{0102020000-170}{014(01)-87}$ 319-87

பொருளடக்கம்

முன்னுரை . . . . . . . . . . . *5*

கூட்டுறவு — விவசாயிகளின் புதிய வாழ்க்கைப் பாதை . . . . *21*

உற்பத்தி அல்லாத கூட்டுறவுகளின் ஆக எளிமையான வடிவங்கள் . . . . . . . . . *54*

சோவியத் யூனியனில் விவசாய உற்பத்திக் கூட்டுறவுகள் . . *89*

லெனினுடைய கூட்டுறவுத் திட்டத்தின் சர்வதேச முக்கியத்துவம் . . . . . . . . . *118*

படிப்பகம்

www.padippakam.com

# முன்னுரை

1917ம் ஆண்டில் விளதீமிர் லெனினின் தலைமையிலான போல்ஷிவிக் கட்சியின் வழிகாட்டுதலில் ருஷ்யாவின் தொழிலாளி வர்க்கம் ஏழை விவசாயிகளின் ஒத்துழைப்புடன் மாபெரும் அக்டோபர் சோஷலிஸ்ட் புரட்சியை நிறைவேற்றியது; அப்புரட்சி மனித குலத்தின் வரலாற்றில் புதிய சகாப்தத்தைத் துவக்கியது. புரட்சியின் வெற்றி உள்நாட்டில் தூக்கியெறியப்பட்ட சுரண்டும் வர்க்கம் மற்றும் உலக ஏகாதிபத்தியத்தின் கடும் எதிர்ப்பைத் தூண்டியது. ஏகாதிபத்தியவாதிகள் ருஷ்யாவில் முதலாளித்துவத்தை மறுபடியும் நிலைநாட்டுவதற்கும் பலவீனமடைந்து, இன்னும் யுத்தத்தை நடத்திக் கொண்டிருந்த அந்த நாடு அரசியல் ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் தங்களை முழுமையாகச் சார்ந்திருக்கும்படி செய்வதற்கும் பாடுபட்டார்கள். அந்தக் கட்டத்தில் இராணுவ வழிகள் உட்பட சாத்தியமான எல்லா வழிகளையும் உபயோகித்து சுரண்டல்காரர்களின் எதிர்ப்பை நசுக்குவது சோவியத் ஆட்சியதிகாரத்தின் முக்கியமான கடமையாக

படிப்பகம்

www.padippakam.com

இருந்தது. சோவியத் குடியரசு தன்னுடைய முழு பலத்தையும் திரட்டி தன்னையும் தன்னுடைய புரட்சிகர சாதனைகளையும் தற் காத்துக் கொள்வதில் வெற்றியடைந்தது.

1920இல் சர்வதேச ஏகாதிபத்தியம் மற்றும் உள்நாட்டு எதிர்ப்புரட்சியின் கூட்டுச் சக்தி களை முறியடித்த பிறகு இளம் சோவியத் குடியரசு சோஷலிஸ்ட் சமூகத்தை நிர் மாணிக்கத் தொடங்கியது. வரலாற்றில் முதல் முறையாகத் தொழிலாளர்களும் விவசாயி களும் ஒரு புதிய சமூகத்தின் அரசியல் மற்றும் பொருளாதார அமைப்பை உருவாக்குவதிலும் அதை நடைமுறையில் சோதிப்பதிலும் ஈடு பட்டிருந்தார்கள். சோவியத் ஆட்சியதிகாரம் தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகளின் ஜீவாதார நலன்களை வெளியிடுகிறது, அவற்றை உறுதியாகப் பாதுகாக்கிறது என்பதையும் அவர்களுடைய முழு ஆதரவையும் நம்பிக் கையையும் பெற்றிருக்கிறது என்பதையும் கடந்த காலத்தில் அது நிரூபித்திருக்கிறது.

புதிய சமூகத்தை நிர்மாணிக்கத் தொடங்கு கின்ற பொழுது உலகத்தின் முதல் சோஷ லிஸ்ட் அரசின் உழைக்கும் மக்கள் உள்நாட் டிலும் வெளிநாட்டிலும் மாபெரும் கஷ்டங் களைச் சந்தித்தார்கள். முதல் உலக யுத்தம் (1914 – 1918), ருஷ்யா மீது அந்நிய நாட்டுப் படைகளின் படையெடுப்பு மற்றும் உள்நாட்டி லிருந்த எதிர்ப்புரட்சி நாட்டுப் பொருளாதாரத் தைத் தீவிரமாக சீர்குலைத்திருந்தன. 1913ம் வருடத்துடன் ஒப்பிடுகின்ற பொழுது 1921ம்



ஆண்டின் தொடக்கத்தில் கனரகத் தொழில் துறை உற்பத்தி ஐந்து மடங்கு குறைந்திருந் தது, பருத்தி மற்றும் சர்க்கரை உற்பத்தி முறையே இருபது மற்றும் பன்னிரண்டு மடங்கு குறைந்திருந்தது. போக்குவரத்து மற்றும் பொருளாதாரத்தின் இதர துறைகளும் சீர் குலைந்திருந்தன. விவசாயம் அழிவடைந்து, விவசாய உற்பத்தி யுத்தத்துக்கு முன்பிருந்ததில் மூன்றில் இரண்டு மடங்காக இருந்தது. நாட்டில் ரொட்டி மற்றும் இதர பல உணவுப் பொருள்களும் அத்தியாவசியமான பொருள் களும் பற்றாக்குறையாக இருந்தன. பொரு ளாதாரச் சீர்குலைவின் தாக்கத்தில் தொழி லாளி வர்க்கம் சிதறிப் போய்க் கொண்டும் ஓரளவுக்கு வர்க்கத் தன்மையை இழந்து கொண்டுமிருந்தது; இதனால் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் சமூக அடிப்படை பலவீனமடைகின்ற அபாயம் ஏற்பட்டிருந்தது.

அந்த சமயத்தில் நாட்டின் பொருளா தாரத்தில் வெவ்வேறு சமூக-பொருளாதாரக் கட்டமைப்புகளுடன் பொருந்துகின்ற ஐந்து தனித் துறைகள் இருந்தன: (1) சோஷலிஸ்ட் துறை; நாட்டுடைமையாக்கப்பட்ட, அரசுக்குச் சொந்தமான தொழில்துறை, வர்த்தகம், போக்குவரத்து, வங்கிகள், கூட்டுறவு ஸ்தாப னங்கள் மற்றும் கிராமங்களில் முதல் சோஷ லிஸ்ட் பொருளாதார அமைப்புகள் (அரசுப் பண்ணைகள்) இதில் அடங்கும்; (2) சிறு அளவான பண்ட உற்பத்தி; சொந்த உழைப் பைப் பயன்படுத்திக் கொண்டு சந்தையுடன்



படிப்பகம்

www.padippakam.com

இணைக்கப்பட்ட பெரும்பாலான விவசாயி களும் மற்றவர்களை வேலைக்கு வைத்துக் கொள்ளாத கைவினைஞர்களும் இதில் அடங்கு வர்; (3) தனியார் முதலாளித்துவத் துறை; கூலியுழைப்பைப் பயன்படுத்துகின்ற குலாக்கு கள், சிறு தொழில் நிறுவனங்களின் உடை மையாளர்கள் மற்றும் தனியாக வியாபாரம் செய்தவர்கள் இதில் அடங்குவர்; (4) தந்தை வழித் துறை; பிரதானமாக விவசாயிகளின் இயற்கைப் பொருளாதாரம் இதில் அடங்கும்; (5) அரசு முதலாளித்துவத் துறை; அரசி லிருந்து முதலாளிகள் குத்தகை முறையில் எடுத்து நடத்துகின்ற தொழில்கள் இதில் அடங்கும். மேற்கூறிய ஐந்து துறைகளில் சிறு அளவு பண்ட உற்பத்தி, தனியார் முத லாளித்துவத் துறை, சோஷலிஸ்ட் துறை முக்கிய செயலாற்றின. அந்தக் காலத்திலேயே சோஷலிஸ்ட் துறை தலைமையான பாத் திரத்தை வகித்தது. ஏனென்றால் பெருந் தொழில் துறை, பொதுவுடைமையாக்கப்பட்ட நிலம், போக்குவரத்து, நிதிகள், அந்நிய வர்த்தகம், தகவல் தொடர்பு சாதனங்களின் மீதான அரசு நிர்வாகத்தினால் தேசிய பொருளாதாரத்தில் தலைமையான நிலை அதற்கு ஏற்பட்டிருந்தது. எனினும் சிறு அளவு பண்ட உற்பத்திதான் ஆதிக்கம் செலுத்தியது. தந்தைவழித் துறை மற்றும் அரசு முதலாளித் துவத் துறை நாட்டின் பொருளாதாரத்தில் பெரிய அளவில் பங்கு வகிக்கவில்லை.

சோவியத் சமூகத்தின் வர்க்க அமைப்பு



மேற்கூறிய ஐந்து கட்டமைப்புகளுடன் பொ ருந்தியிருந்தது: தொழிலாளர்களும் விவசாயி களும் பெரும்பான்மையாக இருந்தார்கள், உடைமை பறிமுதல் செய்யப்பட்ட சுரண்டும் வர்க்கத்தினர் (முன்னர் நிலப்பிரபுக்களாக, முதலாளிகளாக, தனியார் வியாபாரிகளாக, குலாக்குகளாக இருந்தவர்கள்) மிகச் சொற் பமான சிறுபான்மையினராக இருந்தார்கள்.

அந்த சமயத்தில் நாட்டுப் பொருளாதாரம் சோஷலிஸ்டுப் பொருளாதாரமாக இருக்க வில்லை, மொத்தத்தில் மாறுநிலைக் கட்டமாக இருந்தது, ஏனென்றால் அதில் முதலாளித் துவம், சோஷலிசம் ஆகிய இரண்டிலும் உள்ளுறையாக உள்ள கூறுகள் இருந்தன என்று லெனின் சுட்டிக்காட்டினார். நாட்டின் பல அடுக்குப் பொருளாதாரத்தை சோஷ லிஸ்ட் பொருளாதாரமாகப் படிப்படியாக மாற்றியமைக்க வேண்டிய கடமை முன் நின்றது. நாட்டில் சக்திகளின் பொருளாதார மற்றும் அரசியல் சமநிலை புதிய பொருளா தாரக் கொள்கையை, குறிப்பாக, எங்கும் நிறைந்திருந்த சிறு அளவு பண்ட உற்பத்தி விஷயத்தில் கோரியது. விவசாயத்தைத் தவிர பொருளாதாரத்தின் மற்ற துறைகளில் ஒப்பீட் டளவில் சுலபமாக சோஷலிசம் அமுலாக்கப் பட்டிருந்தது: தொழில்துறை மற்றும் போக்கு வரத்தில் அடிப்படையான உற்பத்திச் சாதனங் களிலும் நிலம், சுரங்கங்கள், காடுகள் மற்றும் நீர்ப்பரப்புகளிலும் தனியுடைமை ஒழிக்கப்பட் டது; இவை எல்லாம் பாட்டாளி வர்க்க



படிப்பகம்

www.padippakam.com

அரசினால் பிரதிநிதித்துவம் செய்யப்பட்ட சமூகத்தின் உடைமையாக்கப்பட்டன. பெரிய முதலாளிகள் மற்றும் நிலக்கிழார்களிடமிருந்து எல்லா உற்பத்திச் சாதனங்களும் பறிமுதல் செய்யப்பட்டன. எனினும் விவசாயத் துறையில் 2 கோடிகளுக்கும் அதிகமான தனிப்பட்ட சிறு விவசாய நிலவுடைமைகள் இருந்தன. புரட்சிக்கு முன்பிருந்ததைக் காட்டிலும் பாட்டாளி வர்க்கப் புரட்சி வெற்றியடைந்து அந்நியத் தலையீட்டாளர்கள் மற்றும் உள் நாட்டு எதிர்ப்புரட்சிக்காரர்கள் முறியடிக்கப்பட்ட பிறகு இந்த எண்ணிக்கை கணிசமாக அதிகரித்திருந்தது. நிலக்கிழார்களிடமிருந்து நிலம் பறிக்கப்பட்டு விவசாயிகளுக்குக் கொடுக்கப்பட்டிருந்தது; இதன் விளைவாகத் தனிப்பட்ட விவசாய நிலவுடைமைகளின் எண்ணிக்கை திடீரென்று அதிகரித்துவிட்டது. விவசாயிகளை சோஷலிச நிர்மாணப் பணியில் ஈடுபடுத்துவதில் கஷ்டங்கள் இருந்தன; உதாரணமாக, விவசாயப் பொருளாதாரத்தின் சமூகத் தன்மையின் காரணத்தால் ''சிறுவீதப் பொருளுற்பத்தி முதலாளித்துவத்தையும் முதலாளி வர்க்கத்தையும் இடையறாது நாள் தோறும் மணிதோறும், தன்னியல்பாகவும் பெருவீத அளவிலும் **தோற்றுவிக்கிறது**''*

* வி. இ. லெனின், ''இடதுசாரி'' கம்யூனிசம் — இளம் பருவக் கோளாறு. — வி. இ. லெனின், தேர்வு நூல்கள், பன்னிரண்டு தொகுதிகளில், தொகுதி 10, மாஸ்கோ, முன்னேற்றப் பதிப்பகம், 1981, பக்கம் 188.



என்று லெனின் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

1918 — 1920ம் வருடங்களில் நடைபெற்ற பொருளாதாரக் குழப்பம் மற்றும் உள்நாட்டு யுத்தத்தின் போது சோவியத் அரசு பின்பற்றிய, பொருளாதாரக் கொள்கையான ''யுத்த காலக் கம்யூனிசத்தைப்'' பற்றி (இது நாட்டின் எல்லாச் செல்வ வளங்களையும் பாதுகாப்புக்குத் திரட்டுவதை நோக்கமாக கொண்டிருந்தது) விவசாயிகள் அதிருப்தியுற்றதனால் ஏற்பட்ட அரசியல் நெருக்கடி பொருளாதார மற்றும் சமூக இன்னல்களுடன் பின்னிப் பிணைந்திருந்தது. 'யுத்த காலக் கம்யூனிசக்' கொள்கையில் பின்வரும் முக்கியமான அம்சங்கள் இருந்தன: எல்லா பெரிய, நடுத்தரத் தொழில்களையும் சிறு அளவுத் தொழில்களில் மிக அதிகமானவற்றையும் நாட்டுடைமையாக்குதல்; தொழில் துறை உற்பத்தி மற்றும் வினியோகத்தின் நிர்வாகத்தை உச்ச அளவுக்கு மத்தியப்படுத்துதல்; தனியார் வர்த்தகத்தை முற்றிலும் தடை செய்தல்; நாட்டில் கட்டாய உழைப்பையும் கூலியைச் சமப்படுத்துவதையும் அமுலாக்குதல்; உபரி தானிய சுவீகரிப்பு முறையின் படியான உபரி உணவுப் பொருள் முழுவதையும் விவசாயிகளிடமிருந்து வாங்குதல்.

உள்நாட்டு யுத்தத்தின் போது அந்நியத் தலையீட்டுக் காரர்களையும் உள் நாட்டு எதிர்ப்புரட்சிக்காரர்களையும் முறியடிப்பதற்காக, அக்டோபர் புரட்சியின் சாதனைகளைப் பாதுகாப்பதற்காகத் தொழி



படிப்பகம்

www.padippakam.com

லாளர்களுடன் விவசாயிகள் ஓர் இராணுவ அரசியல் கூட்டணியில் ஒன்று சேர்ந்திருந் தார்கள். அவர்கள் பொருளாதார உறவு களின் மேற்கூறிய வடிவத்தையும் தம்முடைய உபரி தானியத்தை அரசு எடுத்துக்கொண்ட கொள்முதல் முறையையும் எதிர்க்கவில்லை. ஆனால் உள்நாட்டு யுத்தம் முடிவடைந்தவுடன் இந்த முறையை ஒழிக்க வேண்டுமென்று விவசாயிகள் கோரினார்கள். ஏனென்றால் சாகுபடி நிலத்தை விஸ்தரிப்பதிலும் விளைச் சலை அதிகப்படுத்துவதிலும் தாங்கள் அக்கறை கொள்வதை இம்முறை தடுக்கிறது என்று அவர்கள் கூறினார்கள். மேலும் சிறு அளவில் நடைபெறுகின்ற பண்ட உற்பத்திக்கு சந் தையும் விற்பனைச் சுதந்திரமும் அவசியம்; ஆனால் விவசாயிகள் தம்முடைய உற்பத்திப் பொருள்களை விருப்பம் போல விற்பனை செய்கின்ற உரிமையை ‘‘யுத்தகாலக் கம்யூ னிசக்’’ கொள்கை அனுமதிக்கவில்லை.

உடைமை பறிக்கப்பட்ட சோஷலிஸ்ட் எதிர்ப்பு சக்திகள், அதாவது நிலப்பிரபுக்களும் முதலாளிகளும், புரட்சியின் போது முறியடிக் கப்பட்ட பூர்ஷ்வா மற்றும் குட்டி பூர்ஷ்வா கட்சி களைச் சேர்ந்த காடேட்டுகளும் மென்ஷிவிக்கு களும் சோஷலிஸ்ட்-புரட்சியாளர்களும் விவ சாயிகளிடம் ஏற்பட்டிருந்த அதிருப்தியைப் பயன்படுத்திக் கொண்டு நாட்டின் சில பிர தேசங்களில் சோவியத் எதிர்ப்பு குலாக் கலகங்களைத் தூண்டிவிட்டார்கள்; இவற்றில் நடுத்தர விவசாயிகளில் ஒரு பகுதியினரும் கலந்து கொண்டார்கள். இது தொழிலாளி வர்க்கம் மற்றும் விவசாயிகளின் கூட்டணிக்குத் தீவிரமான ஆபத்தை ஏற்படுத்தியது.

எனவே சோஷலிஸ்ட் தொழில்துறைக்கும் சிறு அளவு விவசாயத்துக்கும் இடையில் பொருளாதார அடிப்படையில் சரியான உறவுகளை அமைப்பது அவசியமாயிற்று. ருஷ்யாவில் புதிய சமூக நிர்மாணத்தின் கதி சோவியத் சமூகத்தின் முக்கியமான வர்க்கங்களுக்கு, அதாவது தொழிலாளி வர்க்கத்துக்கும் உழைக்கின்ற விவசாயிகளுக்கும் இடையில் சரியான உறவுகள் அமைக்கப்படு வதை நம்பியிருந்தது. ஏனென்றால் புதிதாக நிர்மாணிக்கப்படுகின்ற சோஷலிசத்துக்கும் தூக் கியெறியப்பட்ட, ஆனால் இன்னும் ஒழிக்கப் படாத, சிறு அளவு பண்ட உற்பத்தியை அடிப்படையாகக் கொண்டு உயிரோடிருந்த முதலாளித்துவத்துக்கும் இடையில் போராட் டம் முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத் துக்கு மாறுகின்ற கட்டத்தின் சாராம்சமாக இருந்தது. உள்நாட்டு யுத்தம் மற்றும் அந்நிய இராணுவத் தலையீடு நடைபெற்ற காலத் திலிருந்த தொழிலாளர்கள் மற்றும் விவசாயி களின் இராணுவ அரசியல் கூட்டணி இந்த உறவுகளுக்கு இனியும் உத்தரவாதமல்ல.

1921இல் புதிய பொருளாதாரக் கொள் கைக்கு (NEP) மாறுவதன் மூலம் இக்கடமை நிறைவேற்றப்பட்டது. இக்கொள்கை பொரு ளாதார நிர்வாகத்தில் ஒரு மாற்றத்தைக் குறித்தது. அரசு பெரிய மற்றும் நடுத்தரத்



படிப்பகம்

www.padippakam.com

தொழில்களைத் தன்னிடம் வைத்துக் கொண்டது, சிறு தொழில் நிறுவனங்கள் கூட்டுறவுகளுக்கும் தனிப்பட்ட நபர்களுக்கும் குத்தகைக்கு விடப்பட்டன. தொழில் நிறுவனங்கள் மூலப்பொருள்கள் மற்றும் எரிபொருளை வாங்குவதிலும் உற்பத்திப் பொருள்களை விற்பனை செய்வதிலும் ஓரளவு சுதந்திரம் பெற்றன; அதே சமயத்தில் பொருளாதார சுய கணக்கீட்டு முறையின் சில கோட்பாடுகள் அறிமுகப்படுத்தப்பட்டன; பணச் செலாவணி முறை மறுபடியும் ஏற்படுத்தப்பட்டது. தொழிலாளர்கள் தம்முடைய திறமை மற்றும் உற்பத்தித் திறனைப் பெருக்குவதில் அக்கறையைத் தூண்டுவதற்காக கூலி முறை திருத்தியமைக்கப்பட்டது. கூலியைச் சமப்படுத்துதலுக்குப் பதிலாக வேலையின் அளவுக்கும் தரத்துக்கும் ஏற்ற கூலி கொடுக்கின்ற சோஷலிஸ்ட் கொள்கை பின்பற்றப்பட்டது.

விவசாயிகளின் உபரி உற்பத்தியை அரசாங்கம் எடுத்துக் கொள்கின்ற முறைக்குப் பதிலாக, பண்ட வடிவிலான வரியைக் கட்டுகின்ற முறையை விவசாயிகள் விரும்பினார்கள். புதிய பொருளாதாரக் கொள்கை இவ்விருப்பத்தைப் பூர்த்தி செய்தது என்பதில் விவசாய வர்க்கத்தைப் பொறுத்தமட்டில் அதன் சாராம்சம் அடங்கியிருக்கிறது. வரி குறைக்கப்பட்டதும் அதைப் பண்டங்களைக் கொண்டு கட்டிய பிறகு உபரி விவசாயப் பொருள்களை சுதந்திரமாக உபயோகிக்கின்ற சாத்தியமும் விவசாய உற்பத்தியைப் பெருக்க



வேண்டும், ஆகவே நாட்டு மக்களுக்கு உணவுப் பொருள்கள் மற்றும் தொழில்துறைக்கு மூலப் பொருள்களின் உற்பத்தியை அதிகப்படுத்த வேண்டும் என்னும் அக்கறையை விவசாயிகளிடம் தூண்டியது.

விவசாயிகளால் மிகவும் புரிந்து கொள்ளப்படக் கூடிய, அவர்களுக்கு மிகவும் நெருக்கமான முறைகள் மற்றும் சாதனங்கள் மூலம் உழைக்கும் விவசாயிகளை சோஷலிஸ்ட் நிர்மாணத்தில் ஈடுபடுத்துவது புதிய பொருளாதாரக் கொள்கையின் நோக்கமாகும். ''சிறு விவசாயி சிறிய நிலையில் இருக்கும் வரை அவரது பொருளாதார அடித்தளத்துக்கு, அதாவது தனிப்பட்ட சிறு பண்ணைக்கு இசைவான முறையில் அவருக்கு ஒரு தூண்டுதல், ஓர் ஊக்குவிப்பு தேவை.'' * உபரி கொள்முதல் முறைக்குப் பதிலாகப் பண்டங்களாக வரியைக் கட்டுகின்ற முறையை ஏற்படுத்தியது அத்தகைய தூண்டுதலைக் கொடுத்தது. விவசாயி தன் விவசாய வேலைகளை ஆரம்பிக்குமுன்பே வரி விகிதத்தைப் பற்றி எச்சரிக்கப்பட்டான். குலாக்குகளுக்கு அதிகமான வரியும், நடுத்தர விவசாயிகளுக்கு

---

* வி. இ. லெனின், ரு.க.க.(போ.)இன் பத்தாவது காங்கிரஸ். உபரி தானிய சுவீகரிப்பு முறைக்குப் பதிலாக பண்டவடிவிலான வரியை மாற்றீடு செய்வது குறித்த அறிக்கை. மார்ச் 15, 1921. — வி. இ. லெனின், தேர்வு நூல்கள், பன்னிரண்டு தொகுதிகளில், தொகுதி *11, 1982*, பக்கம் *278*.



படிப்பகம்

www.padippakam.com

அதைக் காட்டிலும் குறைந்த வரியும் விதிக் கப்பட்டது; பல ஏழை விவசாயிகளுக்கு வரி விதிக்கப்படவேயில்லை.

அதே சமயத்தில் வரியைப் பண்டமாகப் பெறுகின்ற முறையும் நாட்டில் வர்த்தகம் நடத்துவதற்கு ஓரளவில் சுதந்திரத்தை அனு மதித்ததும் சோஷலிசத்தின் பொருளாதார அடிப்படைகளை பலவீனப்படுத்துகிறதா என் னும் பிரச்சினை குறித்து அதிகமான கவ னம் செலுத்தப்பட்டது. பண்டப் பரிவர்த்தனை யின் சுதந்திரத்தை நிர்ணயித்த எல்லை களே இதில் முக்கிய விஷயம் என்று லெனின் சுட்டிக் காட்டினார். அரசியல் அதிகாரத்தைத் தன்னிடம் வைத்திருக்கின்ற பாட்டாளி வர்க்கம் சரியான பொருளாதார பரிவர்த்தனை யை அமைத்தால் அது பொருளாதார அதி காரத்தையும் பெற முடியும்.

கம்யூனிஸ்ட் கட்சியும் சோவியத் அரசாங் கமும் புதிய பொருளாதாரக் கொள்கையைக் குறுகிய காலப் பிரச்சாரமாகக் கருதவில்லை, சிறு அளவு விவசாயிகளைக் கொண்ட நாட்டில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை அமுல் நடத்துகின்ற கொள்கை என்று அதைக் கருதின. இது சோஷலிஸ்ட் அரசின் பொரு ளாதாரக் கொள்கை; நாட்டின் உற்பத்தி சக்திகளை மறுபடியும் அமைப்பதையும் வளர்ப் பதையும் நோக்கமாகக் கொண்ட கொள்கை; சோஷலிஸ்ட் உற்பத்தி உறவுகளின் வெற் றியையும் சோஷலிஸ்ட் நிர்மாணத்தையும், அன்றைக்கிருந்த பண்ட-பண உறவுகளைப்



பயன்படுத்தி முதலாளித்துவ கூறுகளைப் படிப் படியாக அகற்றுவதையும் நோக்கமாகக் கொண்ட கொள்கை. பெருந்திரளான உழைக் கும் மக்களை, குறிப்பாக விவசாயிகளை சோஷலிஸ்ட் நிர்மாணத்தில் ஈடுபடுத்துவதற் கேற்ற முன்நிபந்தனைகளைப் படைப்பதற் குரிய ஆழமான சீர்திருத்தங்களைச் செய் வதற்குப் புதிய பொருளாதாரக் கொள்கை சாதகமாக இருந்தது.

1922ம் வருடத்தின் வசந்த காலத்தில் கட்சியின் 11வது காங்கிரசில் லெனின் சமர்ப் பித்த மத்திய கமிட்டியின் அரசியல் அறிக் கையில் ஒரு வருட காலம் புதிய பொருளா தாரக் கொள்கையின் விளைவுகள் அதன் சரியான தன்மையைச் சுட்டிக்காட்டியிருக் கின்றன என்று தெரிவிக்கப்பட்டது. புதிய பொருளாதாரக் கொள்கை நாட்டின் உற் பத்திச் சக்திகளை வளர்ப்பதற்கு மாபெரும் தூண்டுதலாக இருந்தது. பாக்டரிகளிலும் தொழிற்சாலைகளிலும் சுரங்கங்களிலும் உற் பத்தித் திறனை அதிகப்படுத்துவதற்கு, தொழி லாளர்களின் கட்டுப்பாட்டை வலுப்படுத்து வதற்குத் தீவிரமான போராட்டம் நடை பெற்றுக் கொண்டிருந்தது. சோவியத் அரசாங் கம் விவசாயிகளுக்கு விதைகளைக் கொடுத் தும், கடன்கள் வழங்கியும், வேளாண்மை இயந்திரங்களைப் பழுது பார்த்தும் உதவி செய்தது. விவசாயிகளின் மனோபாவங்களில் அதிகமான மாற்றம் ஏற்பட்டது. உழைக்கும் விவசாய வர்க்கம் கம்யூனிஸ்ட் கட்சியையும்



படிப்பகம்

www.padippakam.com

சோவியத் அரசாங்கத்தையும் சுற்றி மேன் மேலும் அதிகமாகத் திரண்டது, தொழிலாளி வர்க்கத்திடம் அதன் நம்பிக்கையும் அதிகரித்தது.

அதே சமயத்தில் சோஷலிஸ்ட் அடிப்படையில் விவசாயத்தை மாற்றியமைப்பது சோஷலிஸ்ட் நிர்மாணத்தின் மிகவும் கடினமான கடமைகளில் ஒன்று என்பதை லெனின் வலியுறுத்தினார். உதிரியான தனித்தனி விவசாய பண்ணைகளைக் கூட்டு உழைப்பை அடிப்படையாகக் கொண்ட பெரிய அளவு சோஷலிஸ்ட் விவசாயப் பாதைக்குக் கொண்டு செல்வதில்தான் முக்கியமான கஷ்டம் இருந்தது. உள்நாட்டு யுத்தத்தின் போது இந்த நிகழ்வுப் போக்கைத் துரிதப்படுத்துவதற்குச் செய்யப்பட்ட முயற்சிகள் ''கூட்டு முறை விவசாயத் துறையில் எல்லா வகைப்பட்ட சோதனைகளும் முயற்சிகளும் பிரம்மாண்ட பங்கு வகிக்க முடியும்'' என்பதை எடுத்துக் காட்டியது மட்டுமின்றி அதே சமயத்தில் இத்துறையில் அரைகுறை முயற்சிகள் செய்யக் கூடிய மாபெருந் தீங்கையும் எடுத்துக் காட்டின.* விவசாயிகளைக் கூட்டுப் பண்ணைக்குள் கொண்டுவருகின்ற பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஒரே வழியாக (அவர்களுடைய தனிப்பட்ட நலன்கள் சமுதாயத்தின் பொது நலன்களுடன் இணைந்திருப்பதால்) அவர்களுடைய சொந்த அரசியல் அனுபவத்தை

* வி. இ. லெனின், **உபரி தானிய சுவீகரிப்பு...**, பக்கம் 274.



உபயோகிக்க வேண்டும், பெருவீத கூட்டு விவசாயத்திற்கு மாறுவதற்காக முதலில் மிகவும் எளிமையான, விவசாயிகள் மிகவும் சுலபமாகப் புரிந்து கொள்ளக் கூடிய வடிவங்களையும் முறைகளையும் உபயோகிக்க வேண்டும்.

லெனின் அக்டோபர் சோஷலிஸ்ட் புரட்சிக்கு முன்னரே கூட, எதிர்காலத்தில் விவசாயத்தை சோஷலிஸ்ட் முறையில் மாற்றியமைக்கின்ற வழிகளையும் முறைகளையும் மதிப்பிடுகின்ற பொழுது, அது இரண்டு பொருளாதார வடிவங்களில், அதாவது, அரசு விவசாயம் மற்றும் கூட்டுறவு விவசாயம் என்னும் வடிவங்களில் நிறைவேற்றப்படும் என்று சுட்டிக் காட்டினார். புதிய பொருளாதாரக் கொள்கையின் கீழ் கூட்டுறவு — அதன் எல்லா வடிவங்களிலும் — மாபெரும் முக்கியத்துவத்தைப் பெற்றது. சோவியத் அரசாங்கத்தின் ஆரம்ப வருடங்களின் போது கூட்டுறவு முறையின் அனுபவத்தைப் பொழித்துரைக்கின்ற பொழுது சிறு விவசாயிகளைக் கூட்டுறவு முறையின் மூலமாகவே சோஷலிசத்துக்குக் கொண்டுவர முடியும், பெரிய அளவான கூட்டுப் பண்ணைகளில் ஒன்று சேர்க்க முடியும் என்ற முடிவுக்கு லெனின் வந்தார்.

சோவியத் யூனியனில் சோஷலிசத்தை நிர்மாணிக்கின்ற திட்டத்தில் முக்கியமான பகுதியாக இருந்த கூட்டுறவுத் திட்டத்தை லெனின் பல நூல்களிலும் சொற்பொழிவுகளிலும் எடுத்துக் கூறினார். விவசாயத்தை



2*

படிப்பகம்

www.padippakam.com

சோஷலிஸ்ட் முறையில் மாற்றியமைப்பதைப் பற்றிய தன்னுடைய திட்டத்தை அவர் **கூட்டுறவு குறித்து** என்னும் கட்டுரையில் இறுதியாக்கினார். லெனின் அக்கட்டுரையை 1923, ஜனவரி 4ந் தேதி முதல் 6ந் தேதி வரை கூற செயலர் அதை எழுதினார். இக்கட்டுரையில் லெனின் சோவியத் அரசாங் கத்தின் கீழ் கூட்டுறவு முறையை அமு லாக்கிய ஆரம்ப அனுபவத்தைத் தத்துவ ரீதியில் பொழித்துக் கூறினார். கூட்டுறவை சமூக ரீதியிலும் பொருளாதார ரீதியிலும் சோஷலிஸ்ட் முறையாக மாற்றுகின்ற பொது வான போக்குகளை அவர் எடுத்துக் காட்டினார். கூட்டுறவு உடைமை வடிவம் சோஷலிஸ்ட் உடைமையின் ஒரு ரகமாக சரியான முறையில் இருக்க முடியும் என்று முதல் முறையாக முடிவு செய்ததுடன் நாட்டுப்புறத்தில் சோஷலிஸ்ட் கூட்டுறவு அமைப்புக்கு இட்டுச் செல்லக் கூடிய வழி களையும் அவர் சுட்டிக் காட்டினார்.

சிறு மற்றும் ஆகச் சிறிய தனித்தனி விவசாய பண்ணைகளைக் கூட்டுறவு முறையின் மூலம் பெரிய அளவு சோஷலிஸ்ட் விவசாயமாக மாற்றுகின்ற தத்துவம் மற்றும் நடைமுறையின் அடிப்படையான பிரச்சினைகளுக்கு **கூட்டுறவு குறித்து** என்னும் கட்டுரை தேர்ந்தாராய்ந்த விடைகளைக் கொடுத்தது.

## கூட்டுறவு — விவசாயிகளின் புதிய வாழ்க்கைப் பாதை

புரட்சித் தத்துவம் மற்றும் நடைமுறையில் விவசாயப் பிரச்சினை மிகவும் சிக்கலான பிரச்சினைகளில் ஒன்றாக எப்பொழுதுமே இருந்து வந்திருக்கிறது. சிறு அளவான பண்ணைகளின் குறுகியத் தன்மையைச் சமா ளித்து அவற்றை சோஷலிஸ்ட் முறையில் மாற்றியமைத்து, சமூகத்தில் எல்லோருடைய நலன்களுக்காகவும் கூட்டு உழைப்பு மற்றும் மிகவும் நவீனமான விஞ்ஞான முறைகளை உபயோகித்தலை அடிப்படையாகக் கொண்டு பெரிய அளவான விவசாய உற்பத்தியாக மாற்ற வேண்டிய புறநிலையான அவசியத்தை மார்க்ஸ், எங்கெல்ஸ் மற்றும் லெனின் தங் களுடைய நூல்களில் சுட்டிக்காட்டினார்கள்.

சோஷலிஸ்ட் புரட்சியின் வெற்றிக்குப் பிறகு விவசாய வர்க்கத்திடம் பாட்டாளி வர்க்கம் எத்தகைய அணுகுமுறையைக் கடைப் பிடிக்க வேண்டும் என்ற கேள்விக்கு மார்க்ஸ், எங்கெல்சின் நூல்கள் பதிலளிக் கின்றன. பெரிய நிலப்பிரபுக்களின் நிலவுடை மைகளைப் பறிமுதல் செய்ய வேண்டிய அவசியத்தைப் பற்றி எத்தகைய சந்தேகமும்



படிப்பகம்

www.padippakam.com

கிடையாது. ஆனால் சிறு விவசாயிகளிடம் முற்றிலும் வேறுவிதமான அணுகுமுறையைக் கடைப்பிடிக்க வேண்டும். புரட்சியில் வெற்றியடைந்த பாட்டாளி வர்க்கம் மிகவும் உறுதியான முறையில் சிறு விவசாயிகளை ஆதரித்து தனியார் நிலவுடைமையிலிருந்து கூட்டு நிலவுடைமைக்கு மாறுவதற்கு உதவுகின்ற நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். மார்க்சும் எங்கெல்சும் பொது நிலவுடைமை நிர்வாகத்தில் சிறு விவசாயிகளை ஈடுபடுத்துகின்ற இடைக்கால வடிவம் என்ற முறையில் சோஷலிஸ்ட் கூட்டுறவை முன்வைத்தார்கள்; அதன் தத்துவ அடிப்படைகளை அவர்கள் வளர்த்திருந்தார்கள்.

விவசாயக் கூட்டுறவு என்பது அடிப்படையில் கூட்டு உற்பத்தி, விற்பனை மற்றும் இயந்திரங்களையும் இதர விவசாயக் கருவிகளையும் கூட்டாக உபயோகிப்பதற்காக விவசாயப் பண்ணைகளைக் கூட்டுகளில் ஒன்று சேர்ப்பதாகும்.

கூட்டுறவு முறை சமூக உற்பத்தியின் மொத்த அமைப்புடன் அங்கக ரீதியான உறவைக் கொண்டிருப்பதாக மார்க்சும் எங்கெல்சும் கருதினார்கள். கூட்டுறவு முறை என்பது ஒரு சமூக-பொருளாதார, வரலாற்று நிகழ்வாகும். சமூக மற்றும் அரசு அமைப்பின் தன்மையைப் பொறுத்து கூட்டுறவு முறையின் பாத்திரமும் நோக்கமும் மாற்றமடைகின்றன. கூட்டுறவு இயக்கம் முதலாளித்துவத்துடன், அதாவது எல்லா உற்பத்திச் சாதனங்களும் சிறுபான்மை வர்க்கமான முதலாளிகளுக்குச் சொந்தமாக இருக்கின்ற, பெருந்திரளான மக்கள் மூலதனத்தின் கூலியடிமைகளாக மாற்றப்படுகின்ற அல்லது சிறு உடைமையாளர்களாகவும் உற்பத்தியாளர்களாகவும் இருந்து கொண்டு, தங்களுடைய உழைப்புப் பலன்களின் கணிசமான பகுதியைத் தலைமையான வர்க்கமாகிய முதலாளி வர்க்கத்திடம் ஒப்படைக்கும்படி நிர்ப்பந்திக்கப்படுகின்ற பொருளாதார அமைப்புடன் சேர்ந்துதான் தோன்ற முடியும், அவ்வாறுதான் தோன்றியது. முதலாளித்துவம் வளர்ச்சியடைகின்ற பொழுது கூலித் தொழிலாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கின்றது, முதலாளி வர்க்கம் அவர்களைச் சுரண்டுவதும் அதிகரிக்கிறது. உழைக்கும் மக்கள் சுரண்டலாளர்களை எதிர்த்து நடத்துகின்ற போராட்டத்தில் ஒற்றுமையின் அவசியத்தை உணர்ந்து அரசியல் கட்சிகளையும் தொழிற் சங்கங்களையும் அமைக்கிறார்கள்; இதில் கூட்டுறவு ஸ்தாபனங்களையும் பயன்படுத்துகிறார்கள்.

முதலாளித்துவத்தின் கீழ் கூட்டுறவு முறை உழைப்பின் சமூக வடிவத்திலிருந்து (உழைப்பின் உற்பத்தித் திறனைப் பெருக்குவதற்கு மூலதனம் இதை உபயோகிக்கிறது) தொழிலாளர்களின் சங்கம் (இதில் உழைப்புக்கும் மூலதனத்துக்கும் இடையிலுள்ள முரண்பாடு ஊடுருவுகிறது) வரை உள்ள பாதையைக் கடந்து வருகிறது. தொழிலாளர்களுடைய கூட்டுறவு பாக்டரிகள் இருப்பதே மூலதனத்தை



படிப்பகம்

www.padippakam.com

வைத்திருப்பதை இழந்த உழைப்பு ஓரளவுக்கு சுதந்திரமாக இருக்க முடியும் என்பதை நிரூபிக்கின்ற அளவில் கூட்டுறவு முறை சாராம்சத்தில் சோஷலிசத்துக்குப் பாதை அமைக்கிறது. எனினும் முதலாளித்துவ அமைப்பில் கூட்டுறவு முறை முதலாளித்துவ உறவுகளை மறு உற்பத்தி செய்ய முற்படுகிறது; ஏனென்றால் மூலதனம் அரசியல் அதிகாரத்தை வைத்திருப்பதுடன் உற்பத்தி மற்றும் கடன்வசதித் துறையில் தலைமையான சக்தியாக இருக்கிறது. ஆகவே கூட்டுறவு பாக்டரிகள் முற்றிலும் முதலாளித்துவ நிறுவனங்களாக எளிதில் மாற முடியும். எனவே கூட்டுறவு முறை முதலாளித்துவ அமைப்பில் மொத்த சமூகமும் புதிய உற்பத்தி முறைக்கு மாறுகின்ற வடிவமாக இருக்க முடியாது, அது மூலதனத்தை எதிர்த்து சுதந்திரமான போராட்டத்தை நடத்த முடியாது என்று மார்க்சும் எங்கெல்சும் முடிவு செய்தார்கள். ''கூட்டுறவு முறையினால் ஒருபோதும் முதலாளித்துவ சமூகத்தை மாற்ற முடியாது'' * என்று மார்க்ஸ் எழுதினார். கூட்டுறவு முறை தேசிய அளவில் மற்றும் பொதுநிதிகளின் மூலமாக, அதாவது முதலாளித்துவ உற்பத்தி முறையை அகற்றி வளர்ச்சி அடைந்தால் உழைக்கின்ற பெருந்திரளான மக்களைச் சுரண்டலிலிருந்து விடுவிக்க முடியும். இது சோஷலிஸ்ட் புரட்சியின் விளைவாக, தொழிலாளி வர்க்கம் அரசியல் அதிகாரத்தை வென்றெடுத்த பிறகுதான் நடைபெற முடியும்.

இதன் தொடர்பாக, மார்க்சும் எங்கெல்சும் கூட்டுறவு முறையின் எதிர்காலத்தைப் பற்றிய முக்கியமான கோட்பாடுகளை, சோஷலிச நிர்மாணத்தில், குறிப்பாக விவசாயத் துறையில் அதை உபயோகப்படுத்தக் கூடிய புதிய வாய்ப்புகளை விரித்துரைத்தார்கள். கிராமங்களில் முதலாளித்துவம் வளர்ச்சியடைந்த போதிலும் சோஷலிசப் பாதையைப் பின்பற்ற வேண்டிய இலட்சக்கணக்கான சிறு விவசாயிகளும் நடுத்தர விவசாயிகளும் இருக்கின்ற நாடுகளில் கூட்டுறவு முறை விசேஷமான முக்கியத்துவத்தைப் பெறுகிறது. எங்கெல்ஸ் 1886இல் ஔ. பெபெலுக்கு எழுதிய கடிதத்தில், ''முழு வளர்ச்சியடைந்த கம்யூனிஸ்ட் பொருளாதாரத்துக்கு மாறுவதற்கு இடைநிலைக் கண்ணியாக கூட்டுறவு உற்பத்தியை விரிவாகப் பயன்படுத்த வேண்டும், மார்க்ஸோ, நானோ அதைப் பற்றி ஒருபோதும் சந்தேகப்படவில்லை'' என்று எழுதினார். *

முதலாளித்துவ அமைப்பில் சிறு விவசாய நிலவுடைமைகள் அழிவது நிச்சயம், பெரிய அளவு விவசாய உற்பத்திக்கு மாறுவது தவிர்க்க முடியாதது என்பதை மார்க்சும் எங்கெல்சும் விஞ்

* K. Marx, *Instructions for the Delegates of the Provisional General Council,* in K. Marx and F. Engels, *Selected Works* in 3 volumes, Progress Publishers, Moscow, Vol. 2, 1976, p. 81.

* Marx/Engels, *Werke,* Bd. 36, S. 426.





படிப்பகம்

www.padippakam.com

ஞான ரீதியாக நிரூபித்தார்கள். அவர்கள் தனிப் பட்ட விவசாய நிலவுடைமைகளைப் பாதுகாப் பதற்குப் பாடுபட்ட குட்டி பூர்ஷ்வா சோஷலிஸ் டுகளை எதிர்த்து உறுதியான போராட் டத்தை நடத்தினார்கள். ''சிறு விவசாயியின் நிலவுடைமையைப் பாதுகாப்பதற்கு முயற் சிப்பது அவனுடைய சுதந்திரத்தைப் பாது காக்காது, அவனுடைய அடிமைத்தனத்தின் குறிப்பிட்ட வடிவத்தையே பாதுகாக்கும்; அவன் வாழ முடியாத, செத்துப் போகவும் முடியாத நிலைமையை நீடிக்கச் செய்யும்'' * என்று எங்கெல்ஸ் **பிரான்சிலும் ஜெர்மனியிலும் விவசாயப் பிரச்சினை** என்ற புத்தகத்தில் எழுதி னார். தனிப்பட்ட விவசாயப் பண்ணை பெரிய அளவு உற்பத்தியுடன் பொருந்தாது என்பது எங்கெல்சின் கருத்தாகும்.

தனிப்பட்ட விவசாயப் பண்ணைகளைக் கூட்டுப் பண்ணைகளாக்காமல், விவசாயத்தில் புதிய இயந்திரங்களையும் மற்றும் இதர சாதனங்களையும் உபயோகிக்காமல் எதிர் காலத்தில் விவசாய உற்பத்தி நடைபெற முடியாது என்று மார்க்சும் எங்கெல்சும் நிரூபித்தார்கள். சோஷலிச அமைப்பில் பெரிய அளவு கூட்டுப் பண்ணை விவசாயத்தை நோக்கிய மாற்றம் பலாத்காரமாக நிறை வேறக் கூடாது, சிறு விவசாயி அதில் விருப்ப

* F. Engels, *The Peasant Question in France and Germany*, in K. Marx and F. Engels, *Selected Works* in 3 volumes, Vol. 3, 1977, p. 463.



பூர்வமாகப் பங்கெடுக்க வேண்டும் என்று அவர்கள் கூறினார்கள். இதன் தொடர்பாக எங்கெல்ஸ் பின்வருமாறு எழுதினார்: ''சிறு விவசாயியைப் பொறுத்த மட்டில் நம்முடைய கடமை முதலாவதாக, அவனுடைய தனி முயற்சியையும் தனியுடைமையையும் கூட் டுறவாக — பலாத்காரத்தினால் அல்ல, உதார ணத்தின் மூலம் — மாற்றுவதில், அதற்கு சமூக உதவியைக் கொடுப்பதில் இருக்கிறது. அதற்குப் பிறகு எதிர்காலத்தில் ஏற்படக் கூடிய நன்மைகளை — அவை இன்று கூட அவனுக்குத் தெரிந்திருக்கலாம் — சிறு விவசாயியிடம் எடுத்துக் காட்டுவதற்குப் போதிய சாதனங்கள் நம்மிடம் இருக்கும் என்பது உண்மையே.'' *

விவசாய உற்பத்தியின் கூட்டு வடிவங் களின் நன்மைகளை சிறு விவசாயிக்கு நடை முறையில் எடுத்துக் காட்டி அவனை நம்பச் செய்ய வேண்டும் என்று மார்க்சும் எங் கெல்சும் கூறியதுடன் பாட்டாளி வர்க்க அரசு அவனுக்குத் தர வேண்டிய உதவியை முக்கியமாக வலியுறுத்தினார்கள். அந்த உதவி சொந்தப் பண்ணையில் விவசாயியின் பற்றுறுதியை, அவனுடைய சிறு உடைமை யாளன் மனோபாவத்தைக் கணக்கிலெடுத்துக் கொள்ள வேண்டும், ''விவசாயிகளுடைய வீடுகளையும் வயல்களையும் கூட்டுறவு முறை யில் நிர்வகிக்கப்படுகின்ற கூட்டுறவுச் சொத் தாக மாற்றுவதன் மூலமாகவே அவற்றைக்

* *Ibid*., p. 470.



படிப்பகம்

www.padippakam.com

காப்பாற்ற, பாதுகாக்க முடியும் என்று விவசாயிகளைப் புரிந்து கொள்ள வைக்க வேண்டும்''.*

பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் நிறுவப்பட்ட பிறகு அமைக்கப்படவிருக்கும் பெரிய கூட்டுறவுப் பண்ணைகள் முதலாளித்துவ அமைப்பில் இருக்கின்ற கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து அடிப்படையில் வேறுபட்டிருக்கும் என்று மார்க்சும் எங்கெல்சும் வலியுறுத்தினார்கள். நாட்டுடைமையாக்கப்பட்ட நிலம், நாட்டுடைமையாக்கப்படாத நிலம் ஆகிய இரண்டிலுமே உற்பத்திக் கூட்டுறவுகள் அமைக்கப்பட முடியும் என்று அவர்கள் கருதினார்கள். ஆனால் மேற்கூறிய இரண்டு இனங்களிலுமே பாட்டாளி வர்க்க அரசு பொருளாதார நடவடிக்கையை நிர்வகிக்கும், கூட்டுறவு அமைப்புக்களின் தனிப்பட்ட நலன்கள் மொத்த சமூகத்தின் நலன்களைக் காட்டிலும் முக்கியத்துவம் பெறாமலிருப்பதற்கு அரசு உற்பத்திச் சாதனங்களில் உடைமையை வைத்திருக்க வேண்டும். பாட்டாளி வர்க்க அரசு உற்பத்திச் சாதனங்களில் உடைமையை வைத்திருந்தால்தான் கூட்டுறவு அமைப்புகள் சாராம்சத்தில் சோஷலிசத்திற்குரியவையாக இருக்க முடியும்.

கூட்டுறவின் தோற்றுவாய்கள், முதலாளித்துவ அமைப்பிலும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்திலும் பல்வேறு வர்க்கங்களின் சமூக

* *Ibid.*, p. 471.



வளர்ச்சியில் அதன் சாராம்சம் மற்றும் பாத்திரம் பற்றி மார்க்சும் எங்கெல்சும் தெரிவித்த பொதுவான தத்துவக் கருத்துக்களை லெனின் தன்னுடைய நூல்களில் மேலும் வளர்த்துக் கூறினார். லெனின் புரட்சிக்கு முன்பு எழுதிய நூல்களில் கூட அரசியல் அதிகாரத்தைப் பெறுவதற்குப் பாட்டாளிகளின் வர்க்கப் போராட்டத்தில் கூட்டுறவின் சமூக-பொருளாதாரத் தன்மை மற்றும் சமூகப் பாத்திரத்தையும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் புதிய சமூகத்தை நிர்மாணிப்பதற்கு அதை உபயோகிக்கின்ற சாத்தியத்தையும் பகுப்பாய்வு செய்திருந்தார். மாபெரும் அக்டோபர் சோஷலிஸ்ட் புரட்சியின் வெற்றிக்குப் பிறகு, சோவியத் அரசாங்கத்தின் முதல் வருடங்களின் போது பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் கூட்டுறவு முறையின் சமூக-பொருளாதாரத் தன்மையில் ஏற்பட்டிருக்கின்ற மாற்றத்தை லெனின் பல நூல்களிலும் சொற்பொழிவுகளிலும் ஆராய்ந்தார்; அது சோஷலிஸ்ட் கூட்டுறவு முறையாக, கிராமப் பகுதிகளில் சோஷலிசத்தை நிர்மாணிப்பதில் விவசாய வர்க்கத்தை ஈடுபடுத்துகின்ற கருவியாக மாற்றமடைந்திருப்பதை விவரித்தார்.

கூட்டுறவு முறையைப் பற்றி லெனின் எழுதிய நூல்களில் **கூட்டுறவு குறித்து** என்னும் கட்டுரை சிறப்பான இடத்தைப் பெறுகிறது. அது விசேஷமாக முதலாளித்துவ அமைப்பிலும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்திலும் கூட்டுறவின் சமூகத் தன்மையை ஆராய்



படிப்பகம்

www.padippakam.com

கிறது. முதலாளித்துவ அமைப்பின் கீழ் கூட்டுறவு முறை ஒரு கூட்டு முதலாளித்துவ நிறுவனமாகும், அது பொருளாதார ரீதியில் ஒரு முதலாளித்துவ நிறுவனத்தை ஒத்திருக் கிறது. அது தன்னுடைய வளர்ச்சியில் முதலாளித்துவத்தின் குறியடையாளமான எல்லா பொருளாதார நிகழ்வுப் போக்குகளையும் நிகழ்ச்சிகளையும் தவிர்க்க முடியாதபடி பிரதி பலிக்கிறது, முதலாளித்துவ அமைப்பின் எல்லா விதிகளையும் அனுசரிக்கிறது, சாராம்சத்தில் அதன் உட்பகுதியாக இருக்கிறது. தொழிலா ளர்களின் கூட்டுறவுச் சங்கம் அல்லது சிறு பண்ட உற்பத்தியாளர்களின் கூட்டுறவுச் சங்கம் கூட முதலாளிகளின் செல்வாக்கில் சிக்கி விடுகிறது, முடிவாகப் பார்க்கும் பொழுது அவர்கள் அதைத் தம்முடைய சொந்த நலன்களுக்குப் பயன்படுத்துகிறார்கள். அதே சமயத்தில் முதலாளித்துவ அமைப்பின் கீழ் கூட்டுறவு முறை இதர முதலாளித்துவ நிறுவனங்களிலிருந்து இன்னும் வேறுபடுகிறது. அது சாராம்சத்தில் தொழிலாளர்கள், அலு வலக ஊழியர்கள், கைவினைஞர்கள் மற்றும் விவசாயிகளின் வர்க்க ஸ்தாபனம்; ஊகவர்த் தகம், அதிக வட்டி மற்றும் முதலாளித்துவச் சுரண்டலின் இதர வடிவங்களை எதிர்த்து அவர் கள் போராடுவதற்கு, மிகவும் சொற்பமாக என் றாலும் தம்முடைய துன்பத்தைக் குறைப் பதற்கு, நிலைமையை முன்னேற்றுவதற்கு சில வாய்ப்புகளைத் தருகின்ற ஸ்தாபனம். இந்த அர்த்தத்தில் கூட்டுறவு முறையின்



முதலாளித்துவ சாராம்சம் எப்படியிருந்தாலும் முதலாளித்துவத்தை எதிர்க்கின்ற போராட் டத்தில் அது ஒரு கருவியாக இருக்கலாம். ஆகவே தொழிலாளர் இயக்கமும் கம்யூனிஸ்ட் கட்சிகளும் தொழிலாளர்கள் மற்றும் சிறு உடைமையாளர்களின் பொருளாதார நலன் களைப் பாதுகாப்பதற்கு, முதலாளித்துவத் துக்கு எதிரான போராட்டத்தில் அவர்களை ஈடுபடுத்துவதற்கு எல்லாவிதமான கூட்டுறவு ஸ்தாபனங்களிலும் முறைப்படியாகவும் சுறு சுறுப்பாகவும் பங்கெடுக்க வேண்டும்.

ருஷ்யாவில் சோவியத் அரசாங்கம் நிறுவப் பட்ட பிறகு கூட்டுறவும் வேறு அர்த்தத்தைப் பெற்றது. பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் உற்பத்தி சாதனங்களில் தனியுடைமையை ஒழித்து பொதுமக்கள் உடைமையின், சோஷ லிஸ்ட் உடைமையின் தலைமையை ஏற்படுத்து கிறது. பாட்டாளி வர்க்க அரசு அந்த நோக்கத்துக்காக பாக்டரிகள், தொழிற் சாலைகள், வங்கிகள், தகவல் தொடர்புச் சாதனங்கள், ரயில்வே, கப்பல்கள் ஆகியவற்றை நாட்டுடைமையாக்குகிறது, வெளிநாடுகளுடன் வர்த்தகத்தை அரசின் ஏகபோகமாக்குகிறது. பாட்டாளி வர்க்க அரசு பொருளாதாரத்தின் தலைமை நிலைகள் அனைத்தையும் கைப்பற்றி முதலாளி வர்க்க ஆதிக்கத்தின் பொருளாதார அடிப்படையை அரித்தழிக்கிறது, சோஷலிஸ்ட் உற்பத்தி உறவுகளையும் சோஷலிஸ்ட் பொரு ளாதாரக் கட்டமைப்பையும் வளர்ப்பதற்கு அடிப்படையை உருவாக்குகிறது. சமூக நிலை



படிப்பகம்

www.padippakam.com

மைகளில் ஏற்படுகின்ற அடிப்படையான மாற்றம் கூட்டுறவு முறையின் தன்மையையும் மாற்றுகிறது என்பதை லெனின் பன்முறை வலியுறுத்தி இருக்கிறார். முதலில், சோஷலிஸ்ட் கூட்டுறவு முறை அடிப்படையில் வேறுவிதமான சமூகக் கட்டமைப்பைக் கொண்டிருக்கிறது; ஏனென்றால் அதன் உறுப்பினர்களில் ஏழை மக்கள் அதிகமாக இருக்கிறார்கள். இரண்டாவதாக, தொழிலாளி வர்க்கத்தின் சர்வாதிகாரத்தின் கீழ் வளர்ச்சியடைந்து சோஷலிஸ்ட் தொழில்துறையை ஒட்டிவருகின்ற கூட்டுறவு முறை சோஷலிஸ்ட் உற்பத்தி உறவுகளின் வடிவமாக, முதலாளி வர்க்கத்துக்கு எதிரான வர்க்கப் போராட்டத்தின் கருவியாக மாறுகிறது. ஆகவே, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் மற்றும் அடிப்படையான உற்பத்திச் சாதனங்களில் அரசுடைமையின் கீழ் கூட்டுறவு முறையின் வளர்ச்சி சோஷலிசத்தின் வளர்ச்சிக்குச் சமம் என்று லெனின் முடிவு செய்தார்.

கூட்டுறவு முறையின் சமூகத் தன்மை சோஷலிஸ்ட் பொருளாதாரத்தின் வளர்ச்சி நிலையைப் பொறுத்திருக்கிறது. 1921ம் வருடத்தில் லெனின் **பண்ட வரி குறித்து** என்னும் பிரசுரத்தை எழுதினார்; அப்பொழுது சோவியத் ருஷ்யாவில் வளர்ச்சியடைந்த சோஷலிஸ்ட் தொழில்துறை இல்லை, விவசாயம் நாசமடைந்திருந்தது. கூட்டுறவு முறை அரசு முதலாளித்துவத்தின் பிரத்யேகமான வடிவம் என்று லெனின் கருதினார். ருஷ்யாவின் எதார்த்தத்தின் ஸ்தூலமான நிலைமைகளிலிருந்து முன்னேறிச் சென்ற லெனின் கூட்டுறவு முறையின் அன்றைய வடிவங்களின் வர்க்க குணாம்சத்தை நிர்ணயித்தார். முதலாவதாக, நுகர்வோர் வர்த்தகக் கூட்டுறவுச் சங்கங்களை அரசு முதலாளித்துவ வடிவம் என்றும் உற்பத்திக் கூட்டுறவு அமைப்புக்களை கூட்டுறவு முறையின் எதிர்கால சோஷலிஸ்ட் வடிவம் என்றும் நிர்ணயித்தார். மேலும் வர்த்தக வடிவம் என்ற முறையில் கூட்டுறவு தனியார் வர்த்தகத்தைக் காட்டிலும் மிகவும் லாபகரமானது, ஏனென்றால் இலட்சக் கணக்கான மக்களை—அதன் பிறகு மொத்த மக்கள் சமூகத்தை—ஒன்றுசேர்ப்பதையும் அமைப்பு ரீதியாக்குவதையும் அது சுலபமாக்குகிறது; பிற்காலத்தில் அரசு முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்துக்கு மாறுவதற்கு இது ஆக்கபூர்வமாக உதவுகிறது. கூட்டுறவு முறையின் எளிமையான (உற்பத்தி அல்லாத) வடிவங்கள் சோஷலிஸ்ட் உற்பத்திக் கூட்டுறவுக்கு மாறுவதற்குத் தயாரிக்கின்றன என்பது இதன் அர்த்தமாகும். எதிர்காலத்தில் உற்பத்திக் கூட்டுறவைப் பற்றி லெனின் பின்வருமாறு எழுதினார்: "சிறு உடைமையாளர் கூட்டுறவுகளிலிருந்து சோஷலிசத்துக்கு மாறிச் செல்வது சிறுவீத உற்பத்தியிலிருந்து பெருவீத உற்பத்திக்கு மாறிச் செல்வதாகும், அதாவது இது அதிகச் சிக்கலானது. ஆனால்... மேலும் விரிவான மக்கள் திரளினரை அரவணைத்துக் கொள்ளும் ஆற்றல் உடையது...



படிப்பகம்

www.padippakam.com

கூட்டுறவுக் கொள்கை வெற்றியடையுமானால், சிறிய பொருளாதாரத்தை உயர்த்தி நிர்ணயமில்லாத ஒரு காலப்பகுதிக்குள் சுயவிருப்பமாகச் சேர்ந்து நிற்கும் அடிப்படையில் பெருவீத உற்பத்திக்கு மாறுவதை அது சுலபமாக்கும்.'' *

1923இல், அதாவது புதிய பொருளாதாரக் கொள்கை அமுலாக்கப்பட்டு இரண்டு வருடங்கள் மட்டுமே ஆன பிறகு, ருஷ்யாவில் சோஷலிஸ்ட் பொருளாதாரம், பிரதானமாக சோஷலிஸ்ட் தொழில்துறை வலுவடைந்து வளர்ச்சியடைந்த போது லெனின் கூட்டுறவு முறையை சோஷலிஸ்ட் தொழில்துறையுடன் சேர்த்தே பார்த்தார். நுகர்வோர் வர்த்தகக் கூட்டுறவு இன்னும் அதன் உள்ளூறையான குட்டி பூர்ஷ்வா, கடைவியாபாரிப் போக்கைக் கொண்டிருப்பதை அவர் வலியுறுத்தினார். சுருக்கமாகக் கூறுவதென்றால், முதலாளித்துவ உற்பத்தி முறையினால் வளர்க்கப்பட்ட உற்பத்தி உறவுகளின் வடிவம் என்ற முறையில் கூட்டுறவு முறை சோஷலிஸ்ட் தொழில் துறையுடன் சேர்ந்து வளர்ச்சியடைகின்ற பொழுது உடனடியாக சோஷலிஸ்ட் ஆவதில்லை. ஆகவே சோஷலிஸ்ட் நிர்மாணத்தின் தொடக்கத்தில் அது உற்பத்தி உறவுகளின் இடைக்கால வடிவமாகத் தோன்றுகிறது.

* வி. இ. லெனின், **பண்ட வரி குறித்து**. — வி. இ. லெனின், **தேர்வு நூல்கள்**, பன்னிரண்டு தொகுதிகளில், தொகுதி 11, பக்கங்கள் 339, 340.



ஆனால் ஏற்கெனவே 1923இல் லெனின் கூட்டுறவு முறையை சோஷலிஸ்ட் என்று மதிப்பிட்டார்.

சிறு விவசாய நிலவுடைமைகளை சோஷலிஸ்ட் ரீதியில் புனரமைக்கின்ற கடமையைப் பூர்த்தி செய்வதில் உற்பத்தி கூட்டுறவு ஒரு முக்கியமான சாதனம் என்று லெனின் வரையறுத்தார். ''நமது நிலைமைகளில் கூட்டுறவானது அனேகமாய் எப்பொழுதும் முழு அளவுக்கு சோஷலிசத்துக்கு ஒத்ததாகி விடுகிறது'' * என்று அவர் வலியுறுத்தினார்.

எனினும் கூட்டுறவு முறை தனக்குரிய முழு சாத்தியங்களையும் நிறைவேற்ற முடியவில்லை. தொழில்துறை நிறுவனங்கள் சந்தையுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வதற்குப் பரபரப்பாகப் பாடுபட்டன. எரிபொருள், மூலப் பொருட்கள், கருவிகள், நிதி ஆகியவற்றின் பற்றாக்குறை, தொழிலாளர்களுக்கு உணவுப் பொருள்கள் குறைவாகக் கிடைத்தது முதலியவை இதைத் தூண்டின. ஆகவே அந்த நிறுவனங்கள் அவசியமான பண்டங்களின் விற்பனை மற்றும் கொள்முதலை வேகமாகச் செய்யக் கூடிய தனிப்பட்ட வியாபாரிகளை நோக்கி அடிக்கடி ஓடின.

1922ம் வருடம் விவசாய உற்பத்தியில் ஒரு திருப்பு முனையாக இருந்தது. விவசாயப்

* வி. இ. லெனின், **கூட்டுறவு குறித்து**. — வி. இ. லெனின், **தேர்வு நூல்கள்**, பன்னிரண்டு தொகுதிகளில், தொகுதி 12, 1982, பக்கம் 301.

3*



படிப்பகம்

www.padippakam.com

பொருளாதாரம் பண்டப் பொருளாதாரமாக மாறுகின்ற பாதையில் அடியெடுத்து வைத்திருந்தது; பண்ட வரி முறை மாறி பணத்தில் வரியைக் கட்டுகின்ற முறை வந்திருந்தது; நகரத்துக்கும் கிராமத்துக்கும் இடையில் பொருளாதார இணைப்பை வலுப்படுத்துவதிலும் விவசாய உற்பத்தியை அதிகப்படுத்துகின்ற விதிதங்கள் மற்றும் போக்குகளைக் குறிப்பிடுவதிலும் கூட்டுறவு முறை மேன்மேலும் அதிகமான பாத்திரத்தை வகித்தது.

லெனின் **கூட்டுறவு குறித்து** என்னும் கட்டுரையில் புதிய சமூகத்தை நிர்மாணிப்பதில் கூட்டுறவு முறையின் மாபெரும் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார். ''தற்போது, அக்டோபர் புரட்சி நடைபெற்றது முதலாய், புதிய பொருளாதாரக் கொள்கையையும் அன்னியில் (இதற்கு மாறாய்ப் புதிய பொருளாதாரக் கொள்கையின் காரணமாய் என்றே இச்சந்தர்ப்பத்தில் நாம் கூற வேண்டும்), கூட்டுறவு இயக்கம் நம் நாட்டில் மிகுந்த முக்கியத்துவமுடையதாகி விட்டதை எல்லோரும் புரிந்து கொள்வதாய்ச் சொல்வதற்கில்லை''* என்று அவர் எழுதினார்.

இதை விளக்கிக் கூறுகின்ற பொழுது, மார்க்சியத்துக்குப் புறம்பான சீர்திருத்தவாத ''கூட்டுறவு சோஷலிசத்தின்'' பிரதிநிதிகளை மார்க்சியவாதிகள் நியாயமான முறையில் விமர்சனம் செய்தார்கள் என்பதை லெனின் முதன்

* அதே நூல், பக்கம் 292.



முதலாக சுட்டிக் காட்டினார். கூட்டுறவு முறையின் வளர்ச்சியின் மூலம் முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்துக்குப் படிப்படியாக மாற முடியும் என்று ''கூட்டுறவு சோஷலிசத்தை'' ஆதரித்தவர்கள் கூறினார்கள். சமூக அமைப்பு எப்படியிருந்தாலும் கூட்டுறவு முறை ''சோஷலிசத்தின் உயிரணு'', எனவே சர்வாம்சக் கூட்டுறவின் மூலம் முதலாளித்துவ சமூகத்தை சோஷலிஸ்ட் சமூகமாக சமாதான முறையில் மாற்றியமைக்க முடியும் என்று அவர்கள் கருதினார்கள். முதலாளித்துவ சமூகத்தில் கூட்டுறவு ஸ்தாபனங்கள் ''சோஷலிசத்தின் உயிரணுக்கள்'' என்பதை லெனின் மறுக்கவில்லை. எனினும் அவர் அன்றைய எதார்த்த நிலையை ஆழமான முறையில் பகுப்பாய்வு செய்து, கூட்டுறவு சங்கங்கள் தோன்றுவதனால் முதலாளித்துவ சமூகத்தின் அடிப்படைகள் தகர்ந்து விடுவதில்லை, வர்க்கப் போராட்டம் இல்லாமல், பாட்டாளி வர்க்கம் அரசியல் அதிகாரத்தை வென்றெடுக்காமல், உற்பத்திச் சாதனங்கள் பாட்டாளி வர்க்கத்திடம் கிடைக்காமல் சோஷலிசத்துக்கு மாற முடியாது என்று எடுத்துக் காட்டினார்.

பாட்டாளி வர்க்கப் புரட்சி ஏற்கெனவே வெற்றியடைந்த பிறகு சோஷலிச நிர்மாணத்தில் கூட்டுறவின் பாத்திரம் முற்றிலும் வேறு விஷயமாகும். ''ஆகவே பழைய கூட்டுறவாளர்களுடைய கனவுகளில் கற்பனையாகவும், ஏன் புத்தார்வ மனப்பாங்காகவும், கொச்சையாகவும் கூட இருந்தவை பலவும் இப்



படிப்பகம்

www.padippakam.com

பொழுது அப்பட்ட எதார்த்த உண்மையாகி வருகின்றன.'' * தலைமையான பொருளாதார நிலைகள் (தொழில்துறை, போக்குவரத்து, வங்கிகள், நிலம், வெளிநாட்டு வர்த்தகம்) சோவியத் அரசிடம் இருக்குமானால், தொழிலாளி வர்க்கத்துக்கும் விவசாய வர்க்கத்துக்கும் கூட்டணி இருந்து அதில் பிந்தியதைப் பொறுத்த மட்டில் முந்தியது வழிகாட்டும் பாத்திரத்தை வகிக்குமானால் கூட்டுறவு முறையின் மூலம் சோஷலிஸ்ட் சமூகத்தை நிர்மாணிப்பதற்கு அவசியமான முன்நிபந்தனைகள் இருக்கின்றன என்று அர்த்தமாகும். கூட்டுறவு இயக்கத்தின் வளர்ச்சி சோஷலிஸ்ட் நிர்மாணத்தின் வெற்றிக்குச் சான்று என்று லெனின் கருதினார். ''விவசாயிகள் அனைவரும் கூட்டுறவுகளில் ஒன்று திரட்டப்பட்டிருப்பார்களாயின் இப்பொழுது நாம் சோஷலிசத்தில் இரு கால்களையும் ஊன்றிக் கெட்டியாய் நின்று கொண்டிருப்போம்.'' **

தேசிய அளவில் கூட்டுறவு என்னும் கருத்தையும் லெனின் முன்னரே முன்வைத்தார். எனினும் புதிய நிலைமைகளில் பழைய கருத்துக்குத் திரும்பியது முன்னே வைத்த மா பெரும் காலடியாகும். 1921—1922ம் வருடங்களின் போது கூட்டுறவு முறை என்பது வளர்ச்சியின் இடைநிலைக் கட்டமாக, விவசாயப் பொருளாதாரத்தைத் தூண்டுகின்ற

* அதே இடம்.

** அதே நூல், பக்கம் 303.



வழியாகவே அடிக்கடி கருதப்பட்டது. கூட்டுறவு முறையை சுதந்திரமான பொருளாதார மற்றும் சமூக அமைப்பாக வைத்துக்கொள்ள வேண்டிய அவசியத்தை புதிய பொருளாதாரக் கொள்கை நடைமுறையில் நிரூபித்துவிட்டது.

கூட்டுறவு முறை பண்ட-பண உறவுகளின் மூலம் சந்தையில் தன்னுடைய பொருளாதாரச் செயல்களைத் திரும்ப மேற்கொண்டது. கூட்டுறவு மக்களின் புதிய ரக ஸ்தாபனம், முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்துக்கு மாறும் கட்டத்தின் நிலைமைகளில் தனியார் முதலாளித்துவ மற்றும் அரசுத் துறைகளுடன் சேர்ந்து இருக்கின்ற விசேஷமான, சுதந்திரமான பொருளாதார ரகம் என்று லெனின் எழுதுவது சாத்தியமாயிற்று.

கூட்டுறவு முறை அதன் கோட்பாடுகளை (சுதந்திரமான நடவடிக்கை, சுயபலம், நிர்வாகத்தில் உழைக்கும் மக்கள் பங்கெடுத்தல், நிர்வாகிகளைத் தேர்ந்தெடுத்தல், இதரவை) அமுலாக்கி வளர்க்கின்ற பொழுது அரசு நிறுவனங்களின் சில கூறுகளை — பொருளாதாரத்தைத் திட்டமிடுதலிலும் அமைத்தலிலும் மத்தியத்துவம், தேசிய நலன்களைப் பாதுகாத்தல், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் என்னும் வர்க்கக் கொள்கையைப் பின்பற்றுதல் — மேற்கொண்டது. விவசாய உற்பத்தியில் கூட்டுறவின் விசேஷமான பாத்திரத்தை இங்கே வலியுறுத்த வேண்டும்; குலாக்குகளான கிராமப் பகுதிகளின் முதலாளி வர்க்கத்துக்கு எதிரான போராட்டத்தில் அது தனிவகையான



படிப்பகம்

www.padippakam.com

வர்க்கத்தன்மையை, சோஷலிஸ்ட் தன்மையைக் கொண்டிருந்தது. கிராமப் பகுதிகளில் சோஷலிஸ்ட் உற்பத்தி உறவுகள் நிறுவப்பட்ட பொழுது உற்பத்திக் கூட்டுறவு ஸ்தாபனங்கள் விவசாயத்தில் கூலி உழைப்பைப் பயன்படுத்த முடியாதபடி செய்தது மட்டுமின்றி, வர்க்கம் என்ற முறையில் குலாக்குகளை ஒழிப்பதற்கு அவசியமான நிலைமைகளையும் உருவாக்கின. ஆகவே புதிய பொருளாதாரக் கொள்கையின் கீழ் கூட்டுறவு முறை கட்சி மற்றும் சோவியத் அரசாங்கத்தின் கொள்கையை சுறுசுறுப்பாக அமுலாக்கியது. அதே சமயத்தில் சிறு பண்ட உற்பத்தியின் மொத்த அளவை உயர்த்தி தொழிலாளி வர்க்கம் மற்றும் விவசாய வர்க்கத்தின் ஒற்றுமையை பலப்படுத்தியது.

எனினும் சிறு விவசாயப் பண்ணைகளை சோஷலிஸ்ட் முறையில் புனரமைப்பதற்குக் கூட்டுறவு முறையே துல்லியமாக மிகவும் உசிதமான வடிவமாக இருப்பது ஏன்?

**கூட்டுறவு குறித்து** என்னும் கட்டுரையில் லெனின் இக்கேள்விக்கும் கூட பதிலளிக்கிறார். பாட்டாளி வர்க்க அரசு துல்லியமாகக் கூட்டுறவு முறையின் மூலமாகவே உழைக்கும் விவசாயிகளின் தனிப்பட்ட நலன்களை மொத்த சமூகத்தின் நலன்களுடன் மிகப் பொருத்தமான முறையில் இணைக்கிறது, விவசாயிகளின் உற்பத்தி நடவடிக்கைகளைத் தொடர்ச்சியான கட்டுப்பாட்டுக்கு உட்படுத்துகிறது, தனிப்பட்ட வர்த்தக நலன்களை



எல்லா உழைக்கும் மக்களின், மொத்த சமூகத்தின் பொதுவான நலன்களுக்குக் கீழ்ப்படுத்துகிறது.

கூட்டுறவு முறை முதலில் அதன் மிக எளிமையான வடிவங்களில் (விற்பனைக் களம், அளிப்பு, நுகர்வு மற்றும் கடன் வழங்குதல்), பிறகு அதன் உற்பத்தி வடிவத்தில் லட்சக் கணக்கான விவசாயிகள் சிறு அளவு பண்ணையிலிருந்து பெரிய அளவான கூட்டு விவசாயத்துக்கு மாறுவதற்கு மிகச் சுலபமான, எளிமையான, அணுகத்தக்க வழியாக இருக்கிறது என்பது முக்கியமாகும். இது மிக முக்கியமானது; ஏனென்றால் சோஷலிசத்தை உழைக்கும் மக்களால் மட்டுமே நிர்மாணிக்க முடியும் என்பது எல்லோரும் அறிந்த விஷயம். ஒவ்வொரு விவசாயியும் சோஷலிச நிர்மாணத்தில் பங்கெடுப்பதைக் கூட்டுறவு முறை சாத்தியமாக்குகிறது என்ற உண்மை இந்த நோக்கத்திலிருந்து கூட்டுறவு முறையின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டும். ஏழை விவசாயிகள் மற்றும் நடுத்தர விவசாயிகளின் — சிற்சில அடுக்குகளை அல்ல — மொத்தத் திரளினரையுமே ஒன்று சேர்ப்பதற்குக் கூட்டுறவு முறையின் மூலமாகவே வழி கண்டுபிடிக்கப்பட்டது. இதைப் பற்றி லெனின் பின்வருமாறு எழுதினார்: ''இதுவும் அடிப்படை முக்கியத்துவத்துக்குரியதே. எல்லா வகையான தொழிலாளர் சங்கங்களைக் கொண்டும் சோஷலிசத்தைக் கட்டியமைப்பது குறித்து விபரீதத் திட்டங்களை வகுப்பது



படிப்பகம்

www.padippakam.com

ஒன்று; ஆனால் நடைமுறையில் சோஷலி சத்தைக் கட்டப் பயில்வது, ஒவ்வொரு சிறு விவசாயியும் அதில் பங்கெடுத்துக் கொள்ளும்படியான முறையில் சோஷலிசத்தைக் கட்டப் பயில்வது முற்றிலும் வேறொன்று. இப்பொழுது நாம் வந்தடைந்திருப்பது இதே கட்டத்தைத்தான்.'' *

சோஷலிசத்தை நிர்மாணிக்கின்ற வடிவமாகக் கூட்டுறவு முறையைப் பயன்படுத்துவது தொழிலாளி வர்க்கத்துக்கும் உழைக்கும் விவசாயி வர்க்கத்துக்கும் பொருளாதார ரீதியிலும் அரசியல் ரீதியிலும் லாபகரமானது என்பதை லெனின் சிறப்பாக நிரூபித்தார். அரசியல் ரீதியில் விவசாயிகளின் உற்பத்திச் சாதனங்களைக் கூட்டுறவு முறையின் மூலம் பொதுவாக்குவது (தொழில்துறையில் முதலாளி வர்க்கத்தின் உடைமையைப் பறிமுதல் செய்வதற்கு மாறாக) விவசாயிகளின் வர்க்க இயல்பு, அதன் குட்டி நிலவுடைமையாளர் மனோபாவத்தைக் கணக்கிலெடுத்துக் கொண்டு செய்யப்படுகிறது. விவசாய பொருளாதார அமைப்பைத் திடீரென்று சீர்குலைத்து விடாமல் அதைச் செய்ய முடியும்; அது பாட்டாளி வர்க்க அரசின் சமூக அரசியல் அடிப்படையை, தொழிலாளி வர்க்கம் மற்றும் விவசாய வர்க்கத்தின் கூட்டணியை அழித்துவிடாமல், அதை வலுப்படுத்துவதற்கு உதவும்.

புதிய அரசாங்கம் அழிக்காமல் பாதுகாக்க, புனரமைக்க, வளர்க்க, பூரணமாக்க வேண்டிய முதலாளித்துவ சமூகத்தின் ஒரே இயந்திரம் கூட்டுறவு முறையே. பெருந்திரளான மக்களைக் கொண்ட ஸ்தாபனம் என்ற முறையில் அது மக்களின் முன்முயற்சியைத் தூண்டுகிறது, புதிய அரசு நாட்டின் உணவு சப்ளைகளைச் சரிப்படுத்துவதற்கு உதவுகிறது. கூட்டுறவு முறையின் மூலம் தனியார் மூலதனம் கட்டுப்படுத்தப்பட்டு வர்த்தகச் செலாவணியிலிருந்து அகற்றப்படுகிறது, பெருந் தொழில்துறைக்கும் சிறிய விவசாயப் பண்ணைகளுக்கும் இடையில் பொருளாதாரப் பிணைப்புகள் வலுப்படுத்தப் படுகின்றன.

சிறு பண்ட உற்பத்தியை சோஷலிஸ்ட் முறையில் புனரமைக்கின்ற கருவி என்ற முறையில் கூட்டுறவின் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டிய பிறகு மக்களை ஒழுங்கமைப்பதற்கு ஒரு புதிய கோட்பாடு என்ற முறையில் அதை வலுப்படுத்துவதற்குரிய அடிப்படையான வழிகளையும் லெனின் சுட்டிக் காட்டினார். கிராமப் பகுதிகளில் இளம் கூட்டுறவு முறைக்கு சகல துறைகளிலும் மேன்மேலும் அதிகரிக்கின்ற உதவியளிப்பது சிறு பண்ட விவசாயப் பொருளாதாரத்தை சோஷலிஸ்ட் ரீதியில் புனரமைப்பதற்குத் தீர்மானமான முன்நிபந்தனை என்பதை 1921 – 1922ம் வருடங்களின் அனுபவம் எடுத்துக் காட்டியது; அப்பொருளாதாரம், குறிப்பாக அதன் ஆரம்பக் கட்டங்களில் பல கஷ்டங்களைச் சந்தித்துக் கொண்டிருந்தது. இதைப் பற்றி

* அதே நூல், பக்கம் 294.





படிப்பகம்

www.padippakam.com

லெனின் பின்வருமாறு எழுதினார்: "குறிப்பிட்ட ஒரு வர்க்கத்தின் நிதி ஆதரவு இருந்தால்தான் ஒரு சமுதாய அமைப்பு தோன்ற முடியும். தற்போது நாம் வழக்கத்தை விட அதிகமாய் உதவி அளிக்க வேண்டிய சமுதாய அமைப்பு கூட்டுறவு அமைப்பே." *

கூட்டுறவு முறைக்கு அரசு பொருளாதார, நிதி மற்றும் வங்கி உதவிகளையும் சலுகைகளையும் அளிக்க வேண்டும். கூட்டுறவுத் துறைக்குத் தனிப்பட்ட நிறுவனங்களைக் காட்டிலும் அதிகமான அரசுக் கடன்கள் கொடுக்கப்பட வேண்டும். இந்த இனத்தில் "பெருந்திரளான மக்கள் தொகையினர் நடைமுறையில் பங்கெடுத்துக் கொள்ளும்" கூட்டுறவு ஸ்தாபனங்களுக்குப் பொருளாயத உதவி அளிக்க வேண்டும். "கூட்டுறவு வர்த்தகத்தில் பங்கு கொள்ளும் விவசாயிக்கு போனஸ் தருவது சரியானதோர் உதவி முறைதான், ஆனால்... இந்தப் பங்கின் இயல்பையும், அதில் அடங்கியுள்ள உணர்வையும், அதன் தன்மையையும் சரிபார்த்து உறுதி செய்து கொள்ள வேண்டும்". ** மேலும், கூட்டுறவுகளில் சேரும்படி மக்களை ஊக்குவித்தல், கூட்டுறவுச் சங்கங்களின் பொருளாயத அடிப்படையை வலுப்படுத்த உதவுதல், கூட்டுறவு நடவடிக்கையில் "நாகரிகமான" முறைகளை, அதாவது தனியார் தொழில் முயற்சியுடன்

---

* அதே நூல், பக்கங்கள் 295–296.

** அதே நூல், பக்கம் 296.



போட்டியிட்டு வெற்றி பெறுவதைச் சாத்தியமாக்குகின்ற முறைகளை அமுலாக்குதல் ஆகிய மூன்று கடமைகளை நிறைவேற்றுவதற்குத் தகுந்த போனஸ் முறையைக் கண்டுபிடிக்க வேண்டியிருந்தது.

லெனின் கூட்டுறவு முறையை சோஷலிஸ்ட் பொருளாதாரத்தின் வளர்ச்சி மற்றும் பலப்படுத்தலோடு சேர்த்துப் பார்த்தார். விவசாயத்தை சோஷலிஸ்ட் ரீதியில் புனரமைப்பதில் வளர்ச்சியடைந்த வேளாண்மை இயந்திரங்களை உபயோகிப்பதன் விசேஷ முக்கியத்துவத்தை அவர் பன்முறை வலியுறுத்தினார். தொழில்துறையின் வளர்ச்சி கிராமப் பகுதிகளில் சோஷலிஸ்ட் மாற்றத்துக்குத் தீர்மானமான முக்கியத்துவத்தைக் கொண்டிருப்பதாக லெனின் கருதினார். கனரகத் தொழில்துறை சோஷலிஸ்ட் சமூகத்தின் ஒரே பொருளாயத அடிப்படை, தேசியத் தொழில் துறையின் வளர்ச்சி கிராமப் பகுதிகளில் சோஷலிச நிர்மாணத்துக்குத் தலைமையான முன்நிபந்தனை என்று அவர் கற்பித்தார். கிராமங்களுக்குப் புதிய இயந்திரங்களைக் கொடுப்பதற்கு, விஞ்ஞான சாதனைகளை விவசாய வர்க்கத்துக்கு, விவசாய கூட்டுறவுக்குக் கொடுப்பதற்கு தொழில்துறை வளர்ச்சி பெறுவது அவசியம். 1919 மார்ச்சில் 8வது கட்சிக் காங்கிரசில் பேசுகின்ற பொழுது லெனின் பின்வருமாறு கூறினார்: "நாளையே நூறாயிரம் முதல் தரமான டிராக்டர்களையும் அவற்றுக்குத் தேவைப்படும் எரிபொருளையும்



படிப்பகம்

www.padippakam.com

அவற்றை இயக்குவதற்கு ஓட்டுநர்களையும் நாம் கொடுத்தால் — இன்றைய நிலைமையில் இது வெறும் கட்டுக்கதை என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும் — ‘நான் கம்யூனியாவை (அதாவது கம்யூனிசத்தை) ஆதரிக்கிறேன்’ என்று நடுத்தர விவசாயி கூறுவார்.’’ * பொருளாயத அடிப்படை, இயந்திரங்கள் மற்றும் மின்சார சக்தி மட்டுமே சிறு விவசாயிகள் மற்றும் நடுத்தர விவசாயிகளின் மனோபாவத்தை மாற்றி விவசாய பண்ணைகளை உற்பத்திக் கூட்டுறவுகளாக மாற்றுவதை வெற்றிகரமாகச் செய்வதற்கு அவசியமான நிலைமைகளை உருவாக்கும் என்று லெனின் திரும்பத் திரும்ப வலியுறுத்தினார்.

உழைக்கும் விவசாயிகளைக் கூட்டுறவு முறையின் மூலம் சோஷலிச நிர்மாணத்தில் ஈடுபடுத்துகின்ற அடிப்படைக் கோட்பாடுகளை லெனின் வளர்த்துக் கூறினார், சிறு விவசாயிகளைக் கூட்டுறவு அமைப்புக்குள் கொண்டுவரக் கூடிய முறைகளையும் வழிகளையும் எடுத்துரைத்தார்.

விவசாயிகள் தாமே விருப்பப்பட்டு சேருதல், நிர்ப்பந்தங்களைத் தவிர்த்தல் கூட்டுறவின் முக்கியமான கோட்பாடு என்று லெனின் கருதினார், வெறும் நிர்வாக உத்தரவுகளை வெளியிடுகின்ற முறையை உறுதியாக எதிர்த்தார். விவசாயிகளுக்கு விளக்கமளித்தல், இணங்குவித்தல் ஆகிய முறைகளை உபயோகித்து அவர்களிடம் சித்தாந்தத் தாக்கத்தை ஏற்படுத்துவது அவர்களுடைய தனியார் உடைமை மனோபாவத்தின் எச்சங்கள், அறியாமை, வர்க்க உணர்வு இல்லாமை, பின்தங்கிய நிலைமை ஆகியவற்றை அகற்றுவதில், கூட்டு உழைப்புப் பழக்கங்களை ஊக்குவிப்பதில் தீர்மானமான முக்கியத்துவத்தைக் கொண்டிருந்தன. விவசாயிகள் கூட்டு விவசாயத்தின் நன்மைகளைத் தம்முடைய சொந்த அனுபவத்தில் பார்த்து எவ்விதமான நிர்ப்பந்தமும் இன்றி, விருப்பபூர்வமாக கூட்டு உழைப்புக்கும் அடிப்படையான உற்பத்திச் சாதனங்களின் கூட்டுடைமைக்கும் மாற வேண்டும். விவசாயத்தில் கூட்டு உழைப்பை முதலில் விற்பனைக்களம், சப்ளை மற்றும் நுகர்வுத் துறையிலும், பிறகு உற்பத்தித் துறையிலும் அமுலாக்குவதை இக்கோட்பாடு சாத்தியமாக்குகிறது. பெரிய சோஷலிஸ்ட் கூட்டுறவுகளில் சேர்ந்து நிலத்தைக் கூட்டாக உழுது பயிரிடுவதன் நன்மைகளை விவசாயிகளுக்கு விளக்கிச் சொல்லாமல், ‘‘இந்தக் கருத்தை ஆயிரம், பல்லாயிரம் தடவைகள் எடுத்துச் சொல்லாமல் விவசாயிகளின் விரிவான பெருந்திரளினர் இதில் அக்கறை எடுத்துக் கொள்வார்கள், அதை அமுல் நடத்தத் தேவையான முறைகளைப் பற்றி செய்முறையான பரிசோ

* வி. இ. லெனின், **சோவியத் ஆட்சியதிகாரமும் விவசாயிகளின் நிலைமையும்,** முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, *1983*, பக்கம் 67.



படிப்பகம்

www.padippakam.com

தனைகளில் ஈடுபடுவார்கள் என்று நாம் எதிர் பார்க்க முடியாது''* என்று லெனின் வலி யுறுத்தினார்.

கூட்டுறவின் ஆக எளிமையான வடிவங் களிலிருந்து (நுகர்வு மற்றும் விற்பனைக்களம்) ஆக உயர்ந்த வடிவத்துக்கு (உற்பத்தி) படிப் படியாக மாறுவது எவ்விதத்திலும் குறையாத முக்கியத்துவத்தைக் கொண்டதாக லெனின் கருதினார்.

விற்பனைக்களம், சப்ளை மற்றும் நுகர்வு சம்பந்தப்பட்ட மிக எளிமையான கூட்டுறவு வடிவங்களில் ஏழை விவசாயிகளும் நடுத் தரமான விவசாயிகளும் பங்கெடுப்பதற்கு விசேஷமான பயிற்சி அவசியமல்ல; அதில் பொருளாதார ஆபத்து இல்லை, அது சோஷ லிசத்துக்கு மாறுவதை சுலபமாக்குகிறது. ஆனால் கூட்டுறவின் ஆக எளிமையான வடிவங்கள் சிறு தனியார் விவசாய நிலவுடை மையில் உள்ளுறையான உற்பத்தியின் தன்மை யை மாற்றவில்லை, அது நிலத்தில் கூட்டு விவசாயத்துக்கும் இட்டுச் செல்வதில்லை. இந்த மாற்றம் கூட்டுறவின் ஆக உயர்ந்த வடிவங்களான உற்பத்திக் கூட்டுறவுச் சங்கங் களின் (அதாவது நிலத்தில் கூட்டாக விவ சாயம் செய்வதற்கான சங்கங்கள், விவசாய ஆர்ட்டெல்கள், கம்யூன்கள், இதரவை) மூல மாக மட்டுமே நடைபெற முடியும். கூட்டுறவின்

* வி. இ. லெனின், சோவியத் ஆட்சியதிகாரமும் விவசாயி களின் நிலைமையும், பக்கம் 72.



ஆக எளிமையான வடிவங்களிலிருந்து உற்பத்தி மற்றும் வினியோகம் சம்பந்தப்பட்ட மிகப் பல்தொகுதியான வடிவங்களுக்குப் படிப்படி யாக மாறுவதற்கும் தற்செயலுக்கும் எத்தகைய சம்பந்தமும் கிடையாது. கிராமப் பகுதிகளில் சோஷலிஸ்ட் மாற்றம் தொழிலாளி வர்க்கம் மற்றும் அதன் கட்சியின் வழிகாட்டுதலின் மூலம் மட்டுமே சாத்தியம் என்பதை லெனின் பன்முறை வலியுறுத்தினார். விவசாயிகள் பெரிய அளவு கூட்டு விவசாயத்தின் நன்மை களைப் பற்றி நடைமுறையில் புரிந்து கொள் வதற்கு முதல் கூட்டு உழைப்புப் பண்ணை களைப் பாதுகாத்து வலுப்படுத்துவதில் கட்சியும் தொழிலாளர் அரசும் அக்கறை காட்ட வேண்டும் என்று லெனின் அறைகூவினார். மக்கள் அனைவரும் பகுத்தறிவுடன் விவசாயம் செய்வதற்கு லெனின் விசேஷமான முக்கியத் துவம் அளித்தார்.

லெனின் பொருளாதாரப் பிரச்சினைகளின் தீர்வைக் கலாசாரப் புரட்சியுடன் பிரிக்க முடியாதபடி இணைத்தார். சோஷலிசம் ஒரு புதிய பொருளாதார அமைப்பையும் அரசியல் கட்டமைப்பையும் முன்னூகிப்பதுடன் கூட ஒரு புது ரகமான கலாசாரத்தையும் விஞ்ஞானம், இலக்கியம், கலை ஆகிய துறைகளில் புதிய வளர்ச்சியையும் புதிய மனித ஆளுமையை உருவாக்குவதையும் முன்னூகிக் கிறது. விவசாய வர்க்கத்தின் பரிபூரண கூட் டுறவைப் பெறுவதற்கு ஒரு மொத்த வரலாற்று சகாப்தம் தேவைப்படும், மிகவும் சாதகமான



படிப்பகம்

www.padippakam.com

நிலைமைகளில் அது ஒன்று அல்லது இரண்டு பத்தாண்டுகளாக இருக்கும் என்று லெனின் கூறினார். அக்காலகட்டத்திற்குள் பெரிய அளவு விவசாயத்தின் பொருளாயத மற்றும் தொழில்நுட்ப அடிப்படையை உருவாக்க வேண்டும், மக்களின் கலாசாரத் தரத்தைக் கணிசமாக உயர்த்த வேண்டும்.

இப்பிரச்சினைகளை இயன்ற அளவுக்கு வேகமாகத் தீர்ப்பதற்குப் புரட்சிகர ஊக்கம், சக்தி மற்றும் உற்சாகம் மதிநுட்பமான, கல்வி மற்றும் பண்பாடுள்ள வர்த்தகராக இருக்கும் திறமையுடன் இணைக்கப்பட வேண்டும். நடவடிக்கையின் மையத்தை சமாதான, அமைப்பு ரீதியான ''கலாசார வேலைக்கு'' மாற்ற வேண்டும், பரிபூரணமான கூட்டுறவுக்கு ''மொத்த கலாசாரப் புரட்சி'' தேவையாக இருக்கும் என்று லெனின் சுட்டிக்காட்டினார். முக்கியமான பிரச்சினைகளில் ஒன்று என்ற அளவில் அரசுப் பொறியமைவைப் புனரமைத்து அதன் அமைப்பையும் வேலையையும் அபிவிருத்தி செய்வதை அவர் வற்புறுத்தினார். சோவியத் அரசு, பொருளாதார மற்றும் கூட்டுறவு நிறுவனங்களிலிருந்து அதிகார வர்க்கத்தினரையும் காலதாமதம் செய்பவர்களையும் நீக்குவது அவசியம்; இன்னும் சிறப்பான அமைப்பை ஏற்படுத்த வேண்டும்; வீண் செலவைக் குறைக்க வேண்டும்; எல்லா ஊழியர்களும் நெகிழ்ச்சியாக, திறமையாக, துல்லியமாக, ஒத்திசைவாக வேலை செய்வதை உறுதி செய்ய வேண்டும்; முற்போக்கான அனுபவத்தைப் பகுப்பாய்வு செய்யக் கூடிய, பொதுமைப்படுத்தக் கூடிய, பரவச் செய்யக் கூடிய தகுதி மிக்க அலுவலர்களை வேலைக்கு வைத்துக் கொள்ள வேண்டும். விவசாய வர்க்கத்தைக் கூட்டுறவு சங்கங்களில் பரிபூரணமாகத் திரட்டுகின்ற நோக்கத்துடன் கலாசாரப் பணி புரிதல் அதை விட குறையாத முக்கியத்துவத்தைக் கொண்டது என்று லெனின் கருதினார்; ஏனென்றால் ''உற்பத்திச் சாதனங்களில் சமூக உடைமை இருக்குமாயின், பாட்டாளி வர்க்கமானது முதலாளிகளின் மீது வர்க்க வெற்றி பெற்று விடுமாயின், பண்பாடுடைய கூட்டுறவாளர்களின் அமைப்புதான் சோஷலிச அமைப்பு''.*

சோவியத் குடியரசில் கலாசாரப் புரட்சியின் பாதையில் ''முற்றிலும் கலாசாரத் தன்மையதான இடர்ப்பாடுகளையும் (ஏனெனில் நாம் எழுத்தறியாதோராய் இருக்கிறோம்), முற்றிலும் பொருளாயதத் தன்மையதான இடர்ப்பாடுகளையும் (ஏனெனில் கலாசார வளர்ச்சி பெறுவதற்கு நாம் பொருளாயத உற்பத்திச் சாதனங்களில் குறிப்பிட்ட ஓர் அளவு வளர்ச்சி அடைந்தாக வேண்டும், குறிப்பிட்ட ஒரு பொருளாயத அடித்தளத்தைப் பெற்றாக வேண்டும்)''** சமாளிக்க வேண்டியிருந்தது, மேலும் ''உலக அளவில் நாம் நமது நிலைக்

---

* வி. இ. லெனின், கூட்டுறவு குறித்து, பக்கம் *298.*
** அதே நூல், பக்கம் *303.*




படிப்பகம்

www.padippakam.com

காக போராடுவது''* அவசியமாகியுள்ள சமயத்தில் சர்வதேசத் தன்மையான கஷ்டங் களும் சேர்ந்துள்ளன. கம்யூனிஸ்ட் கட்சி இரண்டாவது அகிலத்தின் சந்தர்ப்பவாதத் தலைவர்களை எதிர்த்துப் போராட வேண்டி யிருந்தது. சிறு பண்ட விவசாயம் தலை மையாக இருக்கின்ற நாட்டில், தொழில் நுட்ப, பொருளாதார மற்றும் கலாசார ரீதியில் பின்தங்கியிருந்த நாட்டில் சோஷ லிசத்தை நிர்மாணிப்பது சாத்தியம் என்ற பிரச்சினை மிக்க் கூர்மையானதாகிக் கொண் டிருந்தது. குறைவான கலாசார நிலையைக் கொண்ட நாட்டில் சோஷலிசத்தை நிர் மாணிக்க முயற்சி செய்வது முட்டாள்தனம் என்று சந்தர்ப்பவாதிகள் கூறினார்கள். ''தத்துவத்தால் (எல்லா வகையான பகட்டுப் புலமையாளர்களது தத்துவத்தால்) விதிக்கப் பட்டதற்கு எதிர் முனையிலிருந்து நாம் தொடங்கி விட்டோம் என்பதையும், நமது நாட்டில் அரசியல் மற்றும் சமுதாயப் புரட்சி கலாசார மாற்றங்களுக்கும் இப்பொழுது நம்மை எதிர்நோக்கும் கலாசாரப் புரட்சிக்கும் முன்னதாகவே நடைபெற்றது என்பதையும் கூறி அவர்கள் தவறு செய்தார்கள்.

இந்தக் கலாசாரப் புரட்சி இப்பொழுது நம் நாட்டை முழுநிறை சோஷலிச நாடாக்கு வதற்குப் போதுமானதாகும்.''**

* அதே நூல், பக்கம் 302.

** அதே நூல், பக்கம் 303.

கூட்டுறவு குறித்து என்ற கட்டுரை சோஷ லிச நிர்மாணத்தைப் பற்றிய மார்க்சிய-லெனினிய போதனைக்கு மாபெரும் பங் களிப்பாக இருக்கிறது. சிறு விவசாய பண் ணைகளைப் பெரிய அளவு சோஷலிஸ்ட் விவசாயமாக மாற்றுவதில் கூட்டுறவுக்குரிய மாபெரும் பாத்திரத்தைப் பற்றி மார்க்ஸ், எங்கெல்சின் மேதாவிலாசமான சிந்தனை, அதை அடைவதற்குரிய வழிகளைப் பற்றிய ஸ்தூலமான பகுப்பாய்வின் மூலம் நிறைவாக் கப்பட்டது. ஆரம்பகாலக் கூட்டுப் பண் ணைகளிலிருந்து கூட்டுப் பண்ணை அமைப்பின் வெற்றி முடிய சோவியத் விவசாய வர்க் கத்தின் வளர்ச்சியின் வரலாறு கூட்டுறவின் பாத்திரத்தைப் பற்றி லெனின் போதனையின் சரியான தன்மை மற்றும் ஜீவசக்தியையும், விவசாயத்தை சோஷலிஸ்ட் முறையில் மாற்றி யமைக்கின்ற லெனின் திட்டத்தின் வெற்றி யையும் சிறப்பாக விளக்குகிறது.

லெனினுடைய கூட்டுறவுத் திட்டம் மா பெரும் சர்வதேச முக்கியத்துவத்தைக் கொண் டிருக்கிறது. விவசாயத்தை சோஷலிஸ்ட் முறையில் படிப்படியாகப் புனரமைத்தல் சோஷலிசத்துக்கு மாறுவதில் ஈடுபட்டுள்ள எல்லா நாடுகளிலும் உள்ளுறையான அம்சமா கும்.



படிப்பகம்

www.padippakam.com

## உற்பத்தி அல்லாத கூட்டுறவுகளின் ஆக எளிமையான வடிவங்கள்

ருஷ்யாவில் கூட்டுறவு இயக்கம் முதலாளித்துவ அமைப்பின் கீழ் தொடங்கியது; அது அன்றைய உற்பத்தி உறவுகளின் தன்மையைப் பிரதிபலித்தது. கூட்டுறவு ஸ்தாபனங்களில் பிரதானமாக குட்டி பூர்ஷ்வா மற்றும் விவசாயப் பகுதியினர் உறுப்பினர்களாக இருந்தார்கள். ருஷ்யத் தொழிலாளி வர்க்கத்தின் எண்ணிக்கை குறைவாக இருந்தபடியாலும் ஆட்சியிலிருந்த மேற்பகுதியினரது தீவிரமான எதிர்ப்பினாலும் தொழிலாளர் கூட்டுறவு சங்கங்கள் தொழில் கேந்திரங்களில் கூட அதிகமாக இல்லை.

முதல் உலக யுத்தத்தின் போது ருஷ்யாவில் நுகர்வு, தொழில் மற்றும் விவசாய கூட்டுறவு சங்கங்கள் கணிசமாக அதிகரித்தன. உதாரணமாக, 1914 – 1916ம் வருடங்களுக்கு இடையில் நுகர்வோர் கூட்டுறவு சங்கங்கள் இரண்டு மடங்குக்கும் கூடுதலாக அதிகரித்தன, உறுப்பினர்களின் எண்ணிக்கை சுமார் நான்கு மடங்கு அதிகரித்தது. 1917இல் ருஷ்யாவின் நுகர்வோர் கூட்டுறவு சங்கங்களில்



11,500,000க்கும் அதிகமான உறுப்பினர்கள் இருந்தார்கள். ஐரோப்பாவின் எல்லா நாடுகளிலும் கூட்டுறவுகளின் உறுப்பினர்களின் எண்ணிக்கையைக் காட்டிலும் இது அதிகம். 1917ம் வருடத்தின் ஆரம்பத்தில் ருஷ்யாவின் கூட்டுறவு சங்கங்களின் மொத்த பரிவர்த்தனை ஐரோப்பாவில் பிரிட்டனுக்கும் ஜெர்மனிக்கும் அடுத்தபடியாக மூன்றாவது இடத்தைப் பெற்றிருந்தது.

ஜாரிஸ்ட் அரசாங்கம் உலக யுத்தத்தின் தேவைகளினால் கூட்டுறவுகள் உள்பட பல்வேறு முதலாளித்துவ ஸ்தாபனங்களுடன் பிணைப்புகளைப் பலப்படுத்தும்படி நிர்ப்பந்திக்கப்பட்டது, கூட்டுறவின் எல்லா வடிவங்களின் வேகமான வளர்ச்சிக்கு இதுவும் ஒரு காரணமாகும். விவசாய விற்பனை மற்றும் சப்ளைக் கூட்டுறவுகள் ருஷ்யாவின் யுத்த இலாகாவுக்கு இலட்சக்கணக்கான பூடுகள்* தானியம், ஓட்ஸ், வைக்கோல், வெண்ணை, உலர்ந்த பழங்கள், இதரவற்றை சப்ளை செய்தன. இராணுவத்துக்கு அவசியமான உடைகள், காலணிகள் மற்றும் இதர பொருள்களுக்கு தொழில் கூட்டுறவுகள் அனுப்பாணைகளைப் பெற்றன. மொத்தத்தில், யுத்தத்துக்கு முந்திய காலகட்டத்துடன் ஒப்பிடுகின்ற பொழுது 1918ம் வருடத்தின்

* ஒரு பூடு என்பது 16 கிலோ எடைக்குச் சமம். — ப-ர்.



படிப்பகம்

www.padippakam.com

ஆரம்பத்துக்குள் கூட்டுறவு இயக்கம் சுமார் இரண்டு மடங்கு வளர்ச்சியடைந்திருந்தது.

கம்யூனிஸ்ட் கட்சியும் சோவியத் அரசாங்கமும் நாட்டின் வளர்ச்சியின் அரசியல் மற்றும் பொருளாதார நிலைமைகளைக் கணக்கிலெடுத்துக் கொண்டு கூட்டுறவு இயக்கத்துக்கு வழிகாட்டின. அவை ஒவ்வொரு கட்டத்திலும் சோஷலிஸ்ட் நிர்மாணக் கடமைகளை இயன்ற வரை ஆக முழுமையாகத் தீர்க்கக் கூடிய கூட்டுறவு வடிவங்களை வகுத்துத் தந்தன. முதலாவது உலக யுத்தம் மற்றும் பொருளாதாரச் சீர்கேட்டின் விளைவாக ருஷ்யாவில் பசியும் வேலையில்லாத் திண்டாட்டமும் ஏற்பட்டிருந்தன; பசியை அகற்றுவதற்கும் ஊகவர்த்தகத்தை எதிர்த்து உறுதியாகப் போராடுவதற்கும் கட்சி தீவிரமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டியிருந்தது. மக்களுக்கும் தொழில்துறைக்கும் அவசியமான எல்லாவற்றையும் அளிக்கக் கூடிய நிறுவனங்களை ஏற்படுத்த வேண்டியிருந்தது. பொருளாதார வளர்ச்சிக் காரணிகளாக தொழில் மற்றும் விவசாயக் கூட்டுறவுகள் இயங்கக் கூடிய சாத்தியங்களை சோவியத் அரசு ஆக்க முறையில் மதிப்பிட்டது. ஆனால் பெருந்திரளான மக்கள் விவசாயக் கூட்டுறவுகளை அமைக்க தயாராய் இருக்கவில்லை, அதற்கு அவசியமான பொருளாயத வளங்களும் ஸ்தாபன ரீதியான அனுபவமும் சோவியத் அரசாங்கத்திடம் இல்லை. ஆகவே உற்பத்திக்



கூட்டுறவின் ஆக எளிமையான வடிவங்களை அடிப்படையான முறையில் புனரமைக்கின்ற கடமை மேலும் சிறிது காலத்துக்குத் தள்ளி வைக்கப்பட்டது.

உணவுப் பற்றாக்குறைப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஒரே வழி நகரத்துக்கும் கிராமப் பகுதிகளுக்கும் இடையில் பண்டப் புழக்கத்தை சரியான முறையில் அமைப்பதுடன் இயன்ற வரை மிகக் குறைவான காலத்தில் தனியார் வர்த்தகத்தை ஒழிக்கக் கூடிய மத்தியப்படுத்தப்பட்ட வினியோக அமைப்பை ஏற்படுத்துவதுமாகும். இதற்கு முதலாவதாக, முதலாளித்துவ **நுகர்வுக்** கூட்டுறவை அடிப்படையில் மாற்ற வேண்டும்; ஏனென்றால் அரசு உறுப்புகள் தனியார் வர்த்தக நிறுவனங்களைக் காட்டிலும் கூட்டுறவுகளை சுலபமாகக் கட்டுப்படுத்த முடியும்.

சோவியத் குடியரசு முதலாளித்துவ ருஷ்யாவிடமிருந்து கிடைத்திருக்கின்ற கூட்டுறவுப் பொறியமைவை சோஷலிச நிர்மாணத்தின் நலன்களுக்காக உபயோகிக்க வேண்டும் என்பதை லெனின் *1918* முதல் *1919* வரை தன்னுடைய சொற்பொழிவுகளிலும் கட்டுரைகளிலும் அடிக்கடி வலியுறுத்தினார். ''கூட்டுறவு ஸ்தாபனங்கள் முதலாளித்துவப் பொறியமைவு. எனவே அவை **அரசியல் ரீதியாக** நம்பிக்கை வைப்பதற்குத் தகுதி உடையவை அல்ல, ஆனால் நிர்வாகத்துக்கும் நிர்மாணத்துக்கும் அவற்றை உபயோகிக்கின்ற கடமையை நாம் புறக்கணிக்கலாம் என்பது இதன் அர்த்தம்



படிப்பகம்

www.padippakam.com

அல்ல''* என்று லெனின் எழுதினார். உதிரியான கூட்டுறவு ஸ்தாபனங்களிலிருந்து ஒற்றை தேசிய கூட்டுறவு அமைப்புக்கு மாறுவதற்கு நடைமுறையில் நிறைவேறக் கூடிய மற்றும் பொருத்தமான வடிவங்களைக் கண்டுபிடிப் பதற்கு முதலாளித்துவக் கூட்டுறவு ஸ்தாபனங் களுடன் சமரசம் செய்து கொள்வது அவசி யம். அதே சமயத்தில் முதலாளித்துவ சக்தி களுடன் சமரசம் செய்துகொள்வதனால் சோவியத் ஆட்சியதிகாரம் ஒன்றையும் இழப் பதில்லை, ஏனென்றால் அது முதலாளி வர்க்கக் கூட்டுறவாளர்களுக்குக் குறிப்பிட்ட சலுகைகளைத் தருகின்ற பொழுதே அவர் களைக் கட்டுப்படுத்தி முன்னே செல்லும் படி தூண்டுகிறது என்று லெனின் சுட்டிக் காட்டினார்.

எனினும் பழைய, முதலாளி வர்க்கக் கூட்டுறவாளர்களில் சிலர் சோவியத் எதிர்ப்பு நிலையைப் பின்பற்றியதனால் அன்றைக் கிருந்த கூட்டுறவுப் பொறியமைவை உபயோ கித்து புதிய சப்ளை மற்றும் வினியோக அமைப்பை உருவாக்குவது மிகக் கடினமாக இருந்தது. இதன் தொடர்பாக நாட்டில் கூட்டுறவு எதிர்ப்பு உணர்ச்சிகள் மேன்மேலும் பலமடைந்தன. சில நகரங்களில், தொழிலா ளர்கள் பிரதிநிதிகளின் ஸ்தல சோவியத்துக்

* V. I. Lenin, "A Little Picture in Illustration of Big Problems," *Collected Works*, Vol. 28, 1977, p. 388.



கள் தம்முடைய சொந்த முடிவின் பேரில் கூட்டுறவு ஸ்தாபனங்களின் உடைமைகளைப் பறிமுதல் செய்தன அல்லது கூட்டுறவு நடவடிக்கைகள் மீது கண்டிப்பான கட்டுப் பாடுகளை ஏற்படுத்தின.

ஆகவே கூட்டுறவின் இடம் மற்றும் பாத் திரத்தைப் பற்றிய பிரச்சினையைத் தீர்க் கின்ற பொழுது கம்யூனிஸ்ட் கட்சி ஒரு பக்கத்தில் சில கூட்டுறவுத் தலைவர்களின் நாசவேலையை முறியடிக்க வேண்டியிருந்தது; மறு பக்கத்தில் பழைய, சாராம்சத்தில் முதலா ளித்துவக் கூட்டுறவு ஸ்தாபனங்கள் குறித்து ஸ்தல அதிகாரிகள் நெகிழ்ச்சியான அணுகுமுறையைக் கண்டுபிடிக்க உதவி புரிய வேண்டியிருந்தது.

சோவியத் அரசாங்கம் இத்தகைய சூழ் நிலையில் 1918ம் வருடத்தின் வசந்த காலத் தில் லெனினது முன்முயற்சியின் பேரில் பழைய கூட்டுறவாளர்களுடன் ஒரு சமரசம் செய்து கொண்டது. 1918 ஏப்ரலில் மக்கள் கமி ஸார்களின் கவுன்சில் **நுகர்வுக் கூட்டுறவுச் சங்கங்களைப் பற்றி** என்ற ஆணையை வெளி யிட்டது. அந்த ஆணையின் நகல் கூட்டுற வாளர்களின் கூட்டத்தில் முன்னதாகவே விவாதிக்கப்பட்டிருந்தது. லெனின் சுட்டிக் காட்டியபடி, ''அரசாங்கப் பற்றில்லாத கூட் டுறவு இயக்கத்தின் உறுப்பினர்களும் கம்யூ னிஸ்ட் மக்கள் கமிஸார்களும் பங்கெடுத்த ஒரே கூட்டம் இதுதான்.

நாங்கள் அவர்களுடன் உடன்பாட்டுக்கு வந்தோம். இக்கூட்டம் பெரும்பான்மை



படிப்பகம்

www.padippakam.com

யினரான கம்யூனிஸ்டுகளின் முடிவை நிறைவேற்றவில்லை; சிறுபான்மையினரான கூட்டுறவாளர்களது முடிவை ஏற்றுக் கொண்டது.'' * ''நாங்கள் அவர்களோடு கலந்து பேசினோம்; இதை ஏற்றுக் கொள்கிறீர்களா என்று கேட்டோம். இதை ஏற்றுக் கொள்ள முடியும், அதை ஏற்றுக் கொள்ள முடியாது என்று அவர்கள் பதிலளித்தார்கள்... அவர்கள் கேட்டுக் கொண்டபடி ஆணையிலிருந்து சில ஷரத்துக்கள் நீக்கப்பட்டன.'' * *

மிகக் குறைந்த வருமானம் உள்ளவர்கள் கூட்டுறவு ஸ்தாபனங்களில் உறுப்பினராவதற்குச் சாதகமான ஷரத்துக்கள் ஆணையில் இடம் பெற்றிருந்தன. அவர்களுக்கு சேர்ப்புக் கட்டணம் குறைவு; பங்குத் தொகையைப் பல தவணைகளில் கட்டுவதற்கு அனுமதிக்கப்பட்டது. நகர மற்றும் கிராம மக்களில் மிகவும் ஏழைகளாக இருந்தவர்களைக் கூட்டுறவு இயக்கத்துக்குள் கொண்டு வருவதற்கு இவை அவசியமாக இருந்தன. கூலித் தொழிலாளர்களை வேலைக்கு வைத்திருந்த தனியார் வர்த்தக மற்றும் தொழில் நிறுவனங்களின் சொந்தக்காரர்கள் கூட்டுறவு சங்கங்களின் நிர்வாகக் குழுக்களில் இடம் பெறுவது தடை செய்யப்பட்டிருந்தது மிக முக்கியமானதாகும். அந்த ஆணையின்படி பல பொருள்களைச் சேகரிப்பதற்கும் தயாரிப்பதற்கும், அவசியமான பண்டங்களைத் தயாரிப்பதற்கு சொந்த உற்பத்தியை அமைத்துக் கொள்வதற்கும் அனுமதிக்கப்பட்டது; இன்னும் முக்கியமானது என்னவென்றால் வரிகள், வாடகை மற்றும் இதரவற்றில் பெரிய சலுகைகளும் கொடுக்கப்பட்டன.

பழைய, முதலாளித்துவக் கூட்டுறவு ஸ்தாபனங்களைப் படிப்படியாக மாற்றியமைப்பதைப் பற்றி கட்சி செய்த முடிவு பொருளாதார நிர்மாணத்தின் பொதுத் திசையுடன் பொருந்தியிருந்தது. அவை சிக்கலின்றிச் சீரமைக்கப்படுவதை, ஏற்கெனவே இருந்த கூட்டுறவு வடிவங்களிலும் கூட்டுறவுப் பொறியமைவிலும் ஏற்றுக் கொள்ளப்படக் கூடியவற்றைத் தக்க வைத்துக் கொள்வதை அம்முடிவு உறுதிப்படுத்தியது. வர்த்தகத்தில் அதிக அனுபவமுள்ள நிபுணர்களை பாட்டாளி வர்க்க அரசு வேலைக்கெடுத்துக்கொள்வதற்கு, முதலாளித்துவ அமைப்பில் ஏற்கெனவே இருந்த கூட்டுறவு ஸ்தாபனங்களை சோஷலிஸ்ட் நிர்மாணத்தின் நலன்களுக்கு உபயோகிப்பதற்கு, கூட்டுறவை சோஷலிஸ்ட் அமைப்பாக மாற்றுகின்ற திசையில் நடவடிக்கைகளுக்குக் கட்சி பாடுபட்டது. அரசின் கட்டுப்பாட்டில் கூட்டுறவு முறையை மேலும் உபயோகிப்பதை

* V. I. Lenin, "Speech Delivered to a Meeting of Delegates from the Moscow Central Workers' Co-operative, November 26, 1918", *Collected Works,* Vol. 28, p. 199.

** V. I. Lenin, "Moscow Party Workers' Meeting, November 27, 1918", *Collected Works,* Vol. 28, p. 222.





படிப்பகம்

www.padippakam.com

நோக்கமாகக் கொண்ட பல நடவடிக்கைகளை சோவியத் அரசாங்கம் நிறைவேற்றியது.

சோஷலிஸ்ட் மற்றும் முதலாளித்துவ சக்திகளுக்கு இடையில் "யார் முந்துவது?" என்ற தீவிரமான போட்டி நடைபெற்ற காலத்தில் நுகர்வோர் கூட்டுறவு அமைப்பு முக்கியமான பாத்திரத்தை வகித்தது, நாட்டுப் பொருளாதாரத்தில் சோஷலிஸ்ட் துறையின் வளர்ச்சியை ஊக்குவித்தது. பொருளாதாரம் மீட்கப் பெற்ற முதல் இரண்டு வருடங்களில் பொருளாதார வாழ்க்கையின் மீது கூட்டுறவின் தாக்கம் கணிசமாக அதிகரித்திருந்தது. அதன் பொருளாயத அடிப்படை அபிவிருத்தியடைந்தது, அதிகமான மக்கள் அதில் ஈடுபட்டார்கள், பொருளாதார நடவடிக்கையின் வடிவங்கள் மேன்மேலும் பன்முகத்தன்மையைப் பெற்றன. கூட்டுறவு ஸ்தாபனங்களில் தொழிலாளி வர்க்கம் மற்றும் கம்யூனிஸ்ட் கட்சியின் நிலைகள் கணிசமாக பலமடைந்தன. கூட்டுறவு ஸ்தாபனங்களின் அடிப்படைச் செயல்கள் மிகவும் துல்லியமாக வரையறுக்கப்பட்டன; கூட்டுறவு ஸ்தாபனங்களுக்கும் அரசு உறுப்புகளுக்கும் இடையில் முன்னைக் காட்டிலும் பலமான, விரிவான பிணைப்புகள் ஏற்பட்டன. அரசு கூட்டுறவு ஸ்தாபனங்களுக்குப் பணமாகவும் சரக்குகளாகவும் அதிகமான கடன் வழங்கியது. மேலும் விலைகள், வரிவிதித்தல், இதரவற்றில் கூட்டுறவுகளுக்குச் சலுகைகள் அளிக்கப்பட்டன.

நுகர்வோர் கூட்டுறவு ஸ்தாபனங்களைத் தவிர சோவியத் அரசு 1918இல் பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு விவசாய மற்றும் தொழில் கூட்டுறவு ஸ்தாபனங்களையும் பயன்படுத்திக்கொள்வதில் வெற்றியடைந்தது. பெரும்பான்மையான கூட்டுறவு ஸ்தாபனங்களும் ஆர்ட்டெல்களும் அரசுடன் உடன்பாடு செய்து கொண்டு செஞ்சேனையின் அனுப்பாணைகளை நிறைவேற்றின; அவை அரசிடமிருந்து கடனாக மூலப்பொருள்களும் நிதியும் பெற்றன.

கிராமப் பகுதிகளில் கூட்டுறவுகளின் கடமை சாராம்சத்தில் இரட்டைத்தன்மை கொண்டிருந்தது. அவை விவசாயிகளை நுகர்பவனாக மட்டுமல்லாமல் உற்பத்தியாளன் என்ற முறையிலும் அணிதிரட்ட வேண்டியிருந்தது. கிராமப் பகுதிகளில் சோஷலிஸ்ட் மாற்றம் விவசாய வர்க்கத்துக்கு அணுக்கமான, அதனால் புரிந்து கொள்ளப்படக் கூடிய கூட்டுறவு வடிவங்களிலிருந்து ஆரம்பமாக வேண்டும் என்று லெனின் கற்பித்தார்; விவசாயிகள் உற்பத்திச் சாதனங்களில் உடைமையைத் தம்மிடம் வைத்திருக்கின்ற சப்ளை மற்றும் விற்பனை, விவசாய, நுகர்வு மற்றும் கடனுதவிச் சங்கங்கள் ஆகியவற்றிலிருந்து தொடங்க வேண்டும். விவசாய வர்க்கத்துக்குக் கூட்டுறவு ஒரு ஆரம்பப் பள்ளிக்கூடம்; அது கூட்டு விவசாய முறைகளை அவர்களுக்கு நடைமுறையில் கற்பிக்கிறது. கூட்டுறவு ஸ்தாபனத்தின் நிர்வாகக் கமிட்டி, தணிக்கைக் கமிஷன் மற்றும் இதர கமிஷன்களைத் தேர்ந்தெடுப்பதன் மூலம்



படிப்பகம்

www.padippakam.com

விவசாயப் பங்குதாரர்கள் நிர்வாகத்தில், சமூக நடவடிக்கையில் ஈடுபட்டார்கள். விவசாயிகள் ஒரு புதிய வாழ்க்கைக்கு மாறுவதற்கு மிகவும் சாத்தியமான வழி கூட்டுறவு வேலையில் அவர்கள் பங்கெடுப்பதே.

விவசாயக் கூட்டுறவின் கீழ் வடிவமாக **சப்ளை மற்றும் விற்பனை சங்கங்கள்** இருந்தன. அதில் விவசாயிகள் உற்பத்திச் சாதனங்களில் உடைமையை மட்டுமல்லாமல் தாங்கள் உற்பத்தி செய்த பொருள்களில் உடைமையையும் வைத்திருந்தார்கள். இக்கூட்டுறவுகள், விவசாயிகள் ஒரு பக்கத்தில் தம்முடைய உற்பத்திப் பொருள்களை நகர மக்களுக்கும் தொழில் துறைக்கும் விற்பனை செய்வதற்கும், மறு பக்கத்தில் தொழில்துறை உற்பத்திப் பொருள்களை (முக்கியமாக, கருவிகள் மற்றும் சிறு விவசாய இயந்திரங்கள்) வாங்குவதற்கும் உதவியளித்தன. கூட்டுறவு இம்முறையில் விவசாயிகளைக் குலாக்கு அடிமைத்தனத்திலிருந்து பாதுகாத்ததுடன் சோவியத் அரசு பண்டப் பரிவர்த்தனைத் துறையைக் கைப்பற்றுவதற்கு உதவியது. அது சோஷலிஸ்ட் தொழில்துறையையும் தனியார் விவசாயப் பொருளாதாரத்தையும் சந்தையின் மூலம் நெருக்கமாகக் கொண்டு வருவதற்கும் தொழிலாளி வர்க்கத்துக்கும் விவசாயி வர்க்கத்துக்கும் இடையில் கூட்டணியை வலுப்படுத்துவதற்கும் உதவி செய்தது.

கூட்டுறவு முறையின் ஆக எளிமையான வடிவங்களில் ஒன்றாக, ஆகவே விவசாயிக்கு



மிக நெருக்கமாக இருப்பது **நுகர்வுக் கூட்டுறவு சங்கங்கள்.** விற்பனைத் துறையைக் கூட்டுறவு மயமாக்குவதில் இவை முக்கியமான பாத்திரத்தை வகித்தன. பிற்காலத்தில் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் கிராமப் பகுதிகளில் நடைபெற்ற வர்த்தகத்தின் அடிப்படை முறையாக இருந்தன. விவசாயிகளுக்கு நுகர்வுப் பொருள்களையும் சில தொழில்துறைத் தயாரிப்புகளையும் கொடுத்து, அவர்களிடமிருந்து தொழில்துறைக்கும் நகர மக்களுக்கும் பயன்படுகின்ற விவசாயப் பொருள்களை வாங்குவதன் மூலம் நுகர்வுக் கூட்டுறவு சங்கங்கள் தொழிலாளி வர்க்கத்துக்கும் விவசாய வர்க்கத்துக்கும் இடையிலுள்ள பொருளாதார ஒத்துழைப்பை பலப்படுத்தின. இத்தகைய நிலைமைகளில் பண்டப் பரிவர்த்தனையானது, கூட்டுறவின் அடிப்படையில் தம்முடைய விவசாயத்தைப் புனரமைப்பதில் விவசாயிகளின் பொருளாயத அக்கறையைப் பேணி வளர்த்தது.

நுகர்வுக் கூட்டுறவுகள் சமூக ரீதியில் ஒன்றுபடுவதன் பலத்தையும் சாதகங்களையும் விவசாய வர்க்கத்திடம் தத்ரூபமான முறையில் எடுத்துக்காட்டி உற்பத்திக் கூட்டுறவுகளை அமைக்க வேண்டிய அவசியத்தை அவர்கள் படிப்படியாகப் புரிந்து கொள்ளும்படி செய்தன. சிறு பண்டப் பொருளாதாரத்தில் ஆழமாக வேரூன்றியிருந்த நுகர்வுக் கூட்டுறவுகள் லெனினுடைய கூட்டுறவுத் திட்டத்தை அமுலாக்குவதற்கு விவசாயிகளைத் தயாரிக்கும்





படிப்பகம்

www.padippakam.com

பிரதான வடிவமாக விற்பனைத் துறையில் இருந்தன.

சிறு விவசாயப் பொருளாதார வண்டிகளை சோஷலிஸ்ட் தண்டவாளத்தில் ஓடும்படி செய்வதை **கடனுதவிக் கூட்டுறவு சங்கங்கள்** ஓரளவுக்கு ஊக்குவித்தன. குலாக்குகளிடம் அடிமைப்படுதலை ஒழிப்பதற்காக ஏழை விவசாயிகளும் நடுத்தர விவசாயிகளும் கடனுதவிக் கூட்டுறவு சங்கங்களில் கடன் வாங்கினார்கள்; அவை பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் விவசாயப் பொருளாதாரத்தை உயர்த்துகின்ற நெம்புகோல்களில் ஒன்றாக இருந்தன. கிராமப் பகுதிகளில் கடனுதவிக் கூட்டுறவு சங்கங்கள் உடனடியாக இந்தப் பாத்திரத்தை வகிக்க முடியவில்லை என்பதை இங்கே குறிப்பிட வேண்டும். அக்டோபர் சோஷலிஸ்ட் புரட்சிக்குப் பிறகும் உள்நாட்டு யுத்தத்தின் போதும் கடனுதவிக் கூட்டுறவு சங்கங்கள் பெரிய அளவில் தம்முடைய நடவடிக்கைகளில் இறங்கும் நிலைமைகள் இல்லை; நடைமுறையில் சிறு அளவான இடைத்தரகர் வேலையை மட்டுமே அவை நிறைவேற்றின. புதிய பொருளாதாரக் கொள்கையின் கீழ் வேறு விசேஷமான கஷ்டங்களும் ஏற்பட்டன. கடனுதவிக் கூட்டுறவு அமைப்பை வளர்ப்பதற்குப் பணவியல் முறை நிலையான தன்மையைக் கொண்டிருக்க வேண்டும், அரசு கடனுதவி ஸ்தாபனங்கள் வாடிக்கையான முறையில் இயங்க வேண்டும். ஆனால்



அந்த சமயத்தில் அரசு நிதிகள், கடனுதவி முறை மற்றும் வர்த்தகம் அதிகமாகச் சீர்குலைந்திருந்தன. அதன் விளைவாக, கடனுதவிக் கூட்டுறவு சங்கங்கள் கூட்டுறவின் மற்ற வடிவங்களுக்குச் சிறிது பின்னரே செயல்படத் தொடங்கின.

உற்பத்தி அல்லாத கூட்டுறவின் எல்லா வடிவங்களும் தொழிலாளி வர்க்கத்துக்கும் உழைக்கின்ற விவசாய வர்க்கத்துக்கும் இடையில் சோஷலிஸ்ட் உறவுகளை நிறுவுவதற்கும் வளர்ப்பதற்கும், அக்கூட்டணியைப் பலப்படுத்துவதற்கும் இட்டுச் செல்கின்ற பொருளாதாரக் கொள்கையை சோவியத் ஆட்சியதிகாரம் பின்பற்றுவதற்கு உதவி செய்தன.

சோவியத் அரசாங்கத்தின் முதல் வருடங்களின் போது கூட்டுறவு சங்கங்கள் சகல வேலைகளையும் செய்தன. விவசாய கூட்டுறவு சங்கங்கள் விவசாய உற்பத்திப் பொருள்களை விற்பனை செய்தல், விவசாயிகளுக்கு வேளாண்மை இயந்திரங்களையும் கருவிகளையும் அளித்தல், கடனுதவி வழங்குதல், மூலப் பொருள்களைப் பதப்படுத்துதல், இதரவை முதலிய பொருளாதார நடவடிக்கையின் எல்லா அம்சங்களையும் நிறைவேற்றின. கிராமப் பகுதிகளில் பொருளாதார வளர்ச்சியிலிருந்த பலவீனம், விவசாயத்தின் குறைவான விற்பனைத் தன்மை, விவசாய உற்பத்தியின் சிறப்புத் தேர்ச்சியின் குறைவான மட்டம் ஆகியவை இதற்குக் காரணங்களாகும். புதிய பொருளாதாரக் கொள்கையின் அடிப்



5*

படிப்பகம்

www.padippakam.com

படையில் விவசாயச் சீரமைப்பு வெற்றி யடைந்து வளர்ச்சியடைந்த பிறகு கூட்டுறவு நடவடிக்கையின் தன்மையை மாற்றுவது சாத்தியமாயிற்று. விசேஷமான உற்பத்தி மற்றும் விற்பனைக் கூட்டுறவு சங்கங்கள் பல நோக்குக் கூட்டுறவு சங்கங்களுடன் சேர்ந்து வேகமாக வளர்ச்சியடையத் தொடங் கின. உற்பத்தி மற்றும் விற்பனைக் கூட்டுறவு சங்கங்களில் மூன்று ரகங்கள் இருந்தன: (1) விவசாயப் பொருள்களைப் பூர்வாங்கப் பதப்படுத்தலின்றி விற்பனை செய்யும் கூட் டுறவுகள் (பால் பொருள்கள், முட்டை, கோழி இறைச்சி, தேன், சர்க்கரை பீட் கிழங்கு, விதைகள், தோட்டப் பழங்கள், பருத்தி, காய்கறிகள்); (2) பதப்படுத்தப்பட்ட விவசாயப் பொருள்களை விற்பனை செய்யும் கூட்டுறவுகள் (வெண்ணெய், பாலேடு தயாரித் தல், உருளைக் கிழங்கு பாதி தயாரான பொருள்கள், புகையிலை மற்றும் ஒயின் தயாரித்தல்) மற்றும் (3) விவசாய உற்பத்திக் கூட்டுறவுகள். இந்த உற்பத்திக் கூட்டுறவுகள் விவசாயிகளின் உற்பத்திச் சாதனங்களைப் பொதுமை ஆக்காமல் நிறுவப்பட்டன; அவை எளிமையான வடிவத்தைக் கொண்டிருந்ததுடன் ஒரு குறிப்பிட்ட துறையில் (பயிர், கால்நடை வளர்ப்பு, விதைத்தல், இயந்திரங்கள், நில அபிவிருத்தி மற்றும் இதரவை) மட்டுமே செயல்பட்டன.

ஆக எளிமையான உற்பத்திக் கூட்டுறவு களின் முக்கியமான வடிவம் என்ற முறையில்



**விதைப் பயிர் கூட்டுறவு சங்கங்கள்** விவசாயி களுக்குப் பொறுக்கு விதைகளையும் பருப்பு வகைகள், தொழில்துறைப் பயிர்கள் மற்றும் காய்கறி செடிகளில் உயர்ந்த ரகங்களையும் கொடுத்து உதவி செய்தன.

**கால்நடை வளர்ப்புக் கூட்டுறவுகள்** உயர் ரகக் கால்நடைகளைக் கொண்டு அவற்றின் தரத்தை அபிவிருத்தி செய்து உற்பத்தித் திறனை அதிகப்படுத்தின. உழைக்கும் விவசாயிகள் குலாக்குகளைச் சார்ந்திருப்பதை ஒழிப்பதற்கு இவ்விரு வகை சங்கங்களும் உதவியாக இருந்தன.

**விதைக்கும் சங்கங்கள்** கூட்டுறவின் உயர் வடிவமாக இருந்தன. அவை விவசாயி களுக்குப் பொறுக்கு விதைகளைக் கொடுக்க வேண்டும் என்பதோடு, பல குடும்பங்கள் — கிராமங்கள் கூட — கூட்டாக ஈடுபட வேண்டிய வேளாண்மை நுட்ப நடவடிக்கைகளின் மொத்தத் தொகுதியையும் நிறைவேற்ற வேண்டும் என்று ஒப்பந்தங்களில் குறிப்பிடப் பட்டிருந்தது. ஆகவே இந்த ஒப்பந்தங்கள் தனிப் பட்ட விவசாயிகளுடன் அல்ல — விவசாய சங்கங்க ளுடன் நிறைவேற்றப்பட்டன. 1928இல் தனிப் பட்ட விவசாயிகளுடன் செய்து கொள்ளப் பட்ட ஒப்பந்தங்கள், மொத்த ஒப்பந்தப் பிரதேசத்தில் 31.3 சதவிகிதமாக இருந்தன; 1929இல் அது 0.7 சதவிகிதமாகக் குறைந்து விட்டது. 1929ம் வருடத்தின் வசந்த காலத் திலிருந்து அரசு விவசாய சங்கங்களுக்கு டிராக்டர்கள், இயந்திரங்கள் மற்றும் இதர



படிப்பகம்

www.padippakam.com

வேளாண்மை உதவிகளை நேரடியாகச் செய்வது வேகமாகப் பரவியது. விவசாய உற்பத்தி அல்லாத கூட்டுறவு உற்பத்திக் கூட்டுறவாக வளர்ச்சியடைவதற்கு இத்தகைய ஒப்பந்த முறை உதவி செய்தது.

விவசாயப் பண்ணைகளைக் கூட்டுப் பொருளாதாரமாகத் தயாரிப்பதிலும் தொழிலாளி வர்க்கத்துக்கும் விவசாயி வர்க்கத்துக்கும் இடையிலுள்ள கூட்டணியைப் பலப்படுத்துவதிலும் **இயந்திரச் சங்கங்கள்** தலைமையான முக்கியத்துவத்தைக் கொண்டிருந்தன. தனிப்பட்ட விவசாயிக்குக் கிடைக்க முடியாத சிக்கலான இயந்திரங்கள் இப்பொழுது கிடைத்தபடியால் அவற்றை உபயோகிப்பதற்கு பல குடும்பங்கள் — சில சமயங்களில் சில கிராமங்கள் கூட — ஒன்று சேர்ந்து பாடுபட்டன. கூட்டு உழைப்பு விவசாயிகளின் சுய உணர்வை வளர்த்தது; தனிப்பட்ட விவசாயத்தைக் காட்டிலும் கூட்டு விவசாயமே உயர்வானது என்பதை சிறப்பாக நிரூபித்தது.

சோஷலிஸ்ட் தொழில்துறை தலைமைப் பாத்திரம் வகித்த வடிவம் இயந்திரச் சங்கங்கள் மட்டுமல்ல; **இயந்திர மற்றும் டிராக்டர் தொகுதிகள்** ஏற்படுத்தப்பட்டதில் அதன் பாத்திரத்தைத் தத்ரூபமாகப் பார்க்க முடியும். 1920க்களின் ஆரம்பத்திலேயே டிராக்டர் பிரிவுகளை அமைப்பதற்கு முதல் முயற்சிகள் நடைபெற்றன. ஆனால் அவை மிகச் சிலவே. ஏனென்றால் உற்பத்திக் கூட்டுறவுகளில் ஒன்று சேர வேண்டும் என்னும் எண்ணம் விவசாயிகளிடம் இன்னும் முதிர்ச்சி அடையவில்லை. மேலும் நாட்டில் அந்த சமயத்தில் டிராக்டர்கள் அநேகமாக இல்லை. இந்த அமைப்பு ரீதியான புதிய வடிவங்கள் 1928 — 1929இல் தீவிரமாக வளர்ச்சியடைவதற்குத் தொடங்கின. 1929ம் வருடத்தின் இலையுதிர் காலத்துக்குள் ரு. சோ. கூ. சோ. குடியரசில் கூட்டுறவு டிராக்டர் தொகுதிகளின் எண்ணிக்கை 58ஆக இருந்தது. அவை 729.8 ஆயிரம் ஹெக்டேர் நிலப் பரப்பைக் கொண்ட 40,808 பண்ணைகளுக்கு உதவி செய்தன.

இயந்திரச் சங்கங்களும் இயந்திர மற்றும் டிராக்டர் தொகுதிகளும் கிராமப் பகுதிகளில் சோஷலிஸ்ட் மாற்றத்துக்கு வலிமையான நெம்புகோல்களாக இருந்தன. அவை நவீன இயந்திரங்களைப் பயன்படுத்துதலையும் கூட்டு உழைப்பையும் மக்களிடையே பரப்பின.

**நில அபிவிருத்திச் சங்கங்கள்** ருஷ்யாவில் 1921இல் ஏற்பட்டன. விவசாயிகள் தங்களுடைய சொந்த முயற்சியில் நீர்ப்பாசன வசதிகள் அல்லது வற்றச் செய்யும் வசதிகளை ஏற்படுத்தி நிலத்தை அபிவிருத்தி செய்ய முடியாத காரணத்தால் இச்சங்கங்கள் அமைக்கப்பட்டன.

கூட்டுறவு முறையின் எல்லா வடிவங்களின் வளர்ச்சி விவசாயி வர்க்கத்தைக் கூட்டுப் பண்ணை முறைக்குள் கொண்டு வருவதற்கு சக்தி வாய்ந்த கருவியாக இருந்தது. கட்சி மற்றும் அரசாங்க அமைப்புக்களில் கூட்டுறவுக்



படிப்பகம்

www.padippakam.com

கொள்கைகளைப் பற்றிய பிரச்சினைகள் அடிக்கடி விவாதிக்கப்பட்டன.

1925 ஏப்ரலில் நடைபெற்ற ரு.க.க. (போ.) 14வது மாநாட்டுத் தீர்மானங்கள் பொதுவாக கூட்டுறவு, குறிப்பாக விவசாயக் கூட்டுறவின் வளர்ச்சியில் மைல்கல்லாக இருந்தன. அவை கூட்டுறவு வளர்ச்சியில் கட்சி வழிகாட்டிய அனுபவத்தைப் பொழித்துரைத்தன; உழைக்கும் விவசாயிகளில் பெரும்பான்மையானவர் களை, குறிப்பாக ஏழை விவசாயிகளைக் கூட்டுறவு அமைப்புக்குள் கொண்டு வருவதற்கும் கூட்டுறவு ஸ்தாபனங்களின் வேலையை அபிவிருத்தி செய்வதற்கும் செயல்திட்டத்தைக் கொண்டிருந்தன. பின்னர் நடைபெற்ற கட்சியின் 14வது காங்கிரஸ் இச்செயல்திட் டத்தை அங்கீகரித்தது. இச்செயல்திட்டம் கூட்டுறவுத் துறையிலுள்ள கட்சி ஸ்தாபனங் களின் வேலையின் பிரதான திசைவழிகளை வகுத்துக் கொடுத்தது; அதன் பிறகு இவை திட்டவட்டமாக்கப்பட்டுக் குறைபாடுகள் அகற்றப்பட்டன, நிலைமைகளுக்கு ஏற்ற முறை யில் சில கருதுகோள்கள் வளர்க்கப்பட்டன.

ஏழை விவசாயிகளில் பெரும் பகுதியினர் கூட்டுறவுகளில் சேரும்படி செய்வதற்கு நுழைவுக் கட்டணம் மற்றும் பங்குத் தொகையில் அவர்களுக்கு சலுகைகள் அளிக்கப்பட வேண் டும், இதற்கு சங்கத்தின் நிதியிலிருந்தும் அரசின் விசேஷக் கூட்டுறவு நிதியிலிருந்தும் செலவிட வேண்டும் என்று கட்சி மாநாடு சிபாரிசு செய்தது. ஏழை விவசாயிகள் தங்களு டைய பொருளாதார நடவடிக்கைகளை விரிவுபடுத்துவதற்கு விசேஷமான கடன்வசதி கள் தரப்பட்டு அவர்கள் கூட்டுறவுகளில் சேருவதற்கு ஊக்கமளிக்கப்பட்டது.



கூட்டுறவை வளர்க்கின்ற நடவடிக்கைகளில் ஒரு பகுதியாக நுகர்வோர் கூட்டுறவு சங்கங் கள் மற்றும் விவசாயக் கூட்டுறவு சங்கங் களின் வேலைகள் கறாராக வரையறுக்கப்பட வேண்டும், பொருளாதார சுயகணக்கீட்டு முறையும் லாபத் தன்மையும் உறுதிப்படுத் தப்பட வேண்டும், கடனுதவி முறை வலுப் படுத்தப்பட வேண்டும் என்று கட்சி மாநாடு வற்புறுத்தியது. கூட்டுறவு சங்கங்களுக்கும் உழைக்கின்ற பெருந்திரளான மக்களுக்கும் இடையில் பிணைப்புக்களை வலுப்படுத்து வதற்கும் உழைக்கும் மக்கள் அந்த ஸ்தாபனங்களின் சமூக நடவடிக்கைகளில் நேரடியாகப் பங்கெடுக்கும்படி செய்வதற்கும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. கூட்டுறவு, பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்ப்பது மட்டுமின்றி சிறு பண்ட உற்பத்தியாளர் களின் (விவசாயிகள், கைவினைஞர்கள், இதரர்கள்) சோஷலிஸ்ட் மறு கல்விப் பிரச் சினைகளையும் தீர்க்க வேண்டும். ''கட்சி அல்லாத உழைக்கும் மக்களைப் பொறுத்த மட்டில் தொழிற்சங்கங்கள் வகிக்கின்ற அதே கல்விப் பாத்திரத்தைக் கிராமப் பகுதிகளி லுள்ள கூட்டுறவு இயக்கம் கிராம மக்களைப் பொறுத்த மட்டில் வகிக்க வேண்டும் என் பதைக் கட்சி ஸ்தாபனங்கள் ஒருபோதும்



படிப்பகம்

www.padippakam.com

மறக்கக் கூடாது'' என்று மாநாட்டுத் தீர் மானம் கூறியது.

14வது கட்சி மாநாட்டுத் தீர்மானங்கள் கிராமப் பகுதிகளில் கட்சியின் வேலையை அபிவிருத்தி செய்வதற்கும் அரசு மற்றும் பொது அமைப்புக்களில் கட்சியின் வழிகாட்டு தலை வலுப்படுத்துவதற்கும் விரிவான திட் டத்தை வகுத்தளித்தன. கிராமப் பகுதி களுக்கு உதவி செய்வதற்கும் அங்கே தொண் டர்கள் நிரந்தரமாகத் தங்கி வேலை செய் வதற்கும் மாஸ்கோ, லெனின்கிராடு, துலா மற்றும் இதர நகரங்கள் எடுத்த முன்முயற்சி களை மாநாடு வரவேற்று ஆதரித்தது. உழைக்கும் விவசாயிகளின் பிரதிநிதிகளைக் கட்சிக்குள் கொண்டுவருவதற்கும் கட்சியில் உறுப்பினராக இல்லாத கிராமச் செயல் வீரர்களை சோவியத்துக்களிலும் கூட்டுறவு களிலும் தலைமைப் பதவிகளுக்குத் தேர்ந் தெடுப்பதற்கும் கிராமப் பகுதிகளில் உள்ள கம்யூனிஸ்டுகள் இன்னும் தீவிரமாகப் பாடுபட வேண்டும் என்று வற்புறுத்தியது. உண்மை யிலேயே பேரளவில் கம்யூனிஸ்ட் பிரச்சாரம் செய்வதற்கென்று 3,000 கம்யூனிஸ்டுகளை கிராமப் பகுதிகளுக்கு அனுப்புவதற்கு மாநாடு முடிவு செய்தது.

கூட்டுறவு சங்கங்களுக்கும் ஏழை விவசாயிகளுக் கும் அரசு கொடுத்த பல்விதமான உதவிகளும் கிராமப் பகுதிகளில் கம்யூனிஸ்ட் கட்சியின் விரி வான ஸ்தாபன மற்றும் அரசியல் நடவடிக்கையும் கூட்டுறவு இயக்கத்தின் வளர்ச்சியை உறுதிப்



படுத்தின. 1924இல் சோவியத் யூனியனில் 37,872 விவசாயக் கூட்டுறவு சங்கங்களில் 28,63,000 உறுப்பினர்கள் இருந்தார்கள்; 1925இல் 54,813 சங்கங்களில் 65,89,000 உறுப்பினர்கள் இருந்தார்கள். 1927இல் விவ சாய கூட்டுறவு சங்கங்களில் சுமார் 95,00,000 உறுப்பினர்கள் இருந்தார்கள். இது மொத்த விவசாயப் பண்ணைகளில் 39.2 சதவிகிதமா கும். 1929ம் வருடக் கடைசிக்குள் இது 55 சதவிகிதத்துக்கும் அதிகமாக உயர்ந்து விட்டது.

கூட்டுறவு உறுப்பினர்களின் எண்ணிக்கை வேகமாக அதிகரித்தபடியால் கூட்டுறவுகளில் ஸ்தாபன வேலையை வலுப்படுத்தி அபி விருத்தி செய்கின்ற கடமை கட்சியை எதிரிட் டது. இத்துறையில் போதிய கவனம் செலுத் தப்படவில்லை என்பதற்கு ''சுதந்திரமான'' கூட்டுறவு சங்கங்கள் என்று சொல்லப்பட்டவை யும் போலிக் கூட்டுறவு சங்கங்களும் அடிக்கடி ஏற்பட்டது சான்றாகும். இவை கூட்டுறவு அமைப்பைச் சேர்ந்தவை அல்ல, ஆகவே அவற்றுக்குக் கட்டுப்படாதவை, 1926ம் வருடக் கடைசியில் இவற்றின் எண்ணிக்கை சுமார் 18,000 அல்லது மொத்த விவசாய கூட் டுறவுகளில் 27.1 சதவிகிதமாக இருந்தது. இவற்றின் உறுப்பினர் எண்ணிக்கை சுமார் 10,00,000. அடிப்படையான உற்பத்திச் சாத னங்களைக் கூட்டுடைமை ஆக்குவதை இவற்றின் விதிகள் பெரும்பாலும் வற்புறுத்த வில்லை; இவை கூட்டுப் பண்ணை என்ற



படிப்பகம்

www.padippakam.com

பெயரை வைத்துக் கொண்டிருந்தாலும் தனிப்பட்ட குலாக் உடைமைகளைத் தொடவில்லை. ஏழை மற்றும் நடுத்தர விவசாயிகளை உறுப்பினர்களாகக் கொண்ட கூட்டுறவுகளை ஸ்தாபன ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் வலுப்படுத்துவதன் மூலம் கம்யூனிஸ்ட் கட்சியும் சோவியத் அரசும் போலிக் கூட்டுறவுகளை எதிர்த்து உறுதியான போராட்டத்தை நடத்தின.

பணக்கார விவசாயிகளும் குலாக்குகளும் கூட்டுறவுகளில் உறுப்பினராவதை சோவியத் சட்டம் தடை செய்யவில்லை. கூட்டுப் பண்ணைக்கான வெகுஜன இயக்கம் 1929 நடுப்பகுதியில் தொடங்கிய பொழுது கூட கூட்டுறவுகளிலிருந்து அவர்களை உடனடியாக வெளியேற்றுவதைப் பற்றி இன்னும் முடிவெடுக்கப்படவில்லை. மேலும், பண்ட மற்றும் பணப் பரிவர்த்தனைத் துறையில் இயங்கிக் கொண்டு சந்தையுடன் நெருக்கமான இணைப்புக் கொண்டிருந்த கூட்டுறவுகள் பெரும்பாலும் தம்முடைய பொருளாதார நடவடிக்கையை சொந்த நிதிகளைக் கொண்டு நடத்தின; ஆகவே அவை பணக்காரர்களிடமிருந்து நிதிகளைப் பெறுவதில் அடிக்கடி அக்கறை கொண்டிருந்தன. ஆனால் பணக்கார விவசாயிகளும் குலாக்குகளும் கூட்டுறவுகளில் தம்முடைய பொருளாதார மற்றும் அரசியல் செல்வாக்கை வலுப்படுத்துவதற்குச் செய்த முயற்சிகள் முறியடிக்கப்படவில்லை என்பது இதன் அர்த்தமல்ல.



கூட்டுறவுகளில் அமைப்பு வேலைகளைக் கம்யூனிஸ்ட் கட்சி தொடர்ச்சியாக கவனித்து வந்தது. ரு.க.க.(போ.)வின் மத்திய கமிட்டி 14வது கட்சி மாநாட்டின் முடிவுகளை அமுல் நடத்துவதற்காக 1925ல் செய்த முடிவுகளில் பயிற்சி பெற்ற ஊழியர்களைக் கொண்டு கூட்டுறவுகளை வலுப்படுத்துவதும் அவற்றை வழிநடத்துவதில் கம்யூனிஸ்ட் செல்வாக்கைத் தீவிரப்படுத்துவதும் அவசியம் என்று வலியுறுத்தியது.

கூட்டுறவு அலுவலர்களுக்குப் பயிற்சி மற்றும் மறுபயிற்சி கொடுப்பதில் கட்சி பெரும் பணியாற்றியது. ரு.க.க.(போ.)வின் மத்திய கமிட்டி **கூட்டுறவு சங்கங்களில் கலாசார மற்றும் கல்வி வேலை** என்னும் தலைப்பில் 1925 ஆகஸ்ட் 26ந் தேதியன்று செய்த முடிவின்படி கூட்டுறவு நிர்வாகக் கமிட்டிகள், தணிக்கைக் கமிஷன்கள், கணக்கர்கள் மற்றும் இதர அலுவலர்களுக்கு மறுபயிற்சி கொடுப்பதற்கு நாடு முழுவதிலும் வகுப்புகள் நடத்தப்பட்டன. கூட்டுறவு அலுவலர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்கென்று உயர்நிலை மற்றும் உயர்தரக் கல்வி நிலையங்களை ஏற்படுத்த வேண்டுமென்று மேற்கூறிய முடிவு ஆணையிட்டது. 1926-27ம் கல்வியாண்டில் கூட்டுறவு உயர்நிலை தொழில்நுட்பப் பள்ளிகள் பல பிரதேசங்களில் ஆரம்பிக்கப்பட்டன. அதன் பிறகு உயர்நிலைப் பள்ளிப் பாடத் திட்டத்தில் ''கூட்டுறவு சங்கங்களைப் பற்றிய உரைகள்'' என்னும் சிறப்புப் பாடம் சேர்க்கப்பட்டது.



படிப்பகம்

www.padippakam.com

விசேஷப் பள்ளிகளிலும் கல்வி நிலையங்களிலும் கூட்டுறவுப் பாடங்களைப் படிக்கின்ற மாணவர்களின் எண்ணிக்கை ஆண்டு தோறும் அதிகரித்தது. 1925-26ம் கல்வியாண்டில் கூட்டுறவு சங்கங்களுக்கு அலுவலர்களைப் பயிற்றுவிப்பதற்கு 775 வகுப்புகள் மட்டுமே இருந்தன, 36,000 நபர்கள் அவற்றில் சேர்ந்திருந்தனர். ஆனால் ஒரு வருடத்துக்குப் பிறகு 900 வகுப்புகள் இருந்தன, அவற்றில் சுமார் 44,000 மாணவர்கள் படித்தார்கள். தீவிரமான ஸ்தாபன வேலை காரணமாக வெவ்வேறு தொழில்களைக் கொண்ட பல்லாயிரக்கணக்கான நபர்கள் கட்சியின் கொள்கையை சுறுசுறுப்பாகப் பரப்புபவர்களாகவும் லெனின் வகுத்த கூட்டுறவுத் திட்டத்தை நிறைவேற்றுகின்ற போராட்டக்காரர்களாகவும் பயிற்றுவிக்கப்பட்டார்கள்.

கூட்டுறவுகளை வெகுஜன ஸ்தாபனங்களாக மாற்ற வேண்டும் என்னும் 14வது கட்சி மாநாட்டின் முடிவை அமுல் நடத்துவதற்காக கட்சி கிராமப் பகுதிகளில் வெகுஜன அரசியல் வேலையைத் தீவிரப்படுத்தியது. கட்சி பிரச்சாரத்தில் கவனத்தைக் குவித்தது; அதில் கேந்திரமான பாத்திரத்தை வகித்த கூட்டுறவு பத்திரிகைகள் குறுகிய காலத்தில் நாட்டிலேயே மிகவும் விரும்பிப் படிக்கப்படுகின்ற பத்திரிகைகளாக மாறின. 1929இல் கூட்டுறவு வெளியீட்டகங்கள் 166 கூட்டுறவு பத்திரிகைகளையும் இதழ்களையும் வெளியிட்டன; அவற்றில் மிகவும் அதிகமான பத்திரிகைகள் நுகர்வு



மற்றும் விவசாய கூட்டுறவு சங்கங்களால் வெளியிடப்பட்டன.

ருஷ்யாவில் கலாசாரப் புரட்சியின் அவசியத்தைப் பற்றி லெனினுடைய ஆணைகளை அமுலாக்குவதில் கூட்டுறவு சங்கங்கள் மிகச் சிறப்பான பாத்திரத்தை வகித்தன. கிராமப் பகுதிகளின் கலாசாரத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு முதலில் கூட்டுறவு சங்கங்கள்தான் புத்தகங்களையும் இதர பொருள்களையும் வழங்கின. 1926இல் கிராமப் பகுதிகளில் புத்தகங்களை விற்பனை செய்வதற்கு அவை 3,600க்கும் அதிகமான மையங்களை வைத்திருந்தன; 1929இல் சுமார் 10,000 மையங்களை வைத்திருந்தன. 1929இல் கூட்டுறவு சங்கங்களுக்கு நகரங்களில் 150க்கும் அதிகமான விசேஷமான புத்தகக் கடைகள் இருந்தன. ஏழை விவசாயிகள் மத்தியில் கல்லாமையை அகற்றுதல், சொற்பொழிவுகள், உரையரங்கங்கள், கண்காட்சிகள், திரைப்படக் காட்சிகள், வானொலி அமைத்தல் ஆகிய கலாசாரத் துறை சார்ந்த பணிகளில் கூட்டுறவு இயக்கத்தின் பங்கு மிக முக்கியமானதாகும்.

லெனினுடைய ஆணைகளைப் பின்பற்றி கூட்டுறவு சங்கங்களை அரசுத் துறைக்கும் சிறு விவசாயப் பொருளாதாரத்துக்கும் இடையில் முக்கியமான இணைப்பாக மாற்றுவதற்குக் கம்யூனிஸ்ட் கட்சி முரணில்லாமல் பாடுபட்டது. ரு.க.க. (போ.)வின் மத்திய கமிட்டி 1925 ஜூலையில் அரசுத் தொழில்துறைக்கும் கூட்டுறவு சங்கங்களுக்கும் இடையில் உறவுகளைப் பற்றி



படிப்பகம்

www.padippakam.com

என்னும் தீர்மானத்தை நிறைவேற்றியது. வர்த்தகத் துறையில் பெரிய சந்தைக்கு தொழில்துறை உற்பத்திப் பொருள்களை அளிக்கின்ற முக்கிய பிரிவு நுகர்வுக் கூட்டுறவுகள் என்று அத்தீர்மானம் சுட்டிக் காட்டியது. ஆகவே அரசுத் துறைக்குச் சரக்குகளைக் கொடுக்கின்ற அதே அடிப்படையில் கூட்டுறவுத் துறைக்கும் சரக்குகளைக் கொடுக்க வேண்டும், பெரிய அளவு நடவடிக்கைகளாக இருந்தால் விசேஷ முன்னுரிமை கொடுக்க வேண்டும். தொழில் கூட்டுறவு சங்கங்களுக்கும் விசேஷ சலுகைகள் கொடுக்கப்பட்டன. விவசாயக் கூட்டுறவுகள் மூலப் பொருள்களையும் தானியத்தையும் சேகரிப்பதற்கு முன்னுரிமை அதிகாரம் கொடுக்கப்பட்டது; அவை பல விவசாயப் பொருள்களைத் தொழில்துறைக்கு சப்ளை செய்கின்ற ஒரே ஒப்பந்தக்கார அமைப்பாக இயங்கின.

விவசாயத் தொழில்துறையின் வளர்ச்சியும் விவசாயிகளின் பண்ணைகளுக்கு இயந்திர உதவியை அமைத்ததும் விவசாயத்தை சோஷலிஸ்ட் திசையில் புனரமைப்பதில் தீர்மானமான முக்கியத்துவத்தைக் கொண்டிருந்தன. நாட்டைத் தொழில்மயமாக்குவது, பிரதானமாக வேளாண்மை இயந்திரங்களின் உற்பத்தியை அதிகப்படுத்துவது இப்பிரச்சினையின் தீர்வுக்குத் திறவுகோலாக இருந்தது. ஏழை விவசாயிகளையும் நடுத்தர விவசாயிகளையும் சோஷலிஸ்ட் நிர்மாணத்தில் ஈடுபடுத்துவதற்கு உதவுகின்ற முறையில் கிராமப் பகுதிகளுக்கு



இயந்திரங்களையும் விவசாயக் கருவிகளையும் கொடுப்பதற்கு கம்யூனிஸ்ட் கட்சியும் சோவியத் அரசும் கிடைத்த எல்லா சந்தர்ப்பங்களையும் பயன்படுத்தின. இயந்திரங்கள் பிரதானமாக கூட்டுறவு சங்கங்கள் மூலமாக, கறாரான வர்க்கச் சார்பு முறையில் வினியோகிக்கப்பட்டன. 1926-27இல் ரு.சோ. கூ.சோ. குடியரசில் விற்பனை செய்யப்பட்ட மொத்த இயந்திரங்கள் மற்றும் கருவிகளில் 28.8 சதவிகிதம் ஏழை விவசாயிகளுக்கும் 51.6 சதவிகிதம் நடுத்தர விவசாயிகளுக்கும் 19.6 சதவிகிதம் பணக்கார விவசாயிகளுக்கும் விற்பனை செய்யப்பட்டது. ஏழை விவசாயிகள் இயந்திரங்களையும் கருவிகளையும் வாங்குவதற்காக அரசு கடன் கொடுத்தது. உதாரணமாக, 1927 — 1928இல் இயந்திரச் சங்கங்களுக்கும் கூட்டுப் பண்ணைகளுக்கும் டிராக்டர்கள் வாங்குவதற்காக 11,200,000 ரூபிள்கள் கடனுதவி வழங்கப்பட்டது; இத்தொகை டிராக்டர்களின் மொத்த விலையில் 75 சதவிகிதத்துக்கும் அதிகமாகும். 1927க்குள் ரு.சோ.கூ.சோ. குடியரசிலிருந்த மொத்த டிராக்டர்களில் 91 சதவிகிதம் இயந்திரச் சங்கங்கள், இயந்திர மற்றும் டிராக்டர்கள் தொகுதிகள், கூட்டுப் பண்ணைகள் ஆகியவற்றுக்கு சொந்தமாக இருந்தன. ரு.சோ.கூ.சோ. குடியரசின் அகில யூனியன் மத்திய நிர்வாகக் கமிட்டி மற்றும் மக்கள் கமிஸார்களின் கவுன்சில் டிராக்டர்களைத் தனியார்களிடம் விற்பனை (மறுவிற்பனையும்



6~539

படிப்பகம்

www.padippakam.com

கூட) செய்வதைத் தடை செய்து விசேஷ ஆணை பிறப்பித்திருந்தது.

அதே சமயத்தில் கிராம மக்களில் பெரும் பான்மையாக இருந்த தனிப்பட்ட விவசாயி களுக்கு வேளாண்மை இயந்திரங்கள் மிகவும் அவசியமாக இருந்தன என்ற உண்மையைக் கட்சியும் சோவியத் அரசும் கணக்கிலெ டுத்துக் கொண்டன. இத்தேவையைப் பூர்த்தி செய்வதற்கென்று சோவியத் அரசு கிராமப் பகுதிகளில் இயந்திரக் குத்தகை நிலையங் களை நிறுவியது. இவை குலாக்குகளை எதிர்த்து ஏழை விவசாயிகளும் நடுத்தர விவசாயிகளும் நடத்திய போராட்டத்துக்குப் பேருதவியாக இருந்தன, அவர்களைக் கூட்டு விவசாயத்துக்குப் படிப்படியாகத் தயாரிப் பதற்கும் உதவி செய்தன.

1927 டிசம்பரில் நடைபெற்ற கம்யூனிஸ்ட் கட்சியின் 15வது காங்கிரஸ் சோவியத் விவ சாயத்தை வளர்ப்பதிலும் கிராமப் பகுதிகளில் சோஷலிஸ்ட் மாற்றத்தைக் கொண்டு வருவ தற்குக் கட்சியின் கொள்கையை உருவாக்குவ திலும் முக்கியமான திருப்பமாக இருந்தது. காங்கிரஸ் கூட்டுப் பண்ணை விவசாயத்தைப் பின்பற்றுகின்ற பாதையை அங்கீகரித்தது. சோஷலிசத்தை நிர்மாணிக்கின்ற பொழுது கூட்டுப் பண்ணை முறையைக் கொண்டு வராமல் விவசாயத்தை மேலும் வளர்க்க முடியாது. சோவியத் ஆட்சியின் கீழ் பொரு ளாதார நிர்மாணத்தின் பலன்களை ஆராய்ந்த காங்கிரஸ், பொருளாதாரத்தின் எல்லாத்



துறைகளும் ஒரே சீரான முறையிலும் அளவுப் பொருத்தமாகவும் வளர்ச்சியடைய வில்லை என்ற முடிவுக்கு வந்தது. மொத்த விவசாய உற்பத்தி, யுத்தத்துக்கு முந்திய (1913) அளவை அநேகமாக எட்டியிருந் தாலும், விவசாய உற்பத்திப் பொருள்களின், குறிப்பாக தானியங்களின் விற்பனைத் தன்மை குறைந்தது அதிகமான கவலையை ஏற் படுத்தியது. விவசாயிகளின் தானிய நுகர்வு ஓரளவு அதிகரித்ததும் விவசாய நிலங்கள் மேலும் சிறிதாகப் பிரிக்கப்பட்டதும் இதற்குக் காரணமாகும். குலாக்குகளின் எண்ணிக்கை குறைந்துவிட்டது; சாதாரண புனருற்பத்தி மட்டுமே செய்யக் கூடிய நடுத்தர விவசாயி களின் பண்ணை எங்கும் காணப்பட்டது. தொழில்துறை மற்றும் விவசாயத்தின் வளர்ச் சியில் ஆபத்தான பொருத்தமின்மை தோன்றி யிருப்பதை இது எடுத்துக் காட்டியது. இது மொத்த பொருளாதாரத்தின், பிர தானமாக சோஷலிஸ்ட் தொழில்துறையின் வளர்ச்சிக்கு ஆபத்தேற்படுத்தியது.

விவசாயத்தின் நிலையையும் அதன் வளர்ச் சிக்குரிய வாய்ப்புக்களையும் 15வது கட்சி காங்கிரஸ் கவனமாக ஆராய்ந்து, கிராமப் பகுதிகளில் சிறு விவசாய நிலவுடைமைகளை ஒன்று சேர்த்துப் பெரிய கூட்டுப் பண் ணைகளை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட கட்சியின் திசைவழியை வகுத்துக் கொடுத்தது. காங்கிரஸ் மிகவும் அதிகமான தெளிவோடு லெனினுடைய கூட்டுறவுத்

6*



படிப்பகம்

www.padippakam.com

திட்டத்தை முழுமையாக ஆதரித்தது. சோஷலிஸ்ட் தொழில்துறை தனிப்பட்ட சிறு நிலவுடைமைகளைப் புதிய இயந்திரங்கள், மின்சார சக்தி, இதரவற்றின் அடிப்படையில் பெரிய கூட்டுப் பொருளாதாரமாகப் படிப் படியாக மாற்றி கூட்டுறவின் மூலம்தான் சோஷலிசப் பாதைக்கு இட்டுச் செல்ல வேண்டியிருந்தது.

கூட்டுறவின் எல்லா வடிவங்களுக்கும் முழு ஆதரவளிக்க வேண்டிய அவசியத்தை காங்கிரஸ் சுட்டிக்காட்டியது. கூட்டுறவு வேலைகளை மேலும் அபிவிருத்தி செய்து விரிவு படுத்துவது உற்பத்தியைக் கூட்டுமயமாக்கு வதற்குத் தவிர்க்க முடியாத வகையில் இட்டுச் செல்லும் என்று கட்சி கருதியது. ''விவசாய, நுகர்வு மற்றும் கைத்திறன் பொருள் உற்பத்தி யாளர் கூட்டுறவின் வளர்ச்சியும் நகரத்துக்கும் கிராமாந்திரங்களுக்கும் இடையில் பண்ட பரிவர்த்தனையில் தலைமையான நிலைகளை அதில் சேர்ப்பதும், விவசாய மற்றும் கைத்திறன் பொருள் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை மற்றும் சப்ளை துறையிலிருந்து உற்பத்தித் துறைக்கு முன்னேறிச் செல்கின்ற பொருளாதார அவசியத்துக்கும் பொருளாதார சாத்தியத்துக்கும் இட்டுச் செல்லும்'' என்று காங்கிரஸ் தீர்மானம் கூறியது. விவசாய நிலவுடைமைகளை சோஷலிஸ்ட் பண்ணைகளாக மாற்றுவதற்குக் கூட்டுறவானது — மிகவும் எளிமையான வடிவங்களில் கூட — முக்கியமான முன்நிபந்தனை என்ற லெனின்



கருத்தைக் கட்சி இம்முறையில் வலியுறுத்தியது.

விவசாய வர்க்கத்தைக் கூட்டுறவு மயமாக்கு வதற்கு முக்கியமான வழி விவசாயிகளுக்கு ஒன்றுபடுவதற்கு முழுமையான சுதந்திரம் கொடுப்பதே என்ற லெனினுடைய கருத்துக் களின் அடிப்படையில் காங்கிரஸ் சுட்டிக் காட்டியது. படிப்படியாகப் பெரிய கூட்டு உடைமைப் பொருளாதாரத்துக்கு மாறுவது விவசாய வர்க்கத்துக்கு உசிதமானது, சாதக மானது என்று எடுத்துக் காட்டுவதற்கு எல்லா கட்சி ஸ்தாபனங்களும் விரிவாகப் பிரச்சாரம் செய்ய வேண்டும் என்று காங்கிரஸ் கட்டளையிட்டது.

15வது கட்சி காங்கிரஸ் சோவியத் விவசாய வளர்ச்சியில் மகத்தான முக்கியத் துவத்தைக் கொண்டிருந்தது. கிராமப்புறத்தில் சோஷலிஸ்ட் மாற்றத்தைக் கொண்டுவருவதில் கூட்டுறவு முறையின் பல்வேறு வடிவங்களின் பாத்திரம் என்ன என்ற பிரச்சினையை அது விரிவாக விளக்கியது, அப்பிரச்சினையின் தீர்வுக்கு ஸ்தூலமான நடவடிக்கைகளை வகுத்தளித்தது. சிறு பண்ட விவசாயத்தை, தொழில்துறையில் உயர்ந்த வளர்ச்சி விகிதங் களையும் மக்களுடைய வாழ்க்கைத் தரத்தில் முன்னேற்றத்தையும் ஏற்படுத்தக் கூடிய பெரிய அளவு கூட்டுடைமை சோஷலிஸ்ட் உற்பத்தியாக மாற்றுவதற்கு அவசியமான முன்நிபந்தனைகள் சோவியத் யூனியனில் இருக்கின்றன என்பதை காங்கிரஸ் எடுத்துக் காட்டியது.



படிப்பகம்

www.padippakam.com

15வது கட்சி காங்கிரசில் தயாரிக்கப்பட்ட விவசாய வளர்ச்சியின் அடிப்படைக் கொள் கையை அமுல்நடத்துவதற்கு கட்சி பெருந் திரளான விவசாயிகளை சோஷலிஸ்ட் நிர் மாணத்தில் ஈடுபடுத்துவதற்கு விரிவாக வேலை செய்தது. லெனினுடைய கூட்டுறவுத் திட் டத்தை அமுலாக்குவதில் முக்கியமான கட்டம் 1928இல் ஆரம்பமாயிற்று. கட்சி எளிமையான கூட்டுறவின் பலவிதமான வடிவங்களை வளர்த் ததுடன் விவசாய உற்பத்திக் கூட்டுறவுகளை அமைப்பதற்கு முரணில்லாத கொள்கையை உறுதியாகப் பின்பற்றியது.

விவசாய வர்க்கத்தைப் பூரணமாகக் கூட்டு மயமாக்குவதற்குத் தயாரிப்பதில் 1928 மற்றும் 1929 தீர்மானமான ஆண்டுகளாக இருந்தன. அந்தச் சமயத்தில் பெருந்திரளான விவசாயி கள் எல்லா விதமான கூட்டுறவு சங்கங் களிலும் ஈடுபட்டிருந்தார்கள். எனினும் 1926 முதல் 1929 வரை விவசாயக் கூட் டுறவுக்கு அடையாளமான வடிவங்களாக இருந்த எளிமையான உற்பத்திச் சங்கங்களும் விசேஷமான விவசாய சங்கங்களும் விவசா யத்தில் சோஷலிஸ்ட் புனரமைப்பை நிறை வேற்ற முடியவில்லை; ஏனென்றால் அவை விவசாய உற்பத்தி நடவடிக்கைகளில் சில அம்சங்களை மட்டுமே சமூகமயமாக்கின, தனி யுடைமைப் பொருளாதாரம் நீடித்தது. லெனி னது கூட்டுறவுத் திட்டத்தை முழுமையாக நிறைவேற்றுவதற்கு உற்பத்திச் சாதனங் களில் சமூக உடைமை மற்றும் கூட்டு



உழைப்பை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திக் கூட்டுறவுகளை ஏற்படுத்துவது அவசியமாயிற்று. பெரிய அளவு கூட்டுறவு உற்பத்திக்கு மாறுவது மற்றும் அதை வலுப் படுத்துவது மட்டுமே இந்த முக்கியமான சமூக பொருளாதாரப் பிரச்சினைக்குத் தீர்வு என்பதை கம்யூனிஸ்ட் கட்சி தீர்மானித்தது.

அந்தக் காலத்தில் கூட்டுறவு மற்றும் கூட்டு டைமைத் துறையில் பணியாற்றிய பல ஊழி யர்களும், விவசாயத்தை சோஷலிஸ்ட் முறை யில் புனரமைத்தல் என்பது கூட்டுறவின் சில வடிவங்கள் படிப்படியாக வேறு வடிவங் களாக வளர்ச்சி பெறுதல், கீழ் வடிவங்கள் உயர் வடிவங்களாகத் தொடர்ச்சியாக வளர்ச்சி யடைந்து பின்னர் ஆக உயர்ந்த கட்ட மாகிய கூட்டுப் பண்ணை முறையை அடை தல் என்றுதான் கருதினார்கள். விவசாய வர்க்கம் கூட்டுறவின் ஆக எளிமையான வடிவங்களின் கட்டத்தை முழுமையாகக் கடந்த பிறகு, போதிய பொருளாயத மற்றும் தொழில்நுட்ப அடிப்படை அமைக்கப்பட்ட பிறகுதான் கூட்டுப் பண்ணைகளை அமைப்பது சாத்தியம் என்று கூறினார்கள்.

எனினும் விவசாய வர்க்கம் கூட்டுறவின் ஒரு வடிவத்திலிருந்து மற்றொரு வடிவத் துக்குக் கட்ட வாரியாக மாறுவது அவசியமல்ல என்பதை எதார்த்தம் எடுத்துக் காட்டுகிறது. விவசாயத்தைக் கூட்டுறவுமயமாக்குவதற்கு 15வது கட்சி காங்கிரஸ் தேர்ந்தெடுத்த பாதை பெருந்திரளான விவசாயிகளை ஈடுபடுத்தி கூட்



படிப்பகம்

www.padippakam.com

டுறவின் எல்லா வடிவங்களையும் பெரிய அளவில் வளர்ப்பதை நிபந்தனையற்ற முறையில் அடிப்படையாகக் கொண்டிருந்தது. உற்பத்திக் கூட்டுறவுகளை நிறுவுவதற்கு பொருளாயத மற்றும் தொழில்நுட்ப அடிப்படையை முழுமையாக நிறைவேற்றுவதும் அவசியமான முன் நிபந்தனை அல்ல; இரண்டு நிகழ்வுப் போக்குகளும் இணைகரமாகச் செயல்பட முடியும்.

கூட்டுப் பண்ணைகளை அமைக்கின்ற இயக்கத்தின் வெற்றிக்கு முக்கிய காரணம் என்னவெனில், பெருந்திரளான விவசாயிகள் இரண்டு வழிகளில் அதற்குள் கொண்டுவரப்பட்டார்கள் என்பதாகும். ஒரு பக்கத்தில் கூட்டுறவின் ஆக எளிமையான வடிவங்கள் உற்பத்திக் கூட்டுறவுகளாக வளர்ச்சியடைவது தொடர்ந்தது. மறு பக்கத்தில் விவசாயிகள் நேரடியாகக் கூட்டுப் பண்ணைகளில் சேர்ந்தார்கள். 1928—1929இல் கூட்டுப் பண்ணைகளை அமைப்பதற்கு முந்திய வழி முக்கியமாக நிலவியதென்றால், அதற்கடுத்த வருடங்களில் பிந்திய வழி பிரதானமாகக் கடைப்பிடிக்கப்பட்டது.

விவசாயத்தை சோஷலிஸ்ட் ரீதியில் புனரமைப்பதற்குக் கூட்டுறவுகளைப் பயன்படுத்துவதில் கம்யூனிஸ்ட் கட்சியின் வரலாற்று அனுபவம் "முழு அளவில் கம்யூனிசம் சாதிக்கப்படுகின்ற வரை எந்த வடிவமும் இறுதியானதல்ல" * என்று லெனின் தந்த வழிகாட்டுதலை நிரூபித்தது.

* V. I. Lenin, "Moscow Party Workers' Meeting, November 27, 1918", *Collected Works,* Vol. 28, p. 216.

## சோவியத் யூனியனில் விவசாய உற்பத்திக் கூட்டுறவுகள்

சோவியத் யூனியனில் கூட்டுறவுகள் மற்றும் கூட்டுப் பண்ணைகளை அமைத்த அனுபவம் இரண்டு விசேஷமான போக்குகளை எடுத்துக் காட்டுகிறது. ஒரு பக்கத்தில், உற்பத்தி சம்பந்தமில்லாத கீழ் நிலை கூட்டுறவு வடிவங்கள் உயர் நிலை, உற்பத்திக் கூட்டுறவுகளாகப் படிப்படியாக மாற்றமடைந்தன. மறு பக்கத்தில் உற்பத்திக் கூட்டுறவு முறை கீழ் வடிவங்களிலிருந்து உயர் வடிவங்களுக்குப் படிப்படியான மாற்றத்தைப் பொதுவாகப் பிரதிநிதித்துவம் செய்தது.

விவசாயிகள் சோஷலிஸ்ட் கூட்டு உற்பத்திக்கு மாறுவதற்குரிய புறவய மற்றும் அகவய நிலைமைகள் படிப்படியாக முதிர்ச்சி அடைவதை இந்நிகழ்வுப் போக்கு பிரதிபலிக்கிறது. விவசாய வர்க்கம் தன்னுடைய சொந்த நிலவுடைமைகளை உடனே கைவிட்டு சோஷலிஸ்ட் முறையில் விவசாயத்தை ஆரம்பிக்க முடியாது. இதன் காரணமாகத்தான் உற்பத்திக் கூட்டுறவின் ஆரம்ப வடிவத்தில் நிலத்தில் கூட்டு விவசாயம் தனிப்பட்ட விவசாயத்



படிப்பகம்

www.padippakam.com

துடன் சேர்ந்து நடைபெற்றது.

சோவியத் யூனியனில் கூட்டுப் பண்ணைகள் அமைக்கப்பட்ட பொழுது மூன்று அடிப்படையான வடிவங்கள் இருந்தன: நிலத்தில் கூட்டு விவசாயம் செய்கின்ற சங்கங்கள், விவசாய ஆர்ட்டெல்கள் மற்றும் விவசாய கம்யூன்கள். இவை பிரதான உற்பத்திச் சாதனங்களில் கூட்டுடைமையை அடிப்படையாகக் கொண்டிருந்தபடியால் எல்லாமே சாராம்சத்தில் சோஷலிஸ்ட் தன்மையைக் கொண்டிருந்தன. அவற்றில் மனிதனை மனிதன் சுரண்டுவதற்கான பொருளாதார அடிப்படை இல்லை; எல்லாவிதமான சுரண்டலிலிருந்தும் விடுதலையடைந்த மக்களிடம் கூட்டுறவு மற்றும் பரஸ்பர உதவி என்னும் புதிய, சோஷலிஸ்ட் உற்பத்தி உறவுகளின் வளர்ச்சி குணாம்சமாக இருந்தது. இவை ஒரே விதமான அடிப்படையைக் கொண்டிருந்தாலும், இம்மூன்று வடிவங்களும் உற்பத்திச் சாதனங்கள் கூட்டுடைமையாக்கப்பட்டிருக்கின்ற அளவிலும் வினியோக முறையிலும் வேறுபட்டிருந்தன.

சோவியத் யூனியனில் கூட்டுப் பண்ணை விவசாயத்தின் தனித்தன்மை என்னவெனில், அதன் வளர்ச்சியின் ஆரம்பக் கட்டத்தில் அது விவசாயக் கம்யூன் வடிவத்தை அடைந்தது — இது கூட்டுடைமையின் உயர்ந்த வடிவமாக இருந்தது; அடுத்த கட்டங்களில் நிலத்தில் கூட்டு விவசாயம் செய்கின்ற சங்கங்கள் மற்றும் விவசாய ஆர்ட்டெல்கள் அமைக்கப்பட்டன. கம்யூனில் அடிப்படையான உற்பத்திச் சாதனங்கள் மட்டுமின்றி கால்நடை, கோழி, வீடுகள், வீட்டில் உபயோகிக்கப்படுகின்ற கருவிகள், அதாவது விவசாயிகளின் தனிப்பட்ட உடைமைகளும் கூட்டுடைமையாக்கப்பட்டன. கம்யூன் உறுப்பினர்கள் நிறைவேற்றிய வேலை எவ்வாறிருந்தாலும் நுகர்வுப் பொருள்கள் சமமாகப் பகிர்ந்து கொள்ளப்பட்டன.

மாபெரும் அக்டோபர் சோஷலிஸ்ட் புரட்சி வெற்றி பெற்ற உடனே முதல் விவசாய கம்யூன்கள் அமைக்கப்பட்டன, 1918இல் அவை கிராமப் பகுதிகளில் உற்பத்திக் கூட்டுறவின் தலைமையான வடிவமாக இருந்தன. பழைய நிலப்பிரபுக்களின் பண்ணைகளின் அடிப்படையில் கம்யூன்கள் அமைக்கப்பட்டது இதற்குக் காரணம். கம்யூன்களில் பிரதானமாக ஏழை விவசாயிகள், கிராமங்கள் மற்றும் நகரங்களைச் சேர்ந்த கூலித் தொழிலாளர்கள், முந்திய படை வீரர்கள், அதாவது உழவு மாடுகள் அல்லது விவசாயக் கருவிகளைச் சொந்தமாகக் கொண்டிராதவர்கள் சேர்ந்தார்கள். ஏழை விவசாயிகள் கம்யூனை அமைப்பதன் மூலம் நியாயமான வாழ்க்கையை நடத்த முற்பட்டார்கள். உற்பத்திச் சாதனங்களையும் வீட்டில் பயன்படுத்தும் கருவிகளையும் முழுமையாகக் கூட்டுடைமையாக்கி அவற்றை ''தேவைகளுக்குத் தகுந்தபடி'' சமமாகப் பகிர்ந்தளிப்பதில் கம்யூனிஸ்ட் கொள்கைகளை அடிப்படையாகக்



படிப்பகம்

www.padippakam.com

கொண்ட வாழ்க்கையை அமைப்பதற்கு ஒரு வாய்ப்பை, தங்களுடைய பொருளாயத மற்றும் கலாசார நிலைமைகளை அபிவிருத்தி செய்வதற்கு ஒரு வழியைக் கம்யூன் உறுப்பினர்கள் கண்டார்கள்.

லெனினும் கம்யூனிஸ்ட் கட்சியும் விவசாய கம்யூன்களிலும், பெருந்திரளான மக்களின் முன்முயற்சியாலும் படைப்பாற்றலினாலும் கிராமப் பகுதிகளில் நிறுவப்பட்ட கூட்டுப் பண்ணைகளின் இதர வடிவங்களிலும் சோஷலிசத்தின் முளைகள் தோன்றுவதைக் கண்டார்கள்; அவற்றை ஊக்குவித்து ஆதரிப்பதற்குத் தம்மாலியன்ற எல்லாவற்றையும் செய்தார்கள். அதே சமயத்தில் லெனின், அவை அதிகம் செய்ய வேண்டுமென்று விரும்பினார். ''நாங்கள் கம்யூன்களை ஊக்குவிக்கிறோம்; ஆனால் அவை **விவசாயிகளின் நம்பிக்கையைப் பெறும் வகையில்** ஒழுங்கமைக்கப்பட வேண்டும்''* என்று அவர் எழுதினார். கம்யூன் பிரஜை என்ற பட்டத்தின் மகத்தான முக்கியத்துவத்தைச் சுட்டிக்காட்டி அவர் பின்வருமாறு எழுதினார்: ''**இது மிகவும் கௌரவமான** பட்டம். இதை நெடுங்காலமாகச் செய்துள்ள இடைவிடாத உழைப்பின் மூலம், உண்மையான கம்யூனிஸ்ட் வளர்ச்சியில் செய்முறைச் சாதனையின் மூலம் அடைய வேண்டும்.''*

பெருந்திரளான உழைக்கும் விவசாயிகளை சோஷலிசப் பாதையில் கொண்டுவருவதற்கு இவை பல காரணங்களால் தகுந்தவையல்ல என்பதை முதல் விவசாய கம்யூன்களை அமைத்த அனுபவம் எடுத்துக்காட்டியது. முதல் விவசாய கம்யூன்களில் பின்வரும் குறைபாடுகள் காணப்பட்டன:

முதலாவதாக, கூட்டுப் பண்ணையை நிர்வகிப்பதில் அனுபவம் இல்லை. முதல் விவசாய கம்யூன்களை அமைத்தவர்கள் வெறும் புரட்சிகரமான உற்சாகத்தைக் கொண்டு சோஷலிசத்தை நிர்மாணிக்க முடியும் என்று நம்பினார்கள். ''ஒவ்வொரிடமிருந்தும் அவருடைய திறமைக்கு ஏற்ப, ஒவ்வொருவருக்கும் அவருடைய தேவைக்கு ஏற்ப'' என்ற கோட்பாட்டை அவர்கள் பிரகடனம் செய்தார்கள். அது அக்காலத்துக்குப் பொருத்தமாக இருக்கவில்லை. அவர்கள் தனிப்பட்ட பொருளாயத அக்கறை என்ற கோட்பாட்டை நிராகரித்து, அன்றாட வாழ்க்கை மற்றும் நுகர்வின் மீது அற்பமான கட்டுப்பாடுகளை விதித்து வேலை செய்வதற்குப் பொருளாதார உந்துதல்களை

---

* வி. இ. லெனின், ரு.க.க.(போ.)இன் எட்டாவது காங்கிரஸ். நாட்டுப்புறப் பகுதிகளில் நடந்த வேலை பற்றிய அறிக்கை. மார்ச் 23, 1919. — வி. இ. லெனின், தேர்வு நூல்கள், பன்னிரண்டு தொகுதிகளில், தொகுதி 9, 1982, பக்கம் 268.

* வி. இ. லெனின், மாபெரும் தொடக்கம். — வி. இ. லெனின், தேர்வு நூல்கள், தொகுதி 9, பக்கம் 330ஐப் பார்க்க.



படிப்பகம்

www.padippakam.com

அகற்றினார்கள்; அதனால் உற்பத்தி மற்றும் சமூக வாழ்க்கையின் இதர அம்சங்கள் பாதிக் கப்பட்டன.

இரண்டாவதாக, போதிய பொருளாயத மற்றும் தொழில்நுட்ப அடிப்படை இல்லை. விவசாய கம்யூன்களுக்கும் சோஷலிஸ்ட் விவசாயப் பண்ணைகளின் மற்ற ரகங்களுக் கும் அப்போது ''ஒரு நூறாயிரம் டிராக்டர்கள் இல்லை''. மேலும், பெரும்பான்மையான கம்யூன்கள் மிகச் சிறிய அளவான பண்ணை களாக இருந்தன; அவற்றில் 40 சதவிகிதத்தில் ஒவ்வொன்றுக்கும் 55 ஹெக்டேர்களுக்கும் குறைவான நிலமே இருந்தது. புதிய பொரு ளாதாரக் கொள்கை அமுலாக்கப்பட்டு பண்ட-பண உறவுகள் வளர்ச்சியடைந்ததும் கம்யூன் களின் உற்பத்தி அடிப்படை மிகக் கீழாக இருப்பது தெரிய வந்தது. அவை நடைமுறை யில் கூட்டு விவசாயத்தின் நன்மைகளை விவசாயிக்கு எடுத்துக்காட்டி அவனுக்கு ஸ்தூல மான உதவியளிக்க முடியவில்லை; மாறாக, அவை சுற்றுப்புறங்களிலிருந்த விவசாயிகளின் விரோதத்தைத் தூண்டின. கம்யூன் உறுப்பினர் களுக்கு நிலம் தவிர இலவச வீடுகள், கொட் டகைகள், கருவிகள் மற்றும் இதர வசதிகள் கொடுக்கப்பட்டபடியால் விவசாயிகள் இக்கம் யூன்களை அரசின் ''செல்லப் பிள்ளைகள்'' என்று கருதினார்கள்.

மூன்றாவதாக, விவசாய கம்யூன்களை அமைத்தவர்கள் உழைக்கும் விவசாயிகள் பல யுகங்களாகப் பின்பற்றுகின்ற பழக்கங்கள், வாழ்க்கை முறை மற்றும் உடைமையாளர் மனோபாவத்தைக் கணக்கிலெடுத்துக் கொள் ளாமல் அவர்களை சோஷலிசப் பாதைக்கு மாற்றுவதற்கு முயற்சி செய்தார்கள். விவசாயி களில் மிகவும் அதிகமான பெரும்பான்மை யினரால் கடந்த காலத்துடன் உறுதியாகவும் திடீரென்றும் முறித்துக் கொள்வதற்கு முடிய வில்லை. அதன் விளைவாக கம்யூன்கள், கம் யூனிசத்தில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக் கைகளின் மூலம் பொருளாதாரத்தைப் புனர மைத்துக் கொள்வதற்குத் தொடங்கின. ஆகவே இக்கம்யூன்கள் ஜீவசக்தி இல்லாமல், 1930க்களில் அநேகமாக முற்றிலும் மறைந்து விட்டன.

முதல் விவசாய கம்யூன்களின் செயல்பாட் டைப் பற்றி லெனின் அதிகமான அக்கறை எடுத்துக் கொண்டார், அவற்றிலிருந்த குறை களையும் அவர் அறிவார். விவசாய கூட் டுறவுகளுக்கு அரசு உதவி செய்ய வேண்டியது அவசியம் என்று வற்புறுத்துகின்ற பொழுது இந்த உதவியை சரியான முறையில் உப யோகிக்க வேண்டும் என்றும் லெனின் கூறி னார். ''கம்யூன்கள், ஆர்ட்டெல்கள் மற்றும் கூட்டுறவு அமைப்புகளின் உறுப்பினர்கள் அரசாங்கத்திடமிருந்து மான்யம் பெறுபவர் கள், அரசாங்கத்திடமிருந்து அவர்கள் சலுகை களைப் பெறுவது மட்டுமே விவசாயிகளுக்கும் அவர்களுக்குமுள்ள வேறுபாடு என்று விவ சாயிகள் அவர்களைப் பற்றிச் சொல்ல முடி யாதபடி நாம் மிகவும் கவனத்தோடு நடந்து



படிப்பகம்

www.padippakam.com

கொள்ள வேண்டும்'' * என்று கூறினார். விவசாய கம்யூன்கள், ஆர்ட்டெல்கள் மற்றும் சங்கங்களின் உறுப்பினர்கள், ''மிகவும் மோசமான நிலைமைகளிலும் கூட ஒவ்வொரு கம்யூன், ஆர்ட்டெல் மற்றும் கூட்டுறவு அமைப்பும் அரசு நிதியுதவி கிடைப்பதால் மட்டுமே சிறப்படைந்திருக்கும் ஸ்தாபனம் என்பதாக அல்லாமல், மற்றவர்களுக்கு சோஷலிசத்தை போதிப்பதோடு நின்றுவிடாமல் தாங்களே அதை நிறைவேற்றும் தகுதிகளைக் கொண்டவர்கள், மிகவும் மோசமான நிலைமைகளிலும் கூட தங்களுடைய பண்ணைகளைக் கம்யூனிஸ்ட் முறையில் நடத்த முடியும், சுற்றியிருக்கும் விவசாயிகளுக்கு எல்லா வழிகளிலும் உதவி செய்ய முடியும் என்று காட்டுகின்ற தொழிலாளி வர்க்கத்தினரின் மிகச் சிறந்த பிரதிநிதிகளைக் கொண்டிருக்கும் ஸ்தாபனம் என்று விவசாயி நினைக்குமாறு செய்ய வேண்டும்'' ** என்று லெனின் வற்புறுத்தினார்.

லெனின் தன்னுடைய கூட்டுறவுத் திட்டத்தை இறுதியாக்குகின்ற பொழுது சோவியத் அரசாங்கத்தின் ஆரம்ப வருடங்களில் கிராமப் பகுதிகளில் முதல் விவசாய கம்யூன்களை அமைப்பதில் கிடைத்த அனுபவத்தைப் பயன் படுத்திக் கொண்டார். சோவியத் யூனியன்

* வி. இ. லெனின், **சோவியத் ஆட்சியதிகாரமும் விவசாயிகளின் நிலைமையும்**, பக்கங்கள் 74 — 75.

** **அதே நூல்**, பக்கம் 81.



கம்யூனிஸ்ட் கட்சியும் உழைக்கும் விவசாயிகளை உற்பத்திக் கூட்டுறவுகளில் அமைப்பதற்கு இந்த அனுபவத்தைப் பிற்காலத்தில் பயன்படுத்திக் கொண்டது.

சிறு உடைமையாளர் மனோபாவத்தைக் கொண்ட விவசாயிகள் தனிப்பட்ட பண்ணைகளுக்கு முன்னுரிமை கொடுப்பதை நிறுத்தி விட்டு விவசாயத்தின் அதிக உயர்வான சோஷலிஸ்ட் வடிவங்களுக்கு உடனடியாக முன்னேற முடியாது என்பது உண்மை என்றபடியால் உற்பத்திக் கூட்டுறவின் ஆக எளிமையான வடிவம், அதாவது நிலத்தில் கூட்டு விவசாயம் செய்கின்ற சங்கங்கள் மேன்மேலும் அதிகமாக அமைக்கப்பட்டன. அத்தகைய கூட்டுப் பொருளாதார அமைப்புகளில் நிலமும் உழைப்பும் விருப்ப பூர்வமாக கூட்டுமயமாக்கப்பட்டன; ஆனால் உற்பத்திச் சாதனங்களில் தனியுடைமை நீடித்தது. இச்சங்கங்களில் சங்கத்தின் நிதியிலிருந்து வாங்கப்பட்ட இயந்திரங்கள், விவசாயக் கருவிகள் மட்டுமே பொது உடைமையாக இருந்தன. தனிப்பட்ட விவசாயிகளுக்குச் சொந்தமான உழவு மாடுகள், விவசாயக் கருவிகள் உடைமையாளர்களின் ஒப்புதலின் பேரில் குறிப்பிட்ட விவசாய வேலைகள் நடைபெறுகின்ற காலத்துக்கு மட்டுமே பொது உடைமையாக்கப் பட்டன. இத்தகைய சங்கங்களின் உறுப்பினர்கள் சொந்தமாகப் பெரிய நிலவுடைமைகளை வைத்திருந்தார்கள். ஒவ்வொரு உறுப்பினரும் செய்த வேலையின் அளவுக்கும் தரத்



7-539

படிப்பகம்

www.padippakam.com

துக்கும் தகுந்த முறையில் மட்டுமின்றி, அவர் சங்கத்துக்குக் கொடுத்த பங்குத் தொகைக்கும் உற்பத்திச் சாதனங்களின் மதிப்புக்கும் தகுந்தவாறு வருமானங்கள் பகிர்ந்து கொள்ளப் பட்டன.

சோவியத் யூனியனில் கூட்டுப் பண்ணை இயக்கத்தின் வளர்ச்சியை ஆராய்ந்தால் நிலத்தில் கூட்டு விவசாயம் செய்கின்ற சங்கங்கள் கம்யூன்களும் விவசாய ஆர்ட்டெல்களும் ஏற்பட்டதற்குப் பிறகு தோன்றிய போதிலும் அவற்றின் எண்ணிக்கை வேகமாக அதிகரித்ததைக் காண முடியும். 1919இல் மொத்த கூட்டுப் பொருளாதாரத்தில் அவை 10 % மட்டுமே என்றால் 1927 மற்றும் 1929இல் அவற்றின் பங்கு முறையே 42 மற்றும் 60.2 சதவிகிதமாக அதிகரித்தது. இந்த வளர்ச்சிக்குக் காரணம் என்ன? சாராம்சத்தில் சிறு உடைமையாளரான விவசாயி சொந்த நிலம் என்ற மனோபாவத்தில் ஊறியவர்; ஆகவே இத்தகைய சங்கம் அவருக்கு அணுக்கமான, நன்கு புரிந்து கொள்ளப்படக் கூடிய கூட்டுறவு வடிவமாக இருந்தது. உற்பத்திக் கூட்டுறவின் இந்த ஆக எளிமையான வடிவத்தில் பங்கெடுத்த விவசாயிகள் கூட்டுப் பண்ணை முறையினால் தங்களுக்கு லாபம் கிடைக்கும் என்பதைப் புரிந்து கொண்டு, உற்பத்திக் கூட்டுறவில் மற்றுமொரு உயர்ந்த வடிவமாகிய விவசாய ஆர்ட்டெல்களில் சேர்ந்தார்கள்.

உற்பத்திக் கூட்டுறவின் மிகவும் ஏற்றுக் கொள்ளப்படக் கூடிய வடிவம் சோஷலிச



மாற்றத்தைச் சாதிக்கின்ற பெருந்திரளான மக்களின் செய்முறைப் பணியில், கூட்டுப் பண்ணை நடைமுறையில் வெளிப்படுகிறது என்பதை வரலாற்று அனுபவம் எடுத்துக் காட்டுகிறது. சோவியத் யூனியனில் உற்பத்திச் சாதனங்களில் கூட்டுடைமையைப் பொறுத்த மட்டில் விவசாய கம்யூனுக்கும் நிலத்தில் கூட்டு விவசாயம் செய்கின்ற சங்கத்துக்கும் இடைநிலையாக இருக்கின்ற விவசாய ஆர்ட்டெல் உழைக்கும் விவசாயிகளின் உற்பத்திக் கூட்டுறவுகளின் தலைமையான அமைப்பு வடிவமாக மாறியது.

விவசாய ஆர்ட்டெல் நிலத்தைக் கூட்டாகப் பயன்படுத்துவதையும், கூட்டு உழைப்பையும், அடிப்படையான உற்பத்திச் சாதனங்கள் (உழவு மாடுகள், இயந்திரங்கள், கருவிகள் மற்றும் வேளாண்மை வசதிகள்) கூட்டுடைமையாக்கப்படுதலையும் முன்னூகிக்கிறது. ஆர்ட்டெல் உறுப்பினர்களின் வீடுகள், கால்நடை (பசு மாடுகள் உள்பட) சொந்த உடைமையாக நீடிக்கின்றன; கால்நடை எண்ணிக்கை ஆர்ட்டெல் விதிகளுக்குத் தகுந்தபடி கட்டுப்படுத்தப்படுகிறது. எல்லா வருமானங்களும் உழைப்பு நாள்* கணக்கின்படி, அதாவது உழைப்பின் அளவு மற்றும் தன்மைக்குத் தக்கபடி பகிர்ந்து கொள்ளப்படுகின்றன.

பெரும்பான்மையான கூட்டுறவுகள் விவ

* உழைப்பு நாள் என்பது சோவியத் கூட்டுப் பண்ணைகளில் உழைப்பின் அலகாக இருந்தது.



7*

படிப்பகம்

www.padippakam.com

சாய ஆர்ட்டெல்களாக மாறிய பிறகு அடிப்படையான உற்பத்திச் சாதனங்களின் (பிரதானமாக உழவு மாடுகள்) கூட்டுடைமையாக்கல் தீவிரமாக அதிகரித்தது. 1928இல் விவசாய ஆர்ட்டெல்களில் குதிரைகளின் மொத்த எண்ணிக்கையில் 81.5 %, விவசாயக் கருவிகளில் 98.7 % மற்றும் விவசாய வசதிகளில் 67.2 % கூட்டுடைமையாக்கப்பட்டிருந்தன. பரிபூரண கூட்டுமயமாக்கக் காலகட்டத்தில் அடிப்படையான உற்பத்திச் சாதனங்கள் மேலும் சமூகமயமாக்கப்பட்டன. கால்நடைகளும் கூட்டுடைமையாக்கப்பட வேண்டும் என்னும் ஆலோசனை முதன் முறையாக பரவலாகத் தெரிவிக்கப்பட்டது.

கூட்டுறவு விவசாயத்தின் மற்ற வடிவங்களைக் காட்டிலும் விவசாய ஆர்ட்டெலில் உள்ள சாதகங்கள் என்ன?

விவசாய ஆர்ட்டெல் கூட்டுப் பண்ணை விவசாயிகளின் தனிப்பட்ட நலன்களைப் பொது நலன்களுடன் மிகவும் முழுமையாக இணைக்கிறது, அவர்களுடைய தனிப்பட்ட நலன்களை சோஷலிஸ்ட் அரசின் நலன்களுக்குத் தகவமைக்கிறது. அடிப்படையான உற்பத்திச் சாதனங்களைக் கூட்டுடைமையாக்குதல் சந்தைக்கு உற்பத்தி செய்கின்ற பெரிய அளவுப் பொருளாதாரத்தை சாத்தியமாக்குகிறது. கூட்டுப் பண்ணை விவசாயியின் தனிப்பட்ட பண்ணை இந்த உதாரணத்தில் நுகர்வுத் தன்மையைக் கொண்டிருக்கிறது.

விவசாய ஆர்ட்டெல் பொருளாயத ஊக்கக் கோட்பாட்டை மிகவும் முழுமையாக அமுல் செய்வதை அனுமதிக்கிறது. இது பிரதானமாக சமூக உற்பத்தியின் வளர்ச்சியினால் உறுதி செய்யப்படுகிறது: அதன் லாபம் அதிகரிக்கின்ற அளவுக்கு ஒவ்வொரு உறுப்பினரும் சொந்த நுகர்வுக்கு அதிகமாகப் பெறுகிறார், அவருடைய பொருளாயத, கலாசார நிலைகள் வேகமாக உயர்கின்றன. கூட்டுப் பண்ணை விவசாயி செய்த வேலையின் அளவுக்கும் தன்மைக்கும் தகுந்த முறையில் நுகர்வுப் பொருள்களை வினியோகம் செய்வதன் மூலமாகவே தனிப்பட்ட பொருளாயத ஊக்கத்தைப் பேண முடியும். செய்த வேலைக்குத் தக்கபடி வினியோகம் செய்வதன் மூலமாகவே உழைப்பின் உற்பத்தித் திறன் வளர்ச்சியை, ஆகவே சமூக உற்பத்தியின் வளர்ச்சி மற்றும் புதிய உடைமை உறவுகளின் வலுப்படுத்தல் மற்றும் வளர்ச்சியை உறுதி செய்ய முடியும். கூட்டுப் பண்ணை விவசாயி தனக்குச் சொந்தமாக சிறு நிலம் வைத்திருப்பதும் பொருளாயத ஊக்கம் என்ற கோட்பாட்டை நிறைவு செய்கிறது.

முப்பதுக்களிலிருந்து சோவியத் நாட்டில் விவசாய ஆர்ட்டெல் முதலில் கூட்டுப் பண்ணையின் பிரதான வடிவமாகவும், பின்னர் ஒரே வடிவமாகவும் இருந்ததற்கு இதுவே காரணம். அதற்குப் பின்னர் விவசாய ஆர்ட்டெல் என்ற பெயர் அதன் முக்கியத்துவத்தை இழந்தது, கட்சி மற்றும் அரசாங்க ஆவணங்களில் அதற்குப் பதிலாகக் கல்ஹோஸ்



படிப்பகம்

www.padippakam.com

(கூட்டுப் பண்ணை) என்ற பெயர் உபயோகிக் கப்பட்டது.

லெனினுடைய கூட்டுறவுத் திட்டக் கருத்துக் கள் விவசாய வளர்ச்சியைப் பற்றிய லெனினி யத்துக்கு விரோதமான கருத்துக்களுக்கு எதிரான தீவிரமான போராட்டத்தில் சோஷ லிஸ்ட் நிர்மாணத்தின் தத்துவத்திலும் நடைமுறையிலும் நிலைநாட்டப்பட்டன. ருஷ் யாவைப் போல சிறு விவசாயிகளைக் கொண்ட நாட்டில் இது சோஷலிஸ்ட் புரட்சியின் சாத னைகளின் விதியை, சோஷலிசத்தின் முடிவான வெற்றியை நிர்ணயிக்கின்ற அடிப்படையான பிரச்சினையாக இருந்தது.

சோஷலிசம் தனியொரு நாட்டில் வெற்றி பெற முடியாது என்ற திரோத்ஸ்கியின் ''தத்துவம்'' பேராபத்தாக இருந்தது. லெனின் மரணமடைந்த பிறகு திரோத்ஸ்கி பொதுவாக லெனினியத்தையும், குறிப்பாக சோஷலிச நிர்மாணத்தைப் பற்றிய லெனினது போத னையையும் தொடர்ந்து தாக்கினார். விவசாய வர்க்கத்தின் புரட்சிகரமான தகுதிகளைப் பற்றி திரோத்ஸ்கிக்கு நம்பிக்கை இல்லாதபடி யால், வெளி உதவி இல்லாமல் தொழிலாளி வர்க்கத்தினால் தனியொரு நாட்டில் சோஷ லிசத்தை நிர்மாணிக்க முடியாது, தொழிலாளி வர்க்கத்துக்கும் விவசாய வர்க்கத்துக்கும் இடையில் தீர்க்கப்பட முடியாத முரண் பாடுகள் இருக்கின்றன என்று அவர் வற்புறுத் தினார். சோவியத் அரசில் நடுத்தர விவசாயி கள் வேகமாக வளர்ச்சி அடைந்ததை அவர்



வேண்டுமென்றே தவறாகப் புரிந்து கொண்டார், குலாக்குகள் பலமடைகிறார்கள் என்று கூக் குரலிட்டார். கிராமப் பகுதிகள் முதலாளித் துவப் பாதையில் வளர்ச்சி அடைந்து கொண் டிருக்கின்றன என்று முடிவு செய்து, நடுத்தர விவசாயியை ஆதரிக்கின்ற கட்சியின் கொள் கையை ''குலாக்குகளை ஆதரிக்கும் கொள் கை'' என்று கண்டித்தார். விவசாய வர்க்கம் இயற்கையிலேயே பிற்போக்கானது, விவசாயி களை சோஷலிச நிர்மாணத்தில் ஈடுபடுத்த முடியாது என்று திரோத்ஸ்கியவாதிகள் திரும்பத் திரும்பக் கூறினார்கள். விவசாயி களின்பால் பின்பற்றப்படுகின்ற கொள்கை சாராம்சத்தில் அவர்களின் உடைமைகளைப் பறிமுதல் செய்வதாகவும் அவர்களைப் பாட் டாளி வர்க்கமாக்குவதாகவும் இருக்க வேண் டும் என்று அவர்கள் கூறினார்கள்.

திரோத்ஸ்கியின் விவசாயக் கொள்கையின் பிற்போக்குத் தன்மையும் அதன் விவசாய எதிர்ப்பு சாராம்சமும் கூட்டுறவுத் துறையில் மிகவும் தெளிவாக வெளிப்பட்டன. லெனினது கூட்டுறவுத் திட்டத்தைப் பகிரங்கமாக எதிர்ப் பதற்குத் துணியாத திரோத்ஸ்கியவாதிகள் அதே சமயத்தில் விவசாயிகளைக் கூட்டுறவின் மூலமாக சோஷலிச நிர்மாணத்தில் ஈடுபடுத்து கின்ற சாத்தியத்தை மறுத்தார்கள். அதா வது தனிப்பட்ட விவசாயப் பண்ணைகளை சோஷலிஸ்ட் ரீதியில் புனரமைப்பதற்கு ஒரு கருவி என்ற முறையில் கூட்டுறவின் முக் கியத்துவத்தை மறுத்தார்கள். கூட்டுறவுகளை



படிப்பகம்

www.padippakam.com

அரசு நிறுவனங்களாக மாற்றி விவசாய உற்பத்திச் சாதனங்களை சமூக உடைமையாக்கி அரசுக்குச் சொந்தமான மாபெரும் விவசாய நிறுவனங்களை ஏற்படுத்துவது திரோத்ஸ்கியவாதிகளின் விவசாய வளர்ச்சித் திட்டம். அவர்கள் இத்திட்டத்தை லெனினுடைய திட்டத்துக்கு எதிராக வைத்தார்கள். அவர்கள் திட்டத்தின்படி கிராமப் பகுதிகளில் ஏற்படக் கூடிய மாற்றம் சோவியத் அரசின் அரசியல் அடிப்படைகளை, தொழிலாளி வர்க்கத்துக்கும் உழைக்கின்ற விவசாய வர்க்கத்துக்கும் இடையிலுள்ள கூட்டணியை அரித்தழித்து விடும், சோவியத் யூனியனில் முதலாளித்துவம் மறுபடியும் ஏற்படுகின்ற ஆபத்தும் அதில் இருந்தது.

திரோத்ஸ்கிய எதிர்ப்பு அணி தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகளின் கூட்டணிக்குப் பெரும் ஆபத்தை ஏற்படுத்தியபடியால் கட்சி அதை எதிர்த்து உறுதியான போராட்டத்தைத் தொடங்கியது. பெரும்பான்மையான கம்யூனிஸ்டுகள் எதிரணியின் கருத்துக்களைக் கண்டனம் செய்தார்கள்.

சோஷலிசம் தனியொரு நாட்டில் வெற்றி பெற முடியாது என்னும் முறியடிக்கப்பட்ட திரோத்ஸ்கியவாத எதிர்ப்பு அணியின் கருத்தை ''புதிய எதிர்ப்பு அணியின்'' தலைவர்களான ஸினோவியெவ் மற்றும் காமெனெவ் எடுத்துக் கொண்டார்கள். அவர்கள் பிற்காலத்தில் திரோத்ஸ்கியவாத-ஸினோவியெவ் கூட்டணியை அமைத்தார்கள். ''புதிய எதிர்ப்பு அணியின்'' ஆதரவாளர்கள் திரோத்ஸ்கியின் நடுத்தர விவசாயி எதிர்ப்புக் கொள்கையைப் பின்பற்றினார்கள். கிராமப் பகுதிகளில் அடுக்குநிலை அமைவதை ''நடுத்தர விவசாயி அரித்தழிக்கப்படுதல்'', ஒரு பக்கத்தில் குலாக்குகளையும் மறுபக்கத்தில் ஏழை விவசாயிகளையும் கொண்ட எதிர்முனை விவசாயக் குழுக்களின் வளர்ச்சி என்று கருதினார்கள். கூட்டுறவு ஸ்தாபனங்கள் பணக்கார விவசாயிகளிடமும் குலாக்குகளிடமும் சிக்கியிருக்கின்றன, ஆகவே அவை முதலாளித்துவ வளர்ச்சியை நோக்கிச் செல்கின்றன, விவசாய வர்க்கத்தின் அடுக்குநிலை அமைவைத் தீவிரப்படுத்துகின்றன என்று அவர்கள் கருதினார்கள். இதன் தொடர்பாக ''புதிய எதிர்ப்பு அணியின்'' உறுப்பினர்கள் உடனடியாகக் கூட்டுப் பண்ணைகள் அமைத்தல் என்ற கோஷத்தை முன்வைத்தார்கள். ஆனால், கூட்டுப் பண்ணைகள் ஏழை விவசாயிகளின் மத்தியில் மட்டுமே அமைக்கப்பட வேண்டும் என்று கருதி கூட்டுப் பண்ணைகளின் நோக்கத்தையும் அதே அளவுக்குத் தவறாகப் புரிந்து கொண்டார்கள்.

திரோத்ஸ்கியவாத-ஸினோவியெவ் எதிர்ப்பு அணியின் கருத்துக்கள் கட்சியின் காங்கிரசுகள், மாநாடுகள், மத்திய கமிட்டியின் பேரவைக் கூட்டங்கள், கட்சி ஸ்தாபனங்கள் மற்றும் பத்திரிகைகளில் கடுமையாக விமர்சிக்கப்பட்டன. எதிர்ப்பு அணி சித்தாந்த ரீதியில் முறியடிக்கப்பட்டதைத் தொடர்ந்து





படிப்பகம்

www.padippakam.com

அதன் ஸ்தாபனங்கள் அனைத்தும் முழுமையாக நிலை குலைந்தன.

சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் 15வது காங்கிரசுக்குப் பிறகு, கட்சி நகரத்திலும் கிராமப் பகுதிகளிலும் முதலாளித்துவ நிலைகளின் மீது தாக்குதலைத் தீவிரப் படுத்திய பொழுது, விரிவான சோஷலிஸ்ட் வளர்ச்சிக்கான கட்சியின் அடிப்படையான கொள்கையைக் கட்சி உறுப்பினர்களின் மற்றொரு கோஷ்டி — வலதுசாரித் திரிபு என்று சொல்லப்படுவது — எதிர்த்தது. அக் கோஷ்டியின் தலைவராகவும் தத்துவாசிரியராகவும் புஹாரின் இருந்தார். விவசாயி வர்க்கத்தைக் கூட்டுறவுகளில் அமைப்பதைப் பற்றிய அவருடைய ''தத்துவம்'' கூட்டுறவைப் பற்றிய லெனினுடைய திட்டத்தையும், முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்துக்கு மாறுகின்ற கட்டத்தில் வர்க்கங்களையும் வர்க்கப் போராட்டத்தையும் பற்றிய அவரது தத்துவத்தையும் முழுமையாகத் திரித்துக் கூறி மாற்றியது. புஹாரினுடைய தத்துவம் சோஷலிசத்துக்கு ''எதிர்ப்பு'' அல்ல, ''ஆதரவானது'' என்று சொல்லப்பட்ட கருத்துக்களின் மொத்தத் தொகுதியைப் பிரதிநிதித்துவம் செய்த காரணத்தால் அது மிகப் பெரிய அபாயமாக இருந்தது.

வலதுசாரி சந்தர்ப்பவாதிகள் லெனினுடைய கூட்டுறவுத் திட்டத்திலிருந்து அதன் சாராம்சத்தை, அதாவது தனிப்பட்ட சிறு விவசாய நிலவுடைமைகளை சோஷலிஸ்ட் உற்பத்திக்



கூட்டுறவுகளாக அமைக்க வேண்டிய அவசியத்தை நீக்கினார்கள். சிறு பண்ட விவசாயப் பொருளாதாரத்தைப் பாதுகாக்க வேண்டும் என்னும் கருத்தை ஆதரித்து, குலாக்குகள் உள்பட விவசாய வர்க்கம் தன்னியல்பான முறையில், ''சமாதான பூர்வமாக'' சோஷலிச சமாக வளர்ச்சி அடையும் என்று வலியுறுத்தினார்கள். எல்லா விவசாயிகளும் சோஷலிசத்துக்கு மாறுவதற்கு அவர்களை விற்பனை மற்றும் சப்ளை கூட்டுறவுகளுக்குள் கொண்டு வருவதே போதுமானது, அதாவது இந்த மாற்றத்தை உற்பத்தியின் மூலமாக அல்ல, பண்டப் புழக்கத்தின் மூலமாகச் செய்ய முடியும் என்று கருதினார்கள். உற்பத்திக் கூட்டுறவுகள் பண்டப் புழக்கத்துக்குத் துணைத் துறையாகவே இருக்கும் என்று புஹாரின் கூறினார்.

புஹாரின் லெனினுடைய கூட்டுறவுத் திட்டத்துக்கு எதிர்மாறான முறையில் கூட்டுப் பண்ணைகளுக்கு எதிராகக் கூட்டுறவுகளை வைத்தார், கூட்டுப் பண்ணை முறையின் எல்லா வடிவங்களையும் நிராகரித்தார். கூட்டுப் பண்ணைகளின் முக்கியத்துவம் இரண்டாம் நிலையே, அவற்றை விட்டுவிடக் கூடாது, ஆனால் அதிகமாகக் கணக்கிலெடுத்துக் கொள்ளவும் கூடாது என்று அவர் கூறினார். விவசாயி வர்க்கம் சோஷலிசத்தை நோக்கிப் போகின்ற ராஜபாட்டை கூட்டுப் பண்ணைகள் அல்ல, கூட்டுறவின் ஆக எளிமையான வடிவங்களே, குறிப்பாக விற்பனை மற்றும்



படிப்பகம்

www.padippakam.com

சப்ளை கூட்டுறவுகளே என்று புஹாரினும் அவரது சீடர்களும் கூறினார்கள். விவசாயத்தை சோஷலிஸ்ட் ரீதியில் புனரமைக்கின்ற லெனினுடைய கூட்டுறவு திட்டத்தை வலதுசாரி சந்தர்ப்பவாதிகள் இம்முறையில் நிராகரித்தார்கள்.

சோவியத் சமூகம் வர்க்கப் போராட்டம் இல்லாமல் சமாதான முறையில் சோஷலிசத்துக்கு முன்னேற முடியும் என்பது புஹாரினுடைய தவறான, லெனினியத்துக்கு எதிரான தத்துவம். கிராமப் பகுதிகளில் ''வர்க்க சமாதானத்தை'' நிறுவ முடியும் என்று அது கூறியது. குலாக் ''சமாதான முறையில் சோஷலிசத்துக்கு வருவார்'' என்ற கருத்து அதிலிருந்து தோன்றியதே.

எனினும் சோவியத் கிராமப் பகுதிகளில் வர்க்கப் போராட்டம் புஹாரின் கற்பனை செய்த முறையில் அல்ல, புறநிலையான விதிகளுக்கேற்ப வளர்ச்சியடைந்து கொண்டிருந்தது. கடைசியாக எஞ்சியிருந்த சுரண்டும் வர்க்கமாகிய குலாக்குகள் சோஷலிஸ்ட் பொருளாதாரத்தை அமைக்கின்ற சோவியத் அரசாங்கத்தின் நடவடிக்கைகளைத் தீவிரமாக எதிர்த்தார்கள். அவர்கள் நிர்ணயிக்கப்பட்ட விலைகளுக்குத் தானியத்தை விற்பனை செய்ய மறுத்தார்கள், தானியத்தைப் பதுக்கினார்கள், அடிக்கடி அழித்தார்கள், பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டார்கள்.

கூட்டுப் பண்ணை இயக்கம் ஆரம்ப முதலே கண்டிப்பான வர்க்கத் தன்மையைக் கொண்டிருந்தது என்பதை இங்கே வலியுறுத்த வேண்டும். 1929இல் முழுமையாக கூட்டுப் பண்ணை மயமாக்குதலுக்கு மாறுவதற்கு முன்னர் கம்யூனிஸ்ட் கட்சியும் சோவியத் அரசாங்கமும் குலாக்குகளைக் கட்டுப்படுத்தி அகற்றுகின்ற கொள்கையைக் கடைப்பிடித்தன. குத்தகைக்கு விடப்படுகின்ற நிலத்தின் அளவும் கூலி விவசாயிகளை உபயோகிப்பதும் குறிப்பிட்ட அளவுக்குக் கட்டுப்படுத்தப்பட்டன. குலாக்குகள் கடனுதவி பெறுவதும் விவசாய இயந்திரங்களை வாங்குவதும் சுலபமாக இல்லாதபடி சில கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. குலாக்குகளின் வருமானத்துக்கு மிகை வரி விதிக்கப்பட்டது. அவர்கள் தானியத்தை நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு அரசாங்கத்திடம் விற்பனை செய்ய வேண்டும். சோவியத் அரசாங்கம் பொருளாதார நடவடிக்கைகளின் மூலம் கிராமப் பகுதிகளில் முதலாளித்துவ சக்திகளின் வளர்ச்சி மிகவும் குறைவாக இருக்கும்படி செய்தது. எனினும் குலாக்குகளின் எண்ணிக்கை — மெதுவாகவே என்ற போதிலும் — அதிகரித்தது. 1927இல் சோவியத் யூனியனில் 11,00,000 குலாக்குகள் இருந்தனர். அவர்களிடம் ஓரளவுக்குப் பரந்த பொருளாயத அடிப்படை இருந்தது. விவசாயம் செய்யப்பட்ட பிரதேசத்தில் 15%, மொத்த உழவு மாடுகளில் 11.2 % மற்றும் அன்றைக்கிருந்த விவசாய இயந்திரங்களில் பெரும் பகுதி அவர்களிடம் இருந்தது. இந்த நிலைமைகளில், கூட்டுப் பண்ணைகளும் அரசுப்



படிப்பகம்

www.padippakam.com

பண்ணைகளும் பலவீனமாக, குலாக்குகளின் தானிய உற்பத்தியை ஈடு செய்ய முடியாதிருந்த சூழ்நிலையில் குலாக்குகளைக் கட்டுப்படுத்துகின்ற கொள்கை முற்றிலும் சரியானது, அவசியமானது. ஆனால் வர்க்கம் என்ற முறையில் குலாக்குகளின் பொருளாதார அடிப்படையை இக்கொள்கை ஒழிக்கவில்லை; ஏனென்றால் தனியார் விவசாய உடைமைகளில் பெரும் பகுதி நீடித்தது. விவசாயப் பொருளாதாரத்தை சோஷலிஸ்ட் அடிப்படையில் முழுமையாக மாற்றிய பிறகுதான் சிறு பண்ட உற்பத்தியில் குலாக்குகளின் பலமான நிலைகளை முற்றிலும் ஒழிக்க முடியும். ஆனால் இதற்கு போதுமான பொருளாயத அடிப்படை அவசியம். **1929**இல் சோவியத் யூனியனில் சோஷலிஸ்ட் தொழில்மயமாக்கலின் இரண்டு வருடகாலச் சாதனைகளின் விளைவாக விவசாயிகளைக் கூட்டுறவுகளில் அமைப்பதற்குப் பொருளாயத அடிப்படை உருவாக்கப்பட்டிருந்தது. இப்பொழுது சோவியத் அரசிடம் தானிய உற்பத்திக்கு உறுதியான அடிப்படை இருந்தது; **1930**இல் கூட்டுப் பண்ணைகளும் அரசுப் பண்ணைகளும் சந்தைக்கு **40,00,00,000** பூடுகள் தானியத்தை உற்பத்தி செய்தன. எல்லாவற்றையும் கூட்டுப் பண்ணையாக்குதல் என்ற அடிப்படையில் குலாக்குகளை வர்க்கம் என்ற முறையில் ஒழிக்கின்ற கொள்கையைப் பின்பற்றுவதை இது சாத்தியமாக்கியது. கிராமப் பகுதி குலாக்குகளுக்கு எதிராகப் பெருந்



திரளான விவசாயிகளின் போராட்டக் களமாக மாறியது. எல்லாமே கூட்டுப் பண்ணையாக்கப்பட்ட பிரதேசங்களில் தனியார் நிலங்களில் கூலியுழைப்பைப் பயன்படுத்துவது தடை செய்யப்பட்டது; நிலத்தைக் குத்தகைக்கு விடுகின்ற உரிமை ரத்து செய்யப்பட்டது. விவசாயிகள் குலாக்குகளின் உடைமைகளைப் பறிமுதல் செய்தார்கள், உற்பத்திச் சாதனங்களைக் கைப்பற்றி அவற்றைக் கூட்டுப் பண்ணைகளில் ஒப்படைத்தார்கள்.

**1930**இல் **16**வது கட்சி காங்கிரஸ் நடைபெறுவதற்கு முன்னரே கூட்டுப் பண்ணை இயக்கம் மாபெரும் வெற்றிகளைப் பெற்றிருந்தது. அந்தச் சமயத்தில் நாட்டில் ஏற்கெனவே **90,000** கூட்டுப் பண்ணைகள் இருந்தன, அவற்றில் **57,00,000** விவசாயப் பண்ணைகள் இணைக்கப்பட்டிருந்தன. **16**வது கட்சி காங்கிரசுக்குப் பிறகு கூட்டுப் பண்ணை இயக்கத்தின் வளர்ச்சி தொடர்ந்தது. **1929**ம் வருடம் அதன் வளர்ச்சியில் ஒரு திருப்புமுனை என்றால், **1930—1932**ம் வருடங்கள் கூட்டுப் பண்ணைகளின் எண்ணிக்கையில் வேகமான அதிகரிப்பைக் குறித்தன. அந்த வருடங்களில் அவற்றின் எண்ணிக்கை **2,11,100**ஆக அதிகரித்தது. கூட்டுப் பண்ணையாக்கப்பட்ட விவசாயப் பண்ணைகளின் சதவிகிதம் **1930**இல் **23.6**இலிருந்து **1932**இல் **61.5**ஆக உயர்ந்தது. **1934**இல் ஏற்கெனவே **2,33,300** கூட்டுப் பண்ணைகள் இருந்தன; விவசாயம் செய்யப்பட்ட மொத்த நிலத்தில்



படிப்பகம்

www.padippakam.com

87,4 % மற்றும் விவசாயப் பண்ணைகளில் 71.4 % அவற்றிடமிருந்தன. விவசாயப் பண்ணைகளை உற்பத்திக் கூட்டுறவுகளாக அமைக்கின்ற, சிறு விவசாயிகளின் நாடாகிய சோவியத் யூனியனை உலகத்தின் மிக பெரிய விவசாய நாடாக மாற்றிய வெகுஜன இயக்கம் பெரும்பாலும் நிறைவு பெற்றதை இது குறித்தது. 1930 – 1934ம் வருடங்களின் போது கூட்டுப் பண்ணைகளை அமைப்பதற்கு ஏற்பட்டிருந்த அதிகமான வாய்ப்பும் உயர்ந்த சாதனை விகிதங்களும், கம்யூனிஸ்ட் கட்சியும் சோவியத் அரசாங்கமும் நிறைவேற்றிய மாபெரும் வேலை விவசாயிகளில் மிகப் பெரும்பான்மையினரின் உணர்வில் மாற்றத்தை ஏற்படுத்தியிருந்ததை எடுத்துக்காட்டின. கிராமப் பகுதிகளில் நடைபெற்ற வர்க்கப் போராட்டம் சோஷலிசத்துக்கு ஆதரவான முறையில் வெற்றியடைந்தது.

சோஷலிஸ்ட் புரட்சியின் மிகக் கடினமான பிரச்சினையைத் தீர்ப்பதில் மனிதகுல வரலாற்றிலேயே இதுதான் முதல் அனுபவம். எனவே லெனின் குறிப்பிட்டதைப் போல, சோவியத் மக்கள் தட்டுத்தடுமாறி முன்னேறினார்கள்; மிகவும் உசிதமான, விஞ்ஞான ரீதியான தீர்வுகளைத் தேடிச் சென்ற பொழுது சரியான பாதையில் கூட தவறுகளைச் செய்தார்கள். சில இடங்களில் பல கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகளை ஒன்று சேர்த்து மாபெரும் கூட்டுப் பண்ணைகள் நிறுவப்பட்டன; சில சமயங்களில் அந்த கிராமங்கள்



ஒன்றுக்கொன்று சில டஜன் கிலோமீட்டர்கள் கூட தள்ளியிருப்பதுண்டு. மக்கள் உற்சாகம் மேலிட்டு அளவுக்கு மீறிய விவசாய நிலவுடைமைகளைக் கூட்டுறவுகளாக அமைத்த உதாரணங்களும் உண்டு. சில சமயங்களில் கிராம மக்கள் மொத்தமாகக் கூட்டுப் பண்ணையில் சேர்ந்ததும் உடனே அதைக் கலைத்து வெளியேறியதும் உண்டு. முக்கிய உற்பத்திச் சாதனங்கள் மட்டுமின்றி பசுக்கள், கோழி, வீட்டுச் சாமான்கள் போன்றவை கூட்டுடைமையாக்கப்பட்டன. கிராமப் பகுதிகளில் வர்க்கப் போராட்டம் நடைபெற்ற சிக்கலான நிலைமைகளில் மத்திய கமிட்டியின் தலைமையில் கம்யூனிஸ்ட் கட்சியும் சோவியத் அரசாங்கமும் இத்தகைய தவறுகளை வேகமாகத் திருத்துவதற்கு எல்லா முயற்சிகளையும் செய்தன.

சோவியத் கூட்டுப் பண்ணை அமைப்பு இரண்டாவது உலக யுத்தத்தின் போது ஏற்பட்ட பெரிய இழப்புக்களை ஈடு செய்து மிகவும் வளர்ச்சியடைந்த பொருளாயத மற்றும் தொழில்நுட்ப அடிப்படையை உருவாக்குகின்ற, ஸ்தாபன ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் தன்னை வலுப்படுத்துகின்ற நடவடிக்கைகளைக் கொண்ட கடினமான பாதையைக் கடந்த பிறகு 1950க்களின் கடைசியில் மேலும் வளர்ச்சியடைகின்ற, வலுவடைகின்ற பாதையைப் பின்பற்றியது.

கூட்டுறவைப் பற்றிய லெனின் போதனையினால் வழிகாட்டப்பட்ட கம்யூனிஸ்ட்





படிப்பகம்

www.padippakam.com

கட்சி கூட்டுப் பண்ணை இயக்கத்தின் தத்துவத்தை நிரந்தரமாக வளர்க்கிறது, அந்த அனுபவத்தைத் திரட்டுகிறது. கூட்டுப் பண்ணையின் சோஷலிஸ்ட் உடைமையின் சமூக தன்மையை அதிகப்படுத்துவதற்கு, அரசுக்கும் கூட்டுப் பண்ணைகளுக்கும் மற்றும் கூட்டுப் பண்ணைகளுக்கு இடையிலும் பன்முக ரீதியில் ஒத்துழைப்பை வளர்ப்பதன் மூலம், கூட்டுறவுகளின் நிலையான நிதிகளின் பங்கை அதிகப்படுத்துவதன் மூலம் புதிய வடிவங்களையும் முறைகளையும் கண்டுபிடிக்கிறது. இன்று உற்பத்திக் கூட்டுறவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள புதிய வடிவங்கள் இன்றைய விவசாய வளர்ச்சியுடன் பொருந்துகின்றன என்பதை லெனினுடைய கூட்டுறவுத் திட்டத்தை சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சி வளர்த்திருப்பது எடுத்துக்காட்டுகிறது. கூட்டுப் பண்ணைகளின் பொருளாயத மற்றும் தொழில் நுட்ப அடிப்படை வலுப்படுத்தப்பட்டிருப்பதால் விவசாய உற்பத்தி மேன்மேலும் தொழில் துறை அடிப்படையில் வளர்க்கப்படுகிறது.

இத்தகைய நிலைமையில் கூட்டுப் பண்ணைகளுக்கு இடையில் ஒத்துழைப்பு மற்றும் விவசாய-தொழில்துறை ஒருங்கிணைப்பு மேன்மேலும் அதிகரிக்கின்ற முக்கியத்துவத்தைப் பெறுகின்றன. விவசாய-தொழில்துறை இணையங்கள் எனப்படுகின்ற உற்பத்தி ஒத்துழைப்பின் புதிய வடிவம் தோன்றியிருக்கிறது. இவற்றில் வேளாண்மையும் கால்நடை வளர்ப்பும் பதப்படுத்தும் தொழில்துறையும் பிரதேச மற்றும் துறைவாரியான கோட்பாடுகளின் அடிப்படையில் ஒன்று சேர்ந்திருக்கின்றன. கூட்டுப் பண்ணைகளுக்கு இடையில் ஒத்துழைப்பு மற்றும் விவசாய-தொழில்துறை ஒத்துழைப்பு விவசாய உற்பத்தியில் விசேஷத் தேர்ச்சிக்கும் அதைக் குவிப்பதற்கும் பரந்த வாய்ப்புக்களைத் தோற்றுவித்திருக்கின்றன. இத்தகைய பெரிய மற்றும் பொருளாதார ரீதியில் வலுவான நிறுவனங்களில் கறாரான துறைத் தேர்ச்சியும் உயர்ந்த திறமையும் உண்டு. இவை விவசாய உற்பத்திக்குத் தொழில்துறை அடிப்படையைக் கொடுத்து விவசாயத்தை தொழில்துறையில் ஒரு ரகமாக மாற்றுகின்றன. கூட்டுப் பண்ணை உடைமையை தேசிய உடைமையின் மட்டத்துக்கு உயர்த்துதல், நகரத்துக்கும் கிராமப் பகுதிகளுக்கும் இடையிலுள்ள தீவிர வேற்றுமைகளை ஒழித்தல் ஆகிய முக்கியமான சமூகப் பிரச்சினைகளை வெற்றிகரமாகத் தீர்ப்பதற்கும் இது உதவுகிறது.

உலக வரலாற்றில் முதன்முறையாக கிராமப் பகுதியில் ஒரு புதிய, சோஷலிஸ்ட் அமைப்பை நிறுவிய நாடு சோவியத் யூனியனாகும். தனிப்பட்ட நிலவுடைமைகள் கூட்டுறவு முறையின் மூலம் பெரிய, கூட்டு சோஷலிஸ்ட் விவசாய நிறுவனங்களாக (கூட்டுப் பண்ணைகள்) ஒன்று சேர்க்கப்பட்டன. பொது கூட்டுடைமையாக்கல் கடைசி சுரண்டும் வர்க்கமாகிய குலாக்குகளை ஒழித்தது; நாட்டில் முதலாளித்துவத்தை மறுபடியும் ஏற்படுத்தக் கூடிய கடைசி ஆதாரம் முழுமையாக அகற்றப்




படிப்பகம்

www.padippakam.com

பட்டுவிட்டது. கூட்டுப் பண்ணை முறையின் வெற்றி நகரத்துக்கும் கிராமங்களுக்கும் இடையில் நெடுங்காலமாக இருந்திருக்கின்ற எதிர் நிலையை, விவசாய வர்க்கம் ஏழை விவசாயிகள், நடுத்தர விவசாயிகள், குலாக்கு கள் என்று பிரிக்கப்படுவதை முற்றிலும் ஒழித்துவிட்டது. உழைப்பின் சமூக அமைப்பில் விவசாய வர்க்கத்தின் பாத்திரம் அடிப்படையான முறையில் மாறிவிட்டது. கிராமப் பகுதிகளில் கூட்டுப் பண்ணை உடைமை எனப்படுகின்ற நன்கு வேரூன்றிய சோஷலிஸ்ட் உடைமை வடிவம் இப் பொழுது இருக்கிறது; இதை அடிப்படையாகக் கொண்டு புதிய, சோஷலிஸ்ட் சமூக உறவுகள் ஏற்பட்டிருக்கின்றன. உழைக்கும் விவசாயிகள் தம்முடைய வறுமை மற்றும் அறியாமையை ஒழிப்பதற்கு, குலாக்குகளிடம் அடிமைப் பட்டிருப்பதிலிருந்து விடுதலை பெறுவதற்கு இவை அனைத்தும் உதவியிருக்கின்றன. அரசி யல் கண்ணோட்டத்தில் பார்க்கும் பொழுது கூட்டுப் பண்ணை முறை சோவியத் அரசையும் அதற்கு அடிப்படையான தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகளின் கூட்டணியையும் பலப்படுத்தியிருக்கிறது, விவசாயிகள் சமூக உற்பத்தியின் நிர்வாகத்தில் பங்கெடுப்பதற்கும் தேசியப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் உரிய மெய்யான நிலைமைகளைப் படைத் திருக்கிறது. பொருளாதாரக் கண்ணோட் டத்தில், நவீன தொழில்துறையின் அடிப் படையில் விவசாயத்தை வளர்ப்பதை, பேரள வான உற்பத்தியை உபயோகித்து சோஷ



லிசத்தையும் கம்யூனிசத்தையும் நிர்மாணிப் பதை அது சாத்தியமாக்கியிருக்கிறது. முடி வாக, சமூகக் கண்ணோட்டத்தில், அது உழைக்கும் விவசாய வர்க்கத்தைச் சுரண் டலிலிருந்தும் வறுமையிலிருந்தும் விடுவித்தது மட்டுமல்லாமல், சோவியத் சமூகத்தில் வர்க்க வேறுபாடுகளை முழுமையாக ஒழிப்பதற்கு வழிவகுக்கின்ற சமூக உறவுகளின் புதிய அமைப்பை நிறுவியிருக்கிறது.

படிப்பகம்

www.padippakam.com

## லெனினுடைய கூட்டுறவுத் திட்டத்தின் சர்வதேச முக்கியத்துவம்

சோவியத் யூனியனில் சோஷலிஸ்ட் முறையில் விவசாயத்தைப் புனரமைத்த அனுபவம் சர்வதேச முக்கியத்துவமுடையது; ஏனென்றால் அது சோஷலிச நிர்மாணத்தில் கூட்டுறவின் சமூகப் பாத்திரத்தைப் பற்றிய மார்க்சிய-லெனினிய போதனை மெய்யானது என்று நிரூபிக்கிறது. முதலாளித்துவ அமைப்பைத் தூக்கியெறிவதற்கு முன்னர் பாட்டாளி வர்க்கமும் அதன் கட்சியும் கூட்டுறவு ஸ்தாபனங்களில் தங்களுடைய செல்வாக்கைப் பலப்படுத்திக் கொள்கின்ற போராட்டத்தைத் தொடங்குகின்ற பொழுது கூட்டுறவுகளின் சோஷலிஸ்ட் மாற்றம் அதிகமாக வெற்றியடைகிறது என்பதை சோவியத் யூனியனில் சோஷலிஸ்ட் நிர்மாணத்தின் வரலாறு எடுத்துக்காட்டுகிறது. கூட்டுறவுகள் குட்டி பூர்ஷ்வா ஸ்தாபனங்கள், ஆகவே பாட்டாளி வர்க்க அரசில் அவற்றுக்கு இடமில்லை என்னும் குறுங்குழுவாதப் போக்கு அதற்குப் பெரிய தடையாக இருக்கும். பல நாடுகளில் சோஷலிசம் வெற்றியடைந்த பிறகு, முதலாளித்துவக் கூட்டுறவு ஸ்தாபனங்களை சோஷலிஸ்ட்



ஸ்தாபனங்களாக மாற்றுதல், உழைக்கின்ற விவசாய வர்க்கத்தை சோஷலிசத்துக்குள் கொண்டு வரும் கருவிகளாக அவற்றை உபயோகித்தல் ஆகியவற்றில் கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் சோவியத் அரசின் அனுபவம், சிறு பண்ட விவசாயப் பொருளாதாரத்திலிருந்து பெரிய அளவு சோஷலிஸ்ட் விவசாயத்துக்கு மாறுவது இயற்கையான வளர்ச்சி என்னும் மார்க்ஸ், லெனினுடைய தத்துவ ரீதியான கருதுகோள்களை மெய்பித்திருப்பதுடன் அதற்குப் பின்பற்றப்பட்ட வழிகளும் முறைகளும் சரியானவை என்றும் நிரூபித்திருக்கிறது.

லெனினுடைய கூட்டுறவுத் திட்டத்தின் முக்கியமான கருத்துக்கள் விவசாயத் துறையில் மற்ற சோஷலிஸ்ட் நாடுகளின் பொருளாதாரக் கொள்கைக்கும் அடிப்படையாக இருக்கின்றன. கூட்டுறவைப் பற்றிய லெனினுடைய போதனை சோவியத் யூனியனுக்கு மட்டுமே பொருந்தக் கூடியது என்று பூர்ஷ்வா சித்தாந்திகள் கூறுவது எவ்வளவு தவறானது என்பதை இது எடுத்துக்காட்டுகிறது. இந்த நாடுகளில் விவசாயத்தை சோஷலிஸ்ட் முறையில் மாற்றியமைத்த அனுபவம் கூட்டுறவைப் பற்றி லெனின் வகுத்த கோட்பாடுகள் சரியானவை என்று நிரூபிக்கிறது.

கிராமப் பகுதிகளில் வளர்ச்சியடைந்த முதலாளித்துவ உறவுகள் உள்ள நாடுகள், பின்தங்கிய பொருளாதாரத்தையும் நிலப்பிரபுத்துவ எச்சங்களையும் கொண்ட நாடுகள்



படிப்பகம்

www.padippakam.com

ஆகிய இரண்டிலுமே சோஷலிச நிர்மாணத்தின் போது லெனினுடைய கூட்டுறவுத் திட்டம் வெற்றிகரமாக அமுலாக்கப்பட்டிருக்கிறது. மேலும் எல்லா சோஷலிஸ்ட் நாடுகளிலும் விவசாயத்தை சோஷலிஸ்ட் முறையில் மாற்றியமைப்பது — அந்த நாடுகளின் வரலாற்று, தேசிய இன மற்றும் சமூக பொருளாதார நிலைமைகளின் கணிசமான சிறப்பியல்புகள் ஒரு புறமிருக்க, தனிப்பட்ட விவசாயப் பண்ணைகளை சோஷலிஸ்ட் கூட்டுறவுகளாக மாற்றுவதற்கு உபயோகிக்கப்பட்ட குறிப்பிட்ட வடிவங்களும் முறைகளும் எப்படி இருந்தாலும் — பிரதானமாக, வரலாற்று ரீதியாகத் தவிர்க்கவியலா தன்மையில் பொதுவான ஒழுங்கு முறைக்கு உட்பட்டதே.

லெனினுடைய கூட்டுறவுத் திட்டத்தின் அடிப்படையான கோட்பாடுகளைப் பின்பற்றுகின்ற பொழுது, அவசியமான புறவய மற்றும் அகவய முன்நிபந்தனைகளுடன் கூடிய சீர்திருத்தங்கள் அமுலாக்கப்படுகின்ற பொழுது, உழைக்கின்ற விவசாய வர்க்கத்தின் பெருந்திரளான மக்கள் பெரிய அளவு கூட்டுப் பொருளாதாரத்துக்கு மாற வேண்டிய அவசியத்தையும் உசிதத்தையும் முழுமையாகப் புரிந்து கொள்கின்ற பொழுதுதான் வெற்றி கிடைக்கிறது என்பதை சோவியத் யூனியனிலும் மற்ற சோஷலிஸ்ட் நாடுகளிலும் விவசாயத் துறையில் சோஷலிஸ்ட் சீர்திருத்தங்களின் அனுபவம் எடுத்துக் காட்டுகிறது. தனிப்பட்ட விவசாய நிலவுடைமைகளை பெரிய கூட்டுடைமை, கூட்டுறவு நிறுவனங்களாக ஒன்று சேர்ப்பதை தொழிலாளி வர்க்கத்தினால் வழிகாட்டப்படுகின்ற தொழிலாளி வர்க்கம் மற்றும் விவசாயி வர்க்கத்தின் கூட்டணி உறுதி செய்கிறது. கிராமப் பகுதிகளில் கூட்டுறவு அமைப்பை நிறுவுவதும் வலுப்படுத்துவதும், பாட்டாளி வர்க்க அரசிடமிருந்து தொடர்ச்சியாக நிதி, இயந்திரங்கள், நிபுணர்கள் உதவி கிடைத்தால், மேலும் சோஷலிச விவசாயத்துக்கான பொருளாயத மற்றும் தொழில்நுட்ப அடிப்படை — அது சோஷலிசத் தொழில்மயமாக்கலின் விளைவாக அல்லது அந்த நிகழ்வுப்போக்கின் போது ஏற்பட்டிருக்க வேண்டும் — இருந்தால் மட்டுமே சாத்தியம். தனிப்பட்ட நிலவுடைமைகளை சோஷலிஸ்ட் கூட்டுறவுகளாக ஒன்று சேர்த்தல் சுரண்டல் சக்திகளின் எதிர்ப்பை நசுக்குவதையும் வர்க்கம் என்ற முறையில் குலாக்குகளை ஒழிப்பதையும் முன்னூகிக்கிறது. பெருந்திரளான விவசாயிகள் மத்தியில் தொடர்ச்சியான சித்தாந்த, கல்வி மற்றும் ஸ்தாபன வேலைகளைச் செய்கின்ற கம்யூனிஸ்ட் கட்சியின் வழிகாட்டுதலின் கீழ் கூட்டுறவு மற்றும் கூட்டுப் பண்ணை இயக்கங்களில் உழைக்கும் விவசாயி வர்க்கம் பெருந்திரளாகப் பங்கெடுப்பதன் மூலமாக மட்டுமே கிராமப் பகுதிகளில் கூட்டுப் பண்ணை அமைப்பை நிறுவ முடியும், வலுப்படுத்த முடியும்.

லெனினுடைய கூட்டுறவுத் திட்டம் மற்றும் சோவியத் அனுபவத்தின் அடிப்படையில்



படிப்பகம்

www.padippakam.com

சோஷலிஸ்ட் நாடுகளில் விவசாயத்தை சோஷலிஸ்ட் முறையில் மாற்றியமைத்தல் அந்த நிகழ்வுப் போக்கு பின்வரும் பொதுவான கூறுகளைக் கொண்டிருப்பதை நிரூபித்தது:

(1) இரண்டு ரகமான சோஷலிஸ்ட் பொருளாதாரங்களை, அதாவது கூட்டுறவு உடைமையை அடிப்படையாகக் கொண்ட கூட்டுப் பண்ணைகள், அரசு உடைமையை அடிப்படையாகக் கொண்ட பண்ணைகளை அமைத்தல்;

(2) உழைக்கும் விவசாயிகள் சிறு பண்ட உற்பத்தி செய்கின்ற தனியார் விவசாயத்திலிருந்து பெரிய அளவு கூட்டுறவு சோஷலிஸ்ட் விவசாயத்துக்குப் படிப்படியாகவும் விருப்ப பூர்வமாகவும் மாறுதல்;

(3) கூட்டுறவின் ஆக எளிமையான வடிவங்களிலிருந்து ஆக உயர்ந்த வடிவங்களுக்கு வளர்ச்சியடைகின்ற கூட்டுறவு சங்கங்களின் பல கட்டத் தன்மை;

(4) நிறைவேற்றிய வேலைக்குத் தகுந்த ஊதியம்;

(5) பெரிய கூட்டுப் பண்ணைகளில் வேளாண்மைக் குழுக்கள் மற்றும் கூட்டுகள், கால்நடை வளர்ப்புப் பண்ணைகளைப் போன்ற உற்பத்திப் பிரிவுகளை அமைத்தல்.

அதே சமயத்தில் சோஷலிஸ்ட் நாடுகளின் வளர்ச்சியில் இருந்த வரலாற்று, தேசிய இன, சமூக பொருளாதார வேறுபாடுகளின் விளைவாக அவற்றில் ஒவ்வொன்றும், பிரதானமாக நிலப் பிரச்சினையைத் தீர்ப்பதில் — கிராமப் பகுதிகளில் சோஷலிஸ்ட் நிர்மாணத்துக்கு அது முக்கியமான முன்நிபந்தனை — பிரத்யேகமான கூறுகளைக் கொண்டிருந்தன. லெனின் வற்புறுத்தியதைப் போல, ஒரு நாட்டில் நிலப் பிரச்சினையைத் தீர்ப்பதற்குரிய முறைகளைத் தேர்ந்தெடுத்தல் அந்த நாட்டின் ஸ்தூலமான வரலாற்று நிலைமைகளினால் நிர்ணயிக்கப்படுகிறது. கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் கட்சிகள் இந்த அடிப்படையான கோட்பாட்டைப் பின்பற்றி இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்குரிய முறைகளையும் ஸ்தூலமான வடிவங்களையும் வேகத்தையும் நிர்ணயிக்கின்றன. சோவியத் யூனியனைத் தவிர, மங்கோலிய மக்கள் குடியரசிலும் எல்லா நிலமும் நாட்டுடைமை ஆக்கப்பட்டது. மற்ற சோஷலிஸ்ட் நாடுகள் அனைத்திலும் இரண்டு வடிவங்களை — அதாவது நாட்டுடைமை ஆக்குதல் மற்றும் தனிப்பட்ட விவசாய உடைமைக்கு மாற்றுதல் — பின்பற்றி நிலப் பிரச்சினை தீர்க்கப்பட்டது. மேலும், நிலத்தைத் தனியார் விவசாய உடைமைக்கென்று பிரித்துக் கொடுத்தல் அன்று முக்கியமாக இருந்தது; மிகக் குறைவான பகுதி மட்டுமே நாட்டுடைமை ஆக்கப்பட்டது. உதாரணமாக, மொத்த நிலத்தில் ஹங்கேரியில் 2.5 %, ஜெர்மன் ஜனநாயகக் குடியரசில் 10.8 %, போலந்தில் 20 %, ருமேனியாவில் 20.6 %, செக்கோஸ்லொவாக்கியாவில் 23.3 %, யுகோஸ்லாவியாவில் 28.7 % நாட்டுடைமை ஆக்கப்பட்டது. கியூபாவில் இரண்டு விவசாய சீர்திருத்தங்கள் (1959 மற்றும் 1963) மொத்த



படிப்பகம்

www.padippakam.com

நிலத்தில் 70 சதவிகிதத்தை நாட்டுடைமை ஆக்கின.

சோஷலிஸ்ட் நாடுகளில் விவசாய சீர்திருத் தங்களின் வேகமும், குறைந்த நிலமுடைய மற்றும் நிலமில்லாத விவசாயிகளுக்கும் விவ சாயத் தொழிலாளர்களுக்கும் கூலி உழைப்பை உபயோகிக்காமல் நிலத்தைப் பிரித்துக் கொடுக் கின்ற கோட்பாடுகளும் வெவ்வேறாக இருந் தன. நிலத்தைத் தனியார் உடைமையாகப் பிரிப்பது விவசாயக் கட்டமைப்பில் சில பிரத்யேகமான தன்மைகளை வளர்க்கிறது, விவசாயிகளை உற்பத்தி கூட்டுறவுகளில் அமைப்பதில் சில கஷ்டங்களை ஏற்படுத்து கிறது, கூட்டுறவு வடிவங்களிலும் முறை களிலும் பல பிரத்யேகமான அம்சங்களைத் தோற்றுவிக்கிறது.

சோஷலிஸ்ட் நாடுகளில் சோஷலிஸ்ட் புரட்சிகள் வெற்றி பெற்றவுடன் முதல் உற்பத்திக் கூட்டுறவுகள் அமைக்கப்பட்டன; சில நாடுகளில் மக்கள் ஜனநாயகப் புரட்சி களின் கட்டத்தில் அவை அமைக்கப்பட்டன. கிராமப் பகுதிகளில் சோஷலிஸ்ட் உற்பத்தி உறவுகள் சீன மக்கள் குடியரசு மற்றும் கொரிய மக்கள் ஜனநாயகக் குடியரசில் 1957இல், பல்கேரியாவில் 1958இல், அல் பேனியாவில் 1961ம் வருடத்தின் ஆரம்பத்தில், ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு, மங்கோலியா, செக்கோஸ்லொவாக்கியா மற்றும் வியத்நாம் ஜனநாயகக் குடியரசில் 1962ம் வருடத்தின் வசந்த காலத்தில் நிறுவப்பட்டன.



கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் கட்சிகள் தங்கள் நாடுகளின் வளர்ச்சியின் வரலாற்றுக் கூறுகளை அடிப்படையாக வைத்து, கூட்டுப் பண்ணைகளை அமைப்பதில் சோவியத் அனு பவத்தைக் கணக்கிலெடுத்துக் கொண்டு உற் பத்திக் கூட்டுறவுகளின் மிகவும் ஏற்றுக் கொள்ளத்தக்க வடிவங்களை உருவாக்கின.

**பல்கேரியாவில்** பலவிதமான விவசாயக் கூட்டுறவு வடிவங்கள் பரவலாக உபயோகிக் கப்பட்டன. சோவியத் ருஷ்யாவில் நுகர்வுக் கூட்டுறவுகள் ஏற்பட்ட தாக்கத்தில் பல்கேரி யாவில் முதல் நுகர்வுக் கூட்டுறவு 1919இல் தோன்றியது; பல்கேரியக் கம்யூனிஸ்ட் கட்சி இதில் பங்கெடுத்தது. 1934–1935இல் பல்கேரியாவின் பல கூட்டுறவு அமைப்புக்களில் 5,23,000க்கும் அதிகமான உறுப்பினர்கள் இருந்தார்கள்; கம்யூனிஸ்டுகளும் முற்போக் கான கூட்டுறவாளர்களும் பல கூட்டுறவு களின் நிர்வாகத்தில் பங்கெடுத்தார்கள். 1939–1940இல் முதல் விவசாய உற்பத்திக் கூட்டுறவுகள் அங்கே அமைக்கப்பட்டன. பல்கேரியாவில் மக்கள் ஜனநாயக அரசு நிறுவப்பட்ட பிறகு உற்பத்திக் கூட்டுறவு களை அமைப்பதற்கு வெகுஜன விவசாய இயக்கம் பிறந்தது. 1945ம் வருடத்தின் முடிவில் ஏற்கெனவே நாட்டில் 382 விவசாய உற்பத்திக் கூட்டுறவுகள் இருந்தன; அவற்றில் 3,43,662 பண்ணைகள் சேர்க்கப்பட்டிருந்தன. எனவே விவசாய உற்பத்திக் கூட்டுறவுகளைப் பற்றிய சட்டத்தை (1945, ஏப்ரல்) இயற்ற வேண்



படிப்பகம்

www.padippakam.com

டிய அவசியம் ஏற்பட்டது; அதன் பிறகுதான் நிலச் சீர்திருத்தச் சட்டம் (1946, மார்ச்) கொண்டுவரப்பட்டது. முதல் சட்டம் விவசாய உற்பத்திக் கூட்டுறவின் ஒரே வடிவத்தை நாட்டில் நிறுவியது. அச்சங்க உறுப்பினர்கள் கூட்டுறவுக்கு மாற்றிய நிலத்தின் பேரில் உடைமையுரிமையை வைத்திருந்தார்கள். அவர்கள் வருடந்தோறும் குறைந்த பட்சமாக நிர்ணயிக்கப்பட்ட வேலை நாட்கள் வேலை செய்திருந்தால்தான் தம்முடைய உழைப்புக்கு மட்டுமின்றி தாங்கள் சங்கத்துக்கு அளித்திருக்கும் நிலத்துக்கும் ஊதியம் பெற முடியும். விவசாய உற்பத்திக் கூட்டுறவின் மொத்த வருமானத்தில் 10 % கூட்டுறவின் பிரிக்க முடியாத நிதிக்கு ஒதுக்கப்பட்டது, 90 % பிரிக்கப்படக் கூடிய நிதிக்கு ஒதுக்கப்பட்டது (இதில் 70 % வேலை நாட்களின்படி பகிர்ந்தளிக்கப்பட்டது, 20 % விவசாயி உற்பத்திக் கூட்டுறவுக்கு மாற்றிய நிலத்தின் விலையை ஈடு செய்வதற்குப் பயன்படுத்தப்பட்டது).

பல்கேரியாவில் உற்பத்திக் கூட்டுறவுகள் நிலச் சீர்திருத்தத்துக்கு முன்னரே ஏற்பட்டிருந்தன என்றால் **ஹங்கேரியில்** 1945இல் நிலச் சீர்திருத்தம் முடிவடைந்த பிறகுதான் அவை நிறுவப்பட்டன. முந்திய நிலப்பிரபுக்களின் பெரிய பண்ணைகளில் ஏழை விவசாயிகளும் விவசாயத் தொழிலாளர்களும் கூட்டுறவு சங்கங்களை அமைத்தார்கள். ஆனால், 1945 – 1948ம் வருடங்களில் உற்பத்திக் கூட்டுறவுகள் முதல் காலடிகளையே எடுத்து வைத்துக் கொண்டிருந்தன. ஹங்கேரிய உழைக்கும் மக்கள் கட்சி (1956ம் வருடத்திலிருந்து ஹங்கேரிய சோஷலிஸ்ட் தொழிலாளர் கட்சி) 1948இல் நாட்டில் தக்க நிலைமைகள் ஏற்பட்ட பிறகு லெனினுடைய கூட்டுறவுத் திட்டத்தை அமுலாக்கும் கொள்கையைத் தொடங்கியது.



ஹங்கேரியின் மக்கள் ஜனநாயக அரசாங்கம் 1948 டிசம்பரில் நிறைவேற்றிய சட்டத்தின்படி நாட்டில் மூன்று விதமான விவசாய உற்பத்திக் கூட்டுறவுகள் நிறுவப்பட்டன. முதல் இரண்டு ரகங்களும் ஆக எளிய உற்பத்திச் சங்கங்களைப் பிரதிநிதித்துவம் செய்தன; அவற்றில் விவசாயிகள் உழுதல், விதைத்தல், உரமிடுதல், கால்நடை பராமரிப்பு முதலிய சில முக்கியமான வேலைகளைக் கூட்டாகச் செய்தார்கள். அதே சமயத்தில் ஒவ்வொரு விவசாயியும் தன்னுடைய விளைச்சலைத் தானே அறுவடை செய்தான். உற்பத்திக் கூட்டுறவுகளின் இரண்டாவது ரகத்தில் சமூக உடைமை இன்னும் அதிகமான அளவில் இடம் பெற்றிருந்தது. இவற்றில் அடிப்படையான விவசாய வேலைகள் அனைத்தும் கூட்டாகச் செய்யப்பட்டன. ஒரு துண்டு நிலத்தில் அறுவடை செய்யப்பட்ட தானியம் அந்த நிலத்தின் சொந்தக்காரரான கூட்டுறவு உறுப்பினருடைய உடைமையாக இருந்தாலும், பொதுவான செலவுகளும் வரிகளும் கழிக்கப்பட்ட பிறகே அவர் தனக்குரிய பங்கினைப் பெறுவார். மூன்றாவது ரகம், கூட்டுறவின் மிக உயர்ந்த வடிவமாகும். இதில் உழைப்பு மற்றும்



படிப்பகம்

www.padippakam.com

அடிப்படையான உற்பத்திச் சாதனங்கள் கூட்டுடைமை ஆக்கப்பட்டிருந்தன. பிரிக்கப்படக் கூடிய நிதியின் பெரும் பகுதி (75 — 80 %) செய்யப்பட்ட வேலைக்குத் தகுந்தவாறும் எஞ்சிய பகுதி நிலத்தின் அளவுக்குத் தகுந்தவாறும் பகிர்ந்தளிக்கப்பட்டது.

1956இல் ஹங்கேரியில் எதிர்ப்புரட்சி சதி முறியடிக்கப்பட்ட பிறகு, 1958 டிசம்பரில் ஹங்கேரிய சோஷலிஸ்ட் தொழிலாளர் கட்சியின் மத்திய கமிட்டியின் பேரவைக் கூட்டத்துக்குப் பிறகு கூட்டுறவுகளை அமைக்கின்ற வேலை வேகமாக நடைபெற்றது. 1959இல் மற்றும் அதற்கடுத்த வருடங்களில் புதிதாக நிறுவப்பட்ட கூட்டுறவுகளில் உற்பத்திக் கூட்டுறவுகளின் உயர் நிலை வடிவங்கள் பெரும்பான்மையானவை.

**ஜெர்மன் ஜனநாயகக் குடியரசிலும்** விவசாயிகளை உற்பத்திக் கூட்டுறவுகளில் அமைப்பதற்கு மூன்று வடிவங்கள் பின்பற்றப்பட்டன. இம்மூன்று வடிவங்களும் நிலம் மற்றும் உற்பத்திச் சாதனங்களில் சமூக உடைமையின் அளவில் மட்டுமின்றி, பொது வருமானத்தை சமூக நிதிகள் மற்றும் கூட்டுறவின் உறுப்பினர்களின் சொந்த உபயோக நிதிக்குப் பகிர்ந்தளிப்பதிலும் வேறுபடுகின்றன.

உற்பத்திக் கூட்டுறவின் முதல் ரகத்தில் விவசாயிகள் கூட்டாக விளை நிலத்தை — சில சமயங்களில் புல்வெளிகளையும் மேய்ச்சல் நிலத்தையும் — உழுது பயிரிடுகிறார்கள். ஆகவே இந்த ரகத்தில் விளை நிலத்தையும் உழைப்பையும் மட்டும் சமூகமயமாக்கிவிட்டால் போதும். இயந்திரங்கள், இதர விவசாயக் கருவிகள், பசுக்கள் மற்றும் உழவு மாடுகள் விவசாயிகளின் சொந்த உடைமையாக இருக்கின்றன. கூட்டுறவுப் பொருளாதார நடவடிக்கைகளுக்கு அவசியமானவை என்று அக் கூட்டுறவின் பேரவைக் கூட்டத்தில் முடிவு செய்யப்படுகின்ற உழவு மாடுகள், விவசாயக் கருவிகள் மற்றும் இயந்திரங்கள் கூட்டுறவின் உறுப்பினர்களுக்குக் குறிப்பிட்ட வாடகையின் பேரில் கொடுத்து உதவப்படுகின்றன. ஒவ்வொரு உறுப்பினரும் குறைந்த பட்ச வேலை நாட்கள் கண்டிப்பாக வேலை செய்ய வேண்டும், பிரிக்கப்படக் கூடிய வருமானத்தில் 60 % வேலைக்குக் கூலி கொடுக்க உபயோகிக்கப்படுகிறது, 40 % அவர்களுடைய நிலங்களின் விலைக்கு ஈடு செய்ய உபயோகிக்கப்படுகிறது.

இரண்டாவது ரகத்தில் நிலம் (உறுப்பினர்களின் வீட்டு நிலங்களைத் தவிர) கூட்டுடைமை ஆக்கப்படுகிறது; பசுக்களுக்குப் பொதுவான பண்ணை இருக்கிறது. விவசாய இயந்திரங்கள், டிராக்டர்கள், உழவு மாடுகள் கூட்டுடைமையாக இருக்கின்றன. பிரிக்கப்படக் கூடிய நிதியில் 70 % வேலைக்குக் கூலி கொடுப்பதற்கும் 30 % உறுப்பினர்கள் கொடுத்த நிலங்களின் விலையை ஈடு செய்வதற்கும் உபயோகிக்கப்படுகிறது.

மூன்றாவது ரகத்தில் அடிப்படையான உற்பத்திச் சாதனங்கள் முழுமையாகக் கூட்







படிப்பகம்

www.padippakam.com

டுடைமை ஆக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு விவசாயியும் 0.5 ஹெக்டேர் வரை சொந்த நிலமாக வைத்துக்கொள்ளலாம்; அவருக்கு அனுமதிக்கப்படுகின்ற நிலத்தின் அளவு கூட்டுறவு சங்கத்தின் பேரவைக் கூட்டத்தில் முடிவு செய்யப்படுகிறது. பணம் மற்றும் பண்ட வருமானங்களில் 80 % வேலை நாட்களின் அடிப்படையிலும் 20% கூட்டுறவு சங்கத்துக்கு ஒரு உறுப்பினர் கொடுத்திருக்கின்ற நிலத்தின் அளவைப் பொறுத்தும் பகிர்ந்தளிக்கப்படுகின்றன.

**செக்கோஸ்லோவாக்கியாவிலும்** பல்கேரியாவைப் போல முதலாளித்துவ அமைப்பில் கூட கூட்டுறவுகள் பரவலாக ஏற்பட்டிருந்தன. 1945இல் நாடு விடுவிக்கப்பட்ட பொழுது, விவசாயிகளில் சுமார் 80 % ஏற்கெனவே கூட்டுறவுகளில் இருந்தார்கள். பிந்திய வருடங்களில், மக்கள் ஜனநாயகத்தின் முதல் கட்டத்தில் கூட கூட்டுறவுகள் இன்னும் அதிகரித்தன. நிலச் சீர்திருத்தத்துக்குப் பிறகு, பழைய கூட்டுறவுகள் (கடனுதவி மற்றும் நுகர்வுக் கூட்டுறவுகளைத் தவிர) விவசாயப் பண்ணைகளுடன் இணைந்து விவசாயக் கூட்டுறவுகளை உருவாக்கின. 1949 பிப்ரவரியில் நிறைவேற்றப்பட்ட ஐக்கிய விவசாயக் கூட்டுறவுகளின் சட்டம் அவற்றின் அமைப்பு முறைகளை வகுத்துக் கொடுத்தது. செக்கோஸ்லொவாக்கியாவில் விவசாயக் கூட்டுறவுகளில் நான்கு ரகங்கள் இருக்கின்றன.

ஒவ்வொரு சோஷலிஸ்ட் நாட்டிலும் விவசாயக் கூட்டுறவு முறை அதன் பிரத்யேகமான கூறுகளைக் கொண்டிருக்கிறது. அவற்றை விரிவாக எழுதுவது அவசியமல்ல. எனினும் அவை பல்வகைப்பட்ட தன்மையைக் கொண்டிருந்தாலும் எல்லா சோஷலிஸ்ட் நாடுகளிலும் சோஷலிஸ்ட் உற்பத்திக் கூட்டுறவுகள், கூட்டுப் பண்ணை முறை சோவியத் யூனியனில் அமுலாக்கப்பட்ட பொழுது முதலில் பின்பற்றப்பட்ட கோட்பாடுகளின் அடிப்படையில்தான் அமைக்கப்பட்டிருக்கின்றன. விவசாயிகள் உறுப்பினராகச் சேருதல், அவர்கள் கூட்டுறவின் குறிப்பிட்ட வடிவத்தைத் தேர்வு செய்தல் ஆகிய இரண்டிலும் விருப்பபூர்வமான அடிப்படையில் சோஷலிஸ்ட் உற்பத்திக் கூட்டுறவுகள் அமைக்கப்பட்டன. கூட்டு உழைப்பில் கட்டாயமாகப் பங்கெடுத்தல், பிரிக்கப்படக் கூடிய நிதியை செய்த வேலையின் அளவுக்கும் தன்மைக்கும் தகுந்தவாறு பகிர்ந்தளித்தல், விவசாயிகள் (சோவியத் யூனியனையும் மங்கோலியாவையும் தவிர) நிலத்தில் தனியுடைமை வைத்திருத்தல் ஆகிய அமைப்புக் கோட்பாடுகள் பொதுவாகக் கடைப்பிடிக்கப்பட்டன.

நிலம் நாட்டுடைமை ஆக்கப்படாத சோஷலிஸ்ட் நாடுகளில் உற்பத்திக் கூட்டுறவின் சில ரகங்களைச் சேர்ந்த உறுப்பினர்களுக்கு உழைப்புக்கு ஊதியத்துடன் நிலம் மற்றும் உழவுக் கருவிகளை அளித்ததற்கு ஈட்டுப் பணமும் அளிக்கப்பட்டது. இதன் மூலம் உழைக்கும் விவசாயிகளை, குறிப்பாக நடுத்





9*

படிப்பகம்

www.padippakam.com

தர விவசாயிகளை உற்பத்திக் கூட்டுறவுகளில் சுலபமாக சேர்க்க முடிந்தது.

கிராமப் பகுதிகளில் பழைய, முதலாளித்துவ உற்பத்தி உறவுகளின் இடத்தில் புதிய, சோஷலிஸ்ட் உற்பத்தி உறவுகள் ஏற்படுகின்ற பொழுது கூர்மையான வர்க்கப் போராட்டம் தவறாமல் நடைபெறுகிறது. அழிந்து கொண்டிருக்கின்ற சுரண்டல் வர்க்கம் என்னும் முறையில் குலாக்குகள் தம்முடைய நிலைகளைத் தாமாகவே கைவிடுவதில்லை; விவசாயத்தை சோஷலிஸ்ட் முறையில் மாற்றியமைப்பதைத் தடுப்பதற்கு அவர்கள் எல்லாவற்றையும் செய்கிறார்கள். சோவியத் யூனியனைப் போலவே மற்ற சோஷலிஸ்ட் நாடுகளிலும் உற்பத்திக் கூட்டுறவுகள் என்னும் வெகுஜன இயக்கத்தின் அடிப்படையில் குலாக்குகள் என்னும் வர்க்கம் ஒழிக்கப்பட்டது. எனினும் மக்கள் ஜனநாயக நாடுகளில் விவசாயத்தில் சோஷலிஸ்ட் மாற்றம் வித்தியாசமான வரலாற்று நிலைமைகளில் நிறைவேற்றப்பட்டது; எனவே அந்த நாடுகளின் கிராமப் பகுதிகளில் வர்க்கப் போராட்டம் நடைபெற்ற வடிவங்களும் முறைகளும் சோவியத் யூனியனில் குலாக்குகளுக்கு எதிராக நடைபெற்ற போராட்டத்திலிருந்து வேறுபட்டிருந்தன.

சோவியத் யூனியன் இருந்ததும் சோஷலிச முகாமின் பொருளாதார மற்றும் இராணுவ பலமும் சோஷலிசப் பாதையை மேற்கொண்ட நாடுகளில் அரசு அதிகாரிகளின் நடவடிக்கைகளைக் குலாக்குகள் மிகவும் தீவிரமாக எதிர்க்க முடியாமற் செய்தன. எனினும் சோஷலிஸ்ட் அரசுகள் மக்களுக்கும் அரசுக்கும் எதிராகக் குற்றங்கள் செய்த குலாக்குகள் மீது கடும் நடவடிக்கைகள் எடுத்தன. மொத்தத்தில் இந்த நாடுகளில் பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரம் விவசாய வர்க்கத்தினரின் முற்போக்கான, மிகவும் ஏழையாக இருந்த பகுதியினரைச் சார்ந்திருந்தபடியால், குலாக்குகள் அரசியல் ரீதியில் விவசாய வர்க்கத்தினரிடமிருந்து தனிமைப்பட்டிருந்தபடியால் குலாக்குகளின் எதிர்ப்பு நசுக்கப்பட்டது. குலாக்குகளின் நிலங்களின் மீது படிப்படியாக அதிகரிக்கின்ற வருமான வரி விதிக்கப்பட்டது; அவர்கள் நிலத்தை வாங்குவதும் விற்பனை செய்வதும், கூலியுழைப்பைப் பயன்படுத்துவதும் தடை செய்யப்பட்டது; நிலத்தைக் குத்தகைக்கு விடுவதும் முழுமையாக அல்லது பகுதியளவுக்குத் தடை செய்யப்பட்டது—இந்த நடவடிக்கைகளின் மூலம் முதலாளித்துவ விவசாய வளர்ச்சி தடுக்கப்பட்டது. வர்க்கம் என்ற முறையில் குலாக்குகளை அமைதியாக ஒழிக்க முடிந்தது சோஷலிஸ்ட் நாடுகளில் விவசாயக் கூட்டுறவுகளை அமைத்ததில் மற்றுமொரு பிரத்யேகமான அம்சமாகும்.

பாட்டாளி வர்க்க அரசு கூட்டுப் பண்ணைகளுக்குக் கொடுத்த உதவியும் தன்மை மற்றும் வடிவங்களில் வேறுபட்டிருந்தது.

ஆகவே, பாட்டாளி வர்க்கத்திடம் அரசியல் தலைமை இருக்கின்ற பொழுது, அடிப்படை



படிப்பகம்

www.padippakam.com

யான உற்பத்திச் சாதனங்கள் சோஷலிஸ்ட் உடைமையாக இருக்கும் பொழுது கூட்டுறவு சோஷலிசத்தை ஒத்திருக்கிறது என்பதை வரலாற்று அனுபவம் நிரூபிக்கிறது. இது மார்க்சிய-லெனினியத்தின் சர்வப்பொது உண்மை. ஒவ்வொரு சோஷலிஸ்ட் நாடும் தனக்குரிய பிரத்யேகமான கூறுகளைக் கொண்டிருந்தாலும் எல்லா சோஷலிஸ்ட் நாடுகளின் மொத்த அனுபவம் இதை நிரூபிக்கிறது. மக்கள் ஜனநாயக நாடுகளில் விவசாயிகளை உற்பத்திக் கூட்டுறவுகளில் அமைத்தல் சோஷலிசத்துக்கு மாறுவதற்கு இது ஒன்றே வழி, இது புறநிலையான விதி என்பதை எடுத்துக்காட்டுகிறது.

வளர்முக நாடுகளைச் சேர்ந்த மக்களினங்கள் முதலாளித்துவம் அல்லாத பாதையில் வளர்ச்சியடைவதற்கு வாய்ப்புக்களைத் தேடுகிறார்கள். இந்த நாடுகளில் கூட்டுறவுகள் பெரிய பிரச்சினைகளைத் தீர்க்க முடியும். அங்கே சிறு விவசாய நிலவுடைமைகள் மிகப் பேரளவில் இருக்கின்றன. உதாரணமாக, ஆசிய நாடுகளில் 9,70,00,000 விவசாய நிலவுடைமைகள் இருக்கின்றன; இவற்றில் 4,50,00,000க்கு அதிகம் அல்லது 46.4 % ஒரு ஹெக்டேருக்கும் குறைவான சிறு நிலப் பகுதிகளாகும். மேலும் ஒன்று அல்லது இரண்டு ஹெக்டேர் நிலப் பகுதிகளைக் கொண்ட 20.7 மில்லியன் பண்ணைகள் இருக்கின்றன; இவை மொத்த எண்ணிக்கையில் 21.4 சதவிகிதமாகும்.



ஜனநாயக கூட்டுறவு முறை வளர்முக நாடுகளில் விவசாயத் துறையில் உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சிக்கு உதவுகிறது. அங்கே கூட்டுறவு இயக்க வளர்ச்சியில் முரண்பாடுகள் இருந்தபோதிலும், பெருந்திரளான விவசாயிகள் அந்த இயக்கத்தில் பங்கெடுத்தல் அவற்றின் சுயேச்சையான நடவடிக்கைக்கு வாய்ப்பை அதிகரிக்கிறது, தங்களுடைய பொது நலன்களைப் பற்றிய உணர்வையும் சுரண்டுகின்ற வர்க்கங்களை எதிர்த்து நடைபெறுகின்ற போராட்டத்தில் அந்த நலன்களைக் கூட்டாகப் பாதுகாக்க வேண்டிய அவசியத்தையும் அதிகப்படுத்துகிறது. இத்தகைய கூட்டுறவுகள் விவசாயத் துறையில் ஏகபோக மூலதனத்தின் ஆதிக்கத்துக்கு எதிராக ஜனநாயக மாற்றுவழியை முன்வைக்கின்றன.

வளர்முக நாடுகளில் ஆண்டுதோறும் கூட்டுறவுகளின் எண்ணிக்கை வளர்ச்சியடைந்து கொண்டிருக்கிறது, கூட்டுறவு இயக்கத்தின் செல்வாக்கு மேன்மேலும் அதிகரித்துக் கொண்டிருக்கிறது. இதற்கு உதாரணமாக இந்தியாவில் கூட்டுறவு இயக்கத்தின் வளர்ச்சியைக் குறிப்பிடலாம். இந்தியாவில் பயனுள்ள வேலை செய்கின்ற மக்களில் 70 % விவசாயத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். இந்தியா சுதந்திரமடைந்த பிறகு கூட்டுறவு இயக்கம் தீவிரமாக வளர்ச்சியடைந்திருப்பது உண்மையே. இருபது ஆண்டுகளில் (1951 – 1970) கூட்டுறவு அமைப்புக்களின் எண்ணிக்கை



படிப்பகம்

www.padippakam.com

1,80,000இலிருந்து 3,17,000ஆக உயர்ந்திருக்கிறது, பங்குதாரர்களின் (உறுப்பினர்களின்) எண்ணிக்கை 13.7 மில்லியனிலிருந்து 62 மில்லியனாக, அதாவது 4.5 மடங்கு அதிகரித்திருக்கிறது. கூட்டுறவு இயக்கம் மேலும் வளர்ச்சியடைந்து 1975இல் கூட்டுறவுகளின் எண்ணிக்கை 3,30,000ஆக இருந்தது, பங்குதாரர்களின் எண்ணிக்கை 73.4 மில்லியனாக அதிகரித்திருந்தது.

ஆசியாவிலுள்ள கூட்டுறவு அமைப்புக்களில் மொத்தம் 210 மில்லியன்களுக்கும் அதிகமான உறுப்பினர்கள் இருக்கிறார்கள். ஆப்பிரிக்காவில் 4.5 மில்லியன் உறுப்பினர்கள் இருக்கிறார்கள். சர்வதேசக் கூட்டுறவு ஸ்தாபனத்தில் ஆசிய மற்றும் ஆப்பிரிக்கக் கூட்டுறவுகளின் பிரதிநிதிகள் அநேகமாகப் பாதி இடங்களைப் பெற்றிருக்கிறார்கள்.

வளர்முக நாடுகளில் பின்வரும் விவசாயக் கூட்டுறவுச் சங்கங்கள் பரவலாக இருக்கின்றன: விவசாய விளைபொருள்களின் விற்பனைக்கும் சில சமயங்களில் அவற்றைப் பதப்படுத்துவதற்கும் உதவி செய்கின்ற விற்பனை சங்கங்கள்; கொள்முதல் மற்றும் சப்ளை கூட்டுறவுச் சங்கங்கள்; கடனுதவிச் சங்கங்கள் (பெரும்பான்மையான உற்பத்தியாளர்கள் நிதியளவில் பலவீனமாக இருக்கின்ற நாடுகளில் இந்த வடிவம் விசேஷமாகக் காணப்படுகிறது); இயந்திரங்களைக் கூட்டாக உபயோகிப்பதற்கான கூட்டுறவுச் சங்கங்கள். நாம் கூட்டுறவுகளின் ஆதார வடிவங்களை மேலே



குறிப்பிட்டோம். முன்னர் காலனிகளாகவும் அரைக் காலனிகளாகவும் இருந்த நாடுகளில் இவற்றைத் தவிர இன்னும் சில கூட்டுறவு ரகங்களும் வடிவங்களும் சில நாடுகளில் அல்லது ஒரேயொரு நாட்டில் மட்டும் காணப்படுகின்றன. சேவைக் கூட்டுறவுகள், நிலத்தைக் கூட்டாகக் குத்தகைக்கு எடுத்துப் பயிரிடுகின்ற சங்கங்கள், நீர்ப்பாசன சங்கங்கள், பரஸ்பர இன்ஷூரன்ஸ் சங்கங்கள் மற்றும் இதரவற்றை உதாரணங்களாகக் கூறலாம்.

கூட்டு வாழ்க்கையின் சிறப்பான எச்சங்கள் இன்னும் நிலவுகின்ற நாடுகளில் விவசாயத்தில் சமூக உறவுகளைத் தீவிரமாக மாற்றியமைப்பதற்கு ஜனநாயக கூட்டுறவுகள் அதிகமான வாய்ப்புகளைத் தோற்றுவிக்கின்றன. இந்தியாவின் பிரதமராக இருந்த ஜவகர்லால் நேரு கூட்டுறவு இயக்கத்தின் பாத்திரத்தைப் பின்வருமாறு மதிப்பிட்டார்: ''நான் கூட்டுறவுக்கு மிகவும் அதிகமான முக்கியத்துவத்தைத் தருகிறேன்.பல காரணங்களினால் அது முக்கியத்துவம் பெற்றிருக்கிறது. இந்தியாவின் கிராமப் பகுதிகளில் விவசாயிகளின் நிலங்கள் மிகவும் சிறியவை; அவர்கள் தமக்கிடையில் ஒத்துழைத்து, தம்முடைய துண்டு நிலங்களை ஒன்று சேர்த்தாலொழிய அவர்கள் உயர்ந்த தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதில், பிரச்சினைகளை விஞ்ஞான ரீதியாக அணுகுவதில் முன்னேற்றமடையக் கூடும் என்று நாம் எதிர்பார்க்க முடியாது. அவர்களிடம் பணவசதி



படிப்பகம்

www.padippakam.com

இல்லை. அவர்கள் நவீன முறைகளைப் பயன்படுத்தி நன்மை அடைவதற்கு ஒரே வழி கூட்டுறவுகளை அமைப்பதும் கூட்டாக உழைப்பதுமே''.*

லெனின் தன்னுடைய கூட்டுறவுத் திட்டத்தை **கூட்டுறவு குறித்து** என்னும் கட்டுரையில் முழு வடிவத்தில் விரித்துரைத்தார். அத்திட்டமும் சோவியத் யூனியனில் அதன் நடைமுறையும் சர்வதேச முக்கியத்துவத்தைக் கொண்டிருக்கின்றன. லெனினுடைய கூட்டுறவுத் திட்டத்தின் அடிப்படையில் சோவியத் விவசாயி வர்க்கத்தைப் புதிய பாதைக்கு, சோஷலிசப் பாதைக்கு மாற்றியதும் கூட்டுறவின் எளிமையான, உற்பத்தி அல்லாத வடிவங்கள் மற்றும் உயர் வடிவங்கள் (உற்பத்திக் கூட்டுறவுகள், அதாவது கூட்டுப் பண்ணைகள்) உள்ளிட்ட எல்லா ரகங்களையும் உபயோகித்து வளர்ச்சியடைதலும் சோவியத் யூனியனுக்கு மட்டும் உரியதல்ல, அது உலக முக்கியத்துவத்தைக் கொண்டிருக்கிறது.

உலகப் புரட்சிகர நிகழ்வுப் போக்கில் முன்னெப்போதுமில்லாத அளவுக்குப் பரந்த, கூர்மையான சித்தாந்தப் போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற இன்றைய சூழலில் விவசாயப் பிரச்சினையைத் தீர்ப்பதில் சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் அனுபவத்தின் சர்வதேச முக்கியத்துவத்தைக்

---

* Jawaharlal Nehru, *On Co-operation*, New Delhi, 1971, p. 95.



குறைத்துக் காட்டுவதற்கு, சோஷலிசப் பாதையைப் பின்பற்றுகின்ற நாடுகள் மற்றும் மக்களினங்கள் மீது அதன் தாக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கு பூர்ஷ்வா சித்தாந்திகள் எல்லாவற்றையும் செய்கிறார்கள். சோவியத் யூனியனில் கூட்டுறவு அமுலாக்கப்பட்ட நடைமுறை மற்ற நாடுகளுக்குப் பொருந்தாது என்று நிரூபிப்பதற்கு அவர்கள் பாடுபடுகிறார்கள்; ''ருஷ்யாவின் பிரத்யேகத் தன்மை'', ''குறுகிய அம்சம்'', ''விசேஷத் தன்மை'' போன்றவை அதன் குணாம்சமாக இருக்கின்றன என்று அவர்கள் திரித்துக் கூறுகிறார்கள். விவசாய மற்றும் நிலப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கும் சிறு பண்ட விவசாயப் பொருளாதாரத்தை சோஷலிஸ்ட் ரீதியில் மாற்றுவதற்கும் லெனின் வகுத்தளித்த முறைகளை ''அதிகமான மனிதாபிமானத்தைக்'' கொண்டிருப்பதாக வர்ணிக்கப்படுகின்ற, உதாரணமாக ''ஜனநாயக சோஷலிசம்'' என்று சொல்லப்படுகின்ற முறைகளுக்கு எதிராக அவர்கள் வைக்கிறார்கள். இவை விவசாயக் கருவிகளை சமூக உடைமை ஆக்காமல், கூட்டுப் பண்ணைகளை ஏற்படுத்தாமல், கிராமப் பகுதிகளில் முதலாளி வர்க்கத்தை ஒழிக்காமல் செயல்படுகின்ற ''கூட்டுறவின் மிதவாத வடிவங்களைக்'' கொண்டிருக்கின்றன.

சிறு பண்ட விவசாயப் பொருளாதாரத்தை வளர்ப்பதற்கு ''மூன்றாவது வழியை'' உருவாக்குவதற்கு செய்யப்பட்ட முயற்சிகள் வீண் — ஏனென்றால் அந்த முயற்சிகள்



படிப்பகம்

www.padippakam.com

குட்டி பூர்ஷ்வா உணர்ச்சிகளை வெளியிடு கின்றன, உலகம் முழுவதிலும் வரலாற்று ரீதியில் அழியும்படி விதிக்கப்பட்டுள்ள முதலா ளித்துவ வளர்ச்சி முறைகளை கிராமப் பகுதிகளில் நியாயப்படுத்துவதற்கு முயல் கின்றன — என்பதை சோவியத் யூனியன் மற்றும் இதர சோஷலிஸ்ட் நாடுகளின் வரலாற்று அனுபவம் எடுத்துக் காட்டுகிறது. விவசாய உற்பத்தியின் அடிப்படையான சாதனங்களை சமூக உடைமையாக்குதல் விவசாயி வர்க்கத்தை சோஷலிஸ்ட் கூட் டுறவுகளில் அமைத்தலில் முக்கியமான காரணி என்பதை மேற்கூறிய அனுபவம் மிகவும் தெளிவாக நிரூபிக்கிறது. இல்லையென்றால் விவசாயக் கூட்டுறவுகள் விவசாயி வர்க் கத்தைப் புதிய வாழ்க்கைக்கு மாற்ற முடியாது, சோஷலிசத்தின் வெற்றியை நோக்கி அதை இட்டுச் செல்ல முடியாது. விவசாய நிலவுடை மைகளை சோஷலிஸ்ட் கூட்டுறவுகளாக அமைத்தல் கிராமப் பகுதிகளில் பொருளாதார மாற்றத்தை ஏற்படுத்துவதுடன் மொத்த வாழ்க்கைச் சுருதியையும் சிறு உடைமை யாளர் மனோபாவத்தையும் மாற்றுகிறது என்பதை சோவியத் அனுபவம் எடுத்துக் காட்டுகிறது.

லெனினுடைய கூட்டுறவுத் திட்டம் ஒப் பீட்டளவில் உற்பத்தி சக்திகளின் உயர்வான அல்லது நடுத்தர வளர்ச்சியைக் கொண்ட நாடுகள் மற்றும் பிரதேசங்கள், பொரு ளாதார வளர்ச்சியின் கீழ் நிலையில் இருக் கின்ற நாடுகள் ஆகிய இரண்டுக்குமே உயிராற்றலைக் கொண்டிருப்பதை சோஷ லிஸ்ட் கூட்டுறவில் சோவியத் அனுபவமும் உலக சோஷலிஸ்ட் அமைப்பு முழுமையிலும் அதன் உபயோகமும் எடுத்துக்காட்டியிருக் கின்றன. சிறு விவசாயப் பொருளாதாரத்தை சோஷலிஸ்ட் கூட்டுறவுகளில் ஒன்று சேர்த்தல் சோஷலிஸ்ட் பாதையைப் பின்பற்றுகின்ற எல்லா நாடுகளுக்கும் பொதுவான அம்சம் என்பதை சோவியத் யூனியன் மற்றும் இதர சோஷலிஸ்ட் நாடுகளின் வரலாற்று அனுபவம் எடுத்துக்காட்டுகிறது.



படிப்பகம்

www.padippakam.com

வாசக நேயர்களுக்கு

இந்தப் புத்தகத்தைப் பற்றியும் இதன் தயாரிப்பைப் பற்றியும் தங்கள் கருத்தை அறியவும், அடுத்துவரும் வெளியீடுகள் சம்பந்தமாகத் தங்கள் யோசனைகளை வரவேற்கவும் **முன்னேற்றப் பதிப்பகம்** மகிழ்வுடன் காத்திருக்கிறது.

கடிதங்களைத் தயை செய்து "Progress Publishers, 17, Zubovsky Boulevard, Moscow, USSR" என்ற முகவரிக்கு அனுப்புங்கள்.


**விற்பனையாளர்கள்**

**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்**

**தலைமை அலுவலகம்**

41-பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட
சென்னை — 600098

**ஷோ-ரூம்**

136, அண்ணாசாலை, சென்னை — 600002

**கிளைகள்**

80, மேலக் கோபுர வீதி, மதுரை — 625001
3-4, நேரு ஸ்டேடியம், கோயம்புத்தூர் — 641018
42 / 7, சிங்காரத் தோப்பு, திருச்சிராப்பள்ளி — 620008
செர்ரி ரோடு, சேலம் — 636001

**விற்பனை நிலையங்கள்**

3-22-75-D, மதுரை சாலை;
திருநெல்வேலி ஜங்ஷன் — 627001
66, கீழராஜ வீதி, தஞ்சாவூர்
சேரிங் கிராஸ், உதகமண்டலம் — 643001
நகராட்சி அலுவலகம் எதிரில், திண்டுக்கல் 624001

www.padippakam.com

முன்னேற்றப் பதிப்பகம் மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனின் ஆகியோரது கருத்துக் கருவூலங்களை வெளியிடுவதுடன் மார்க்சிய-லெனினியத்தைப் பயிலுவோருக்கு உதவுகின்ற சிறு பிரசுரங்களையும் வெளியிட்டுவருகிறது. ஒவ்வொரு பிரசுரமும் மார்க்சிய-லெனினியத்தின் தனித்தனி பிரச்சினைகளை விளக்குகின்ற நோக்கத்துடன் எழுதப்பட்டிருக்கிறது.

இப்பிரசுரத்தின் ஆசிரியரான செர்கேய் செமாயெவ் கூட்டுறவுத் துறையில் பிரபலமான நிபுணர். அவர் இப்பிரசுரத்தில் லெனின் எழுதிய "கூட்டுறவு குறித்து" என்னும் கட்டுரையின் சாராம்சத்தையும் விவசாய வர்க்கம் புதிய வாழ்க்கைக்கு முன்னேறுவதற்கான பாதைகளைக் காட்டுவதில் அதன் முக்கியத்துவத்தையும் விளக்கிக்காட்டுகிறார். சோஷலிசக் கட்டுமானத்தில் கூட்டுறவின் பல்வேறு வடிவங்களை உபயோகிப்பதில் [illegible]க் அனுபவத்தையும் அதன் சர்வதேச முக்கியத்துவத்தையும் எடுத்துக் காட்டியிருக்கிறார்.

படிப்பகம்